கல்கி



KALKI 28.10.1962 30காசு

சுபகிருது, ஐப்பசி 12உ

கல்கி

அக்டோபர் 28, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


புகைபிடிக்கும் இங்கிதம்
தீப் பொறியின் திக்குவிஜயம்!
சிகரெட்டைப் பற்றவைக்கையில் —அதுவும் வெளியிலோ அல்லது காற்றடிக்கையிலோ—எவர் மீதும் குறிவைப்பதுபோலத் தீக்குச்சியைக் கிழிப்பது சரியல்ல. தவறிப் போய் தீப்பொறி தெறிக்குமேயானால் பாவம். அருகிலிருக்கும் பெண்மணியின் ஆடைக்கு வந்தது ஆபத்து.
உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது
பனாமா
Panama
20
CIGARETTES
இழுக்க இழுக்க இன்பம்— இறுதிவரை
விசேஷக் கவனம் செய்வோர்:
கோல்டன் டொபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்., பம்பாய்-56.
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.
Greens' Advtg.
GT. 611 TAM



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 13

வருக வருகவே!

நரகாசுரன் தனது ஆணவ இருள் நீங்கி, அன்பின் ஒளியைக் கண்டு, உலக இன்பத்துக்காக வரம் கோரிய நன்னாள் தீபாவளி. இன்றும் உலகை நரகமாக்கி வரும் காரியத்தைத்தான் செய்து வருகின்றன வல்லரசுகள். ஆனால் இதற்கு ஆணவம் என்ற அரக்கத்தனம் காரணம் அல்ல. தன்னைவிட எதிராளி பெரியவனோ என்ற அச்சத்தின் காரணமாகவே இரு வல்லரசுகளும் அசுர ஆயுதங்களை வெடித்து வருகின்றன.

எங்கும் கவிந்துள்ள இந்த இருளிடையே ராஜாஜி அவர்கள் அன்பைத் தைலமாகவும், அறிவைத் திரியாகவும் இட்டு, அபய தீபத்தைத் தாங்கி நிற்கிறார். அதன் ஒளிக்கதிர் கனந்தகாரமான அச்ச இருளைத் துளைத்துக் கொண்டு சுடர் வீசுகிறது.

'ஆயுத சோதனைகளை அறவே நிறுத்திவிட வேண்டும்' என்று ராஜாஜி கூறும் யோசனையை உடனடியாக ஏற்க எந்த வல்லரசுக்கும் திரமில்லை. பூமி மட்டத்துக்கு மேல் நடக்கும் அணு ஆயுத சோதனைகளை நிறுத்த வேண்டுமென்பதை அமெரிக்கா, ருஷ்யா இரண்டும் ஒப்புக் கொள்கின்றன. பூமிக்கு அடியில் நடைபெறும் சோதனைகள் குறித்துத்தான் இணக்கம் இல்லை. தனது நாட்டில் அந்நியக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்க ருஷ்யா விரும்பவில்லை. இதைப் பற்றி, தான் முடிவெடுக்கும் வரையில் அமெரிக்கா பூமிக்கடியே நடத்தும் ஆயுத சோதனையைத் தாற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்று அது கூறுகிறது. பாதாளச் சோதனைகளை நிறுத்துவது தனக்கென்றுள்ள விசேஷ பலத்தை இழப்பதற்கொப்பாகும் என அமெரிக்கா எண்ணுகிறது.

ஆயினும் இதைக் கண்டு ராஜாஜி மனம் தளரவில்லை. தமது தள்ளாத பருவத்தில் மேனாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ள அந்த மகான், "இந்தப் பயணம் முடிந்த பின்பும் நான் இவ்விஷயத்தில் தீவிரமாக முயன்றபடி இருப்பேன்" என்று கூறி அவலமாக நிற்கும் மாந்தர் குலத்துக்கு ஆதரவும், ஆறுதலும் அளித்திருக்கிறார்.

"நீங்கள் கூறுவதிலுள்ள நியாயத்தை மக்கள் உடனே உணரத் தவறிய பல சந்தர்ப்பங்களை உங்களுடைய நீண்ட நெடும் அநுபவத்தில் கண்டதில்லையா? ஆனால் பிறகு அது அவர்கள் மனத்தில் ஊறித் தோய்ந்து நற்பலன்களை விளைவித்ததைக் கண்டதில்லையா?" என்று ராஜாஜியை அமெரிக்க அதிகாரி ஒருவர் வினவினாராம். நாம் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைப் பலமுறை கண்ணுக்கு மெய்யாகக் கண்டிருக்கிறோம்.

இன்றில்லாவிட்டாலும், இன்னும் சிறிது காலத்திலேனும், வல்லரசுகள் ராஜாஜியின் புத்திமதியை ஏற்று நடக்குமென நம்புகிறோம். அந்த நம்பிக்கை அவருக்கும் உள்ளபடியால்தான் 1963-ம் ஆண்டுக்குள் அணு ஆயுத சோதனை நிறுத்தம் ஏற்படக் கூடும் என்று லண்டனில் கூறியிருக்கிறார். அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, ருஷ்ய மந்திரி குரோமிகோ, பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் முதலியவர்களுடன் உரையாடியபின் இவ்வாறு அவர் கூறுவது நமக்குத் தெம்பூட்டுகிறது. இந்த நம்பிக்கையை நமக்கு ஊட்டி, இம்மாதம் 26-ந் தேதி தமிழகம் திரும்பும் தவப் புதல்வரை வணங்கி வரவேற்கிறோம்.

அஹிம்சா தர்மத்தை முன்பு அயல் நாடுகளுக்குப் பரப்பினான் அசோக சக்கரவர்த்தி. விவேகதீபத்தை விஞ்ஞான உலகில் ஏற்றி வைத்தார் விவேகானந்தர். இன்று அஹிம்சை, விவேகம் என்ற இரண்டு தத்துவங்களின் தூதராகவே அமெரிக்கா சென்று திரும்பும் ராஜாஜியை அவ்விருவரோடு வைத்து மதித்துப் பணிந்து அவருக்கு நல்வரவு கூறுகிறோம்.

பிரதமர் பேசவில்லை!


பிரதமர் நேருஜியின் இலங்கை விஜயம் பேஷாக முடிந்து விட்டது என்று அரசாங்கத்தினர் அகமகிழ்ந்து போய் விட்டார்கள். ஆனால் இதனால் உபயோகமாகக் கிடைத்த விளைவு ஏதேனும் உண்டோ என்று பார்த்தால் ஏமாற்றமே அடைகிறோம். இலங்கையில் இன்னலுறும் தமிழ் வம்சாவளியினர் நேருஜியின் விஜயத்தை ஆவலாக எதிர்பார்த்திருந்தனர். அவர்களுடைய பிரச்னைகளுக்குத் தீர்வுகாண இந்தியப் பிரதமரின் விஜயம் உதவக்கூடும் என்று எண்ணினார்கள். ஆனால் இந்த விஷயமாக நேருஜி வாயைத் திறக்க வேண்டுமே! ஊ...ஹூம்!

பூகோளத்தில் ஏதேதோ மூலையில் உள்ள டிம்பக்டூ, லாப்லாந்து முதலிய நாடுகளின் விவகாரங்களைப் பற்றித் தமது தலையில் அட்சதை போட்டுக் கொண்டு சொன்மாரி பொழியும் நேருஜி ஈழத் தமிழர் நிலை குறித்து மட்டும் மௌன விரதம் அநுஷ்டித்திருக்கிறார்.

அரசாங்க ரீதியிலேயே அவருக்கு இலங்கையில் வரவேற்பு அளிக்கப்பட்டாலும் தனி மனிதர்கள் யாத்திரை செய்வது போலவே சென்று திரும்பிவிட்டார் பிரதமரவர்கள். ஆயுர்வேதத்தைப் பற்றிய நேருஜியின் கருத்துக்கள், இந்திய — சீன எல்லை ஊடுருவல்களின் சாங்கோபாங்கமான வரலாறு, சிங்கள மக்களின் விருந்தோம்பல், ஸ்ரீமதி பண்டார நாயகாவின் குடும்பப் படங்கள், இந்திய - இலங்கை கலாசார "குரு - சிஷ்ய" உறவு ஆகியன குறித்த செய்திகளையும் படங்களையும் படிப்பதற்கும் பார்ப்பதற்கும் சுவையாகத்தான் இருக்கின்றன.


ஆனால் இலங்கையில் வாழும் பத்து லட்சம் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலைமை இம்மாதிரிப் பகட்டுப் பேச்சுக்களாலும், காட்சிகளாலும் சோபிதம் அடையாது. பொதுவாக எந்த நாட்டுச் சட்டப்படி பார்த்தாலும் இலங்கையின் பிரஜைகளாக மதிக்கப்பட வேண்டிய லட்சோப லட்சம் தமிழர்களுக்கு அந்த உரிமையைப் பறித்துள்ள ஓர் அரசிடம் நம் பிரதமர் இவ்விஷயம் பற்றி விவாதிக்காதது மிகவும் துர்ப்பாக்கியமாகும்.

ஓர் அரசாங்கத்தின் உள்நாட்டு விவகாரம் எது, வெளி நாடுகளைப் பாதிக்கும் பிரச்னை எது என்றெல்லாம் பாகுபாடு உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆயினும் ஈழத் தமிழர் நிலையை முற்றிலும் இலங்கையின் உள்நாட்டு விஷயம் என்று கூறிப் பாரத சர்க்கார் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. அரசாங்கரீதியில் நேருஜி இவ் விஷயமாக விவாதிக்க இயலாவிட்டாலும் தமது பிரத்தியேகமான மதிப்பையும் செல்வாக்கையும் பயன்படுத்தி இலங்கை அரசிடம் ஆலோசனை கூறும் முறையிலாவது பேசியிருந்தால் ஏதேனும் பலன் கிடைத்திருக்கும்.




நியூயார்க்கில் ஐ. நா. சபைத் தலைவர் ஜபருல்லா கான், பி. என். சக்கரவர்த்தி ஆகியவர்களோடு காந்தி சமாதான கழகத் தூதுகோஷ்டியினர். ராஜாஜியை அன்புடன் அணைத்துக் கொண்டிருக்கிறார் ஜபருல்லா கான். ராஜாஜி தமக்குப் பிரியமான 'கல்கி'யைக் கையிலேந்தி யிருக்கிறார்.


'பிற நாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் படும் அவதிகளைக் கண்டு தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் பச்சாத்தாபப்படுகிறார்கள். இந்தியாவின் பிற பகுதியினருக்கோ, மத்திய சர்க்காருக்கோ இதில் அக்கறையில்லை' என்று கூறும் எதிர்க்கட்சிகளுக்கு நேருஜி அன்று கோல் அளித்து விட்டார்.



நம்பினோர் கெடுவதில்லை
நான்குமறைத் தீர்ப்பு —பாரதியார்
பரஸ்பர நம்பிக்கை
அமெரிக்கா
ஐரோப்பா

ஊர் வம்பு


குஜராத்தி
ஹிந்தி
வங்காளி
மராத்தி
ஒரியா
தெலுங்கு
கன்னடம்
மலையாளம்
தமிழ்
சீனாவுக்கு ஒரு நெடுஞ்சுவர்;
இந்தியாவுக்குப் பல சுவர்கள்...


ஹிந்தி





வாஷிங்டன் நகரில் அமெரிக்க சட்ட சபையாகிய 'காபிடலி'ல் அக்டோபர் 3ந் தேதியன்று காந்திசமாதானத் தூதுகோஷ்டியின ரான ராஜாஜி, திவாகர், ஸெராவ் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின்போது எடுத்தபடம். விருந்தளித்த அமெரிக்க சட்டசபை அங்கத்தினர் ஜான் ஸ்பார்க்மான், ஜான் கூப்பர், ஹார்ட்லெவான்ஸ், பிராங்க் ஈ. மாஸ் ஆகிய ஸெனட்டர்களை ராஜாஜிக்கு வலப்புறத்தில் காண்கிறீர்கள். திவாகர், ஸெராவ் ஆகியோரையும் ஜான் ஷெர்மன் கூப்பர், ராஸ்ப் யார்பரோ ஆகிய ஸெனட்டர்களையும், டாக்டர் சத்தியநாராயணனையும் ராஜாஜிக்கு இடப்புறம் காண்கிறீர்கள்.

ஐ. நா. தினம்

பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு, 1945ம் ஆண்டு அக்டோபர் 24ந் தேதியன்று ஐ.நா. சாஸனம் முதன் முதலாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அன்று முதல் ஆண்டு தோறும் இந்தத் தினம் ஐ. நா. தினமாகப் பிரசித்தி அடைந்து சமாதானத்தை விரும்பும் எல்லா நாடுகளிலும் உலகம் முழுவதிலும் கொண்டாடப்படுகிறது.

முதல் யுத்தத்துக்குப் பின்னர் சர்வதேச சங்கம் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் பலன் கிடைக்கவில்லை. போரைத் தவிர்க்க முடியவில்லை. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின், முன்னைக் காட்டிலும் தீவிரமாக சமாதானத்துக்குப் பாடுபட வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்டது ஐ. நா. ஸ்தாபனம்.

இதனுடைய முக்கியமான லட்சியங்கள் நான்கு: உலகம் முழுவதிலும் சமாதானத்தை நிலைக்கச் செய்வது; எல்லா நாடுகளிடையேயும் நல்லுறவை வளர்ப்பது; உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்தப் பாடுபடுவது; நாடுகளுக்குள்ளே காணும் சச்சரவுகளைப் பேசி, விவாதம் மூலம் தீர்த்துக் கொள்ள ஒரு பொது அரங்கத்தை அமைத்துக் கொடுப்பது.


இந்த லட்சியங்களை நிறைவேற்றி வைக்க ஐ. நா.விடம் சொந்தமாகப் படை பலம் ஒன்றும் கிடையாது. யாரிடமிருந்தும் வரி விதித்துப் பணம் வசூல் செய்யவும் முடியாது. அதற்குத் தனியாக நாடும் இல்லை; பிரஜைகளும் இல்லை. இது உலக அரசாங்கமும் அல்ல. எனினும், ஐ. நா.வுக்குத் துணையாக உள்ளது தார்மீக பலம்தான். உலக அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கிறது என்பதனால் ஏற்பட்டது ஐ. நா.வுக்குள்ள அதிகாரமும் செல்வாக்கும்.

எல்லா நாடுகளுக்கும் ஒரு தார்மீகத் தரத்தை ஐ. நா. ஸ்தாபனம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. எல்லா நாடுகளும், தங்கள் நடவடிக்கைக்கு ஐ.நா. வின் சம்மதத்தைப்பெறுவதில் ஆவலாக இருக்கின்றன. ஆரம்பத்தில் ஐம்பத் தொரு நாடுகளே ஐ.நா. வில் அங்கம் வகித்தன என்றாலும், இப்போது 109 நாடுகள் இதில் அங்கம் வகிப்பதிலிருந்தே ஐ. நா. வை உலகமக்கள் எவ்வளவு முக்கியமாகக் கருதுகின்றனர் என்பது தெளிவாகும்.


உலக மக்களின் தார்மீக பலத்தைப் பெற்றிருந்தும் ஐ. நா. எல்லா வகையிலும் குறையே இல்லாத ஸ்தாபனம் அல்ல. இதனுடைய உயர் லட்சியங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வைக்க இதனால் முடியவில்லை. கொரியாப் போர், பாலஸ்தீனப் போர், சூயெஸ் கால்வாய் நெருக்கடி போன்ற சிக்கல்களில் தலையிட்டுப் போரை விஸ்தரிக்க விடாமல், அமைதியை நிலைநாட்டியது உண்மையே எனினும், வல்லரசுகளிடையே நிலவும் சந்தேக மனப்பான்மையையும், அணு ஆயுத பீதியையும் தவிர்க்கவோ, குறைக்கவோ ஐ. நா.வினால் இதுவரையில் முடியவில்லை.

ஐ. நா.வின் விவாதங்களில் காணப்படும் அவநம்பிக்கையும், கசப்பும், பிளவுகளும் தற்போதுள்ள உலக நிலைமையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போல உள்ளன. உலகத்தில் காணும் வல்லரசுப் பிளவுகள் ஐ. நா.விலும் வன்மையாக வேரூன்றி விட்டனவோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது. புதுப்புது நாடுகள் சுதந்திரம் பெற்று, ஐ. நா.வில் சுதந்திர நாடுகளாக அங்கம் வகிக்கத் தொடங்கும் போதெல்லாம் கட்சிகளும் உலக அரங்கத்தில் விரிவடைந்திருக்கின்றன.

இறுக்கமான இந்தச் சூழ்நிலையில் உலக சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஐ. நா. வுக்கு எவ்வளவு கஷ்டங்களும் ஆபத்துக்களும் உள்ளன என்பதற்குக் காங்கோ விவகாரம் ஓர் உதாரணம். முன்னாள் காரியதரிசி டாக் ஹாமர்ஷீல்டுக்குப் பின் ஐ. நா. காரியதரிசி பதவிக்கு நிரந்தரமான நியமனம் ஏற்படாமலிருப்பது மற்றோர் உதாரணம். ஐ. நா. உயர் நிர்வாகத்திலேயே வல்லரசுப் போட்டியைப் புகுத்த வேண்டும் என்ற கருத்தைப் பிரதிபலிக்கும் 'முக்கூட்டு'க் கொள்கையும் இதையே வலியுறுத்துகிறது. ஐ. நா.வை அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய தனத்



காந்தி சமாதானக் கழகத் தூதுகோஷ்டியைச் சேர்ந்த நிவாகர், ராஜாஜி, வெராஸ் ஆகியவர்களோடு ஐ. நா. சபை நிர்வாகக் காரியதரிசி ஸ்ரீ ஸி. வி. நரசிம்மன் காட்சியளிக்கிறார்.



ராஜாஜியும் ருஷ்ய மந்திரி குரோமிகோவும்

துக்கே அகற்றிவிட வேண்டும் என்ற கருத்தும் வல்லரசுப் போட்டியினால் எழுந்ததே. எல்லாவற்றுக்கும் மேலாக, ஐ. நா.வுக்கு இப்போது பொருளாதார நெருக்கடியே ஏற்பட்டிருக்கிறது. காங்கோவிலும் சமீபக் கிழக்கு நாடுகளிலும் அமைதியைக் காக்க ஐ. நா. மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்குச் சில நாடுகள் நிதி உதவ மறுத்து விட்டதால் ஐ. நா. வுக்கு இந்த ஆண்டு எட்டுக் கோடி டாலர் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. ருஷ்யா கொடுக்க வேண்டிய தொகை மட்டுமே இதில் மூன்றில் ஒரு பாகம் என்றால் ஐ. நா.வின் பலத்தைக் குலைக்க வல்லரசுகூடத் தயங்கவில்லை என்பது தெளிவாகும்.

எனினும் உலக அரங்கில் ஐ. நா. ஸ்தாபனத்தின் அவசியம் மேன்மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது. அதன் பணி அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆனால் அதன் செல்வாக்கு நேர்மாறாகக் குறைந்து வருகிறது; குறைக்கப்பட்டு வருகிறது. இது உலக க்ஷேமத்துக்குத் துரதிருஷ்டம் என்றே சொல்ல வேண்டும். உலகத்தில் தர்ம உணர்ச்சி ஓங்கிச் சமாதானம் நிலைக்க வேண்டுமானால் ஐ. நா. ஸ்தாபனம் ஒன்று தான் அதற்கு உகந்தது. இதை எவ்வகையிலும் பலப்படுத்துவதில் இதில் அங்கம் வகிக்கும் உலக நாடுகள் முழு கவனம் செலுத்துவதுடன், பூரண ஆதரவும் அளிக்க வேண்டும். உலகம் அனைத்தும் ஒரே சமூகம்; உலக சமாதானமும், உலக சுபிட்சமும் நாடுகளின் கூட்டு முயற்சியால் நிலைக்க வேண்டும் என்ற உயர் கருத்து செயலில் நிறைவு பெற வேண்டிய அவசியத்தை அணுகுண்டு சகாப்தம் உண்டாக்கி விட்டது. இதற்கான உலக அபிப்பிராயத்தை உருவாக்கி வலுப்படுத்த ஐ. நா. தினத்தன்று உலக மக்கள் உறுதி கொள்ள வேண்டும்.

இந்த உலக ஸ்தாபனத்தில் உயர் பதவி வகிக்கும் ஊதாண்ட்டும், உதவி நிர்வாகக் காரியதரிசி ஸ்ரீ ஸி. வி. நரசிம்மனும், பொதுச் சபையின் இந்த ஆண்டுத் தலைவர் ஜபருல்லாகான் அவர்களும் வல்லரசு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அல்ல. பர்மாவும் பாகிஸ்தானும் சமீப காலம் வரை இந்தியாவுடன் இணைந்திருந்தன என்பதை நினைத்தால் மூவரும் இந்தியர்கள் என்றே நாம் பெருமை கொள்ளலாம். தமிழர் ஒருவர் ஐ.நா.வில் உயர் பதவி வகித்து உலக சமாதானத்துக்குப் பாடுபட்டு வருகிறார் என்பதைக்காணத் தமிழகம் பூரிப்படைகிறது.

ஐ. நா. காரியதரிசியின் ஆலோசனைக் குழுவின் முதல்வரும், பொதுச்சபை விவகாரங்களின் உதவி நிர்வாகக் காரியதரிசியுமான ஸ்ரீ சக்கரவர்த்தி வி. நரசிம்மன் சென்னை சர்வ கலாசாலையிலும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்று ஐ. ஸி. எஸ். பணியில் 1936-ம் ஆண்டில் புகுந்தார். சென்னை மாநிலத்து அபிவிருத்தி இலாகாவின் உதவிக் காரியதரிசியாக 1945 முதல் 1948 வரையில் பணியாற்றினார். மத்திய அரசாங்கத்தில் விவசாய இலாகாவில் 1950 முதல் 1953 வரையில் பணியாற்றியபின் நிதி இலாகாவில், அயல்நாட்டு உதவிகளை இணைக்கமாகக் கூட்டி நிர்வகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். 1956ல் ஐ. நா. ஸ்தாபனத்தின் ஒரு பகுதியான 'ஈகாபே'யின் நிர்வாகக் காரியதரிசியாக பாங்காக்கிலிருந்து கொண்டு திறம்படப் பணியாற்றினார். 1961-ம் ஆண்டில் முன்னாள் காரியதரிசியும் ஒப்பற்ற ராஜதந்திரியுமான டாக் ஹாமர்ஷீல்ட் ஸ்ரீ நரசிம்மனைத் தமது ஆலோசனைக் குழுவின் தலைவராக நியமித்தார். அவர் மறைவுக்குப் பின் ஊதாண்டும் ஸ்ரீ ஸி. வி. நரசிம்மனை அதே பதவியில் பணிபுரியச் செய்தார். இத்துடன் 1962 மார்ச்சிலிருந்து பொதுச் சபை விவகாரங்களை நிர்வகிக்கும் காரியதரிசியாகவும் அவர் பொறுப்பேற்று வருகிறார். இப்படிப் பல துறைகளிலும் அநுபவம் பெற்று உலக ராஜதந்திரிகளுடைய நன்மதிப்பையும் பெற்று உலக அமைதிக்குத் தம்மால் இயன்ற பணியை மகிழ்ச்சியுடன் ஆற்றும் ஸ்ரீ நரசிம்மன் சம்ஸ்கிருத இலக்கியத்திலும் கர்நாடக சங்கீதத்திலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். தமது உயர் பணி மூலம் தமக்கும், தமது தாயகத்துக்கும் பெருமை அளித்து வரும் ஸ்ரீ ஸி. வி. நரசிம்மனின் உருவப் படத்தை இவ்வார இதழ் அட்டையில் வெளியிட்டு மகிழ்கிறோம்.


அவள் ஒரு
கல்ஸானா
குழந்தை
கொழு கொழுவென்று...வலுவான கைகால்களமைந்த...
உண்மையிலேயே ஓர் அழகிய மதலை!...கொண்டாடத்தகு
கன்னக்குழிவுகளுடன் உருண்டு திரண்ட உடற்பூரிப்பு...
வேடிக்கை மற்றும் களிப்புடன் கும்மாளமடிக்கிறது...
அமைதியான இருப்புடன் பூரண நலத்தில் ஆனந்தமாக புன்
னகை புரிகிறது! அவளின் பெருமிதமுடைய அன்னை, தன் குழந்
தையின் உறுதியான கைகால்கள்...அவளின் கொழு கொழு
வென்ற வளர்ச்சி இவற்றிற்காக, வைட்டமின் நிறைவுறச்
சேர்ந்த கால்சியம் கொண்ட "கல்ஸானா-டி"க்கு நன்றி செலுத்
துகிறாள். அவள் கருவுற்றிருந்த மாதங்களின் போதும்—தன்
பெருமை கொள் களிப்பின் செல்வத்தை அரவணைக்கும்போதும்
ஒழுங்காக "கல்ஸானா-டி" உட்கொண்டு வந்தாள்—"கல்ஸானா-
டி" அவள் குழந்தைக்கு வளரும் வயதில் வலுவான எலும்பு
களும் பற்களும் உருவாக உதவும்.
கல்ஸானா-டி
வைட்டமின் தீவிரச்சேர்க்கையுடைய கால்சியம்
கருவுற்றிருக்கும் தாய்மார்கள், குழந்தையை அரவணைக்கும்
அன்னைகள் மற்றும் வளரும் குழந்தைகள் இவர்களுக்கு ஏற்றது.
GRS. 56. TAM.

Firestone

பயர்ஸ்டோன்


இதோ ஏன் விபரம் அறிந்த மோட்டாரோட்டிகள்
எப்பொழுதும் பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்களைத்

தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதற்கு மற்றுமொரு காரணம்

ஒவ்வொரு ரூபாய் முதலீட்டுக்கும் கூடுதலான கிலோமீட்டர்கள் ஓட்டம் அளிக்கிறது

இந்தியாவிலுள்ள ரஸ்தாக்களின் நிலைகளுக்கேற்ற டயர்களைத் தயாரிப்பதில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவமும், பயர்ஸ்டோனின் உலகெங்கும் பிரபலமான தொழிலியல் ஆராய்ச்சியின் பலனும் சேர்ந்து ஒருங்கே அளிக்கும் தயாரிப்புதான் பயர்ஸ்டோன் நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர். தரத்திலும் தயாரிப்பிலும் விசேஷமானது. பிரத்தியேகமாகக் கலவை செய்யப்பட்ட, தேய்வடையாத டிரெட் ரப்பரும், வலுவாக்கப்பட்ட கார்டு பாடியும் கூடுதலான மைல்கள் டயர் தொந்தரவில்லாமல் ஓட்டுவதை உறுதிப்படுத்துகின்றன. அதாவது, ஒவ்வொரு ரூபாய் முதலீட்டுக்கும் கூடுதலான கிலோமீட்டர்கள் ஓட்ட முடிகிறது.





உங்கள் தரத்தின் சின்னம்

என்ன சேதி?

திடீர் வேலைநிறுத்தம்

சென்னை நகரப் போக்குவரத்து சென்ற வாரம் திடீரென்று ஒரு நாள் ஸ்தம்பித்து நின்றுவிட்டது. பஸ்களும், டாக்ஸிகளும் முறை போட்டுக்கொண்டு நின்றுபோய், நகர மக்களை அலைச்சலும், அயர்ச்சியும் கொள்ள வைத்தன.

சர்க்கார் போக்குவரத்து ஊழியர்களுக்கும் சரி, டாக்ஸி ஓட்டுபவர்களுக்கும் சரி, பலவிதக் கஷ்டங்கள் இருந்தாலும், அவர்களின் மான உணர்ச்சியும் ரோஷமும் பெரிதாக இருந்தாலும், இது காரணமாக இந்தப் போக்குவரவு சாதனங்களையே நம்பியுள்ள மாணவர்களையும், அலுவலக ஊழியர்களையும், வியாபாரிகளையும், முன்னெச்சரிக்கையின்றித் திண்டாட விடுவது தர்மமல்ல.

தங்களுடைய மான உணர்ச்சியைப் பெரிதாக மதிக்கும் ஊழியர்கள் பிரயாணிகளின் மான உணர்ச்சியையும் மதிக்க வேண்டும். பஸ்களுக்கு நிற்பதும், இடை நிலையங்களில் இடம் கிடைக்காமல் காத்திருப்பதும், உள்ளே இடம் இருந்தபோதிலும் பஸ்களை நிறுத்தாமல் செல்வதும் பிரயாணிகளின் பொறுமையை மிகவும் சோதிக்கின்றன. இவையெல்லாம் போதாவென்று வேலை நிறுத்தமும் ஏற்படும்போது மக்கள் மிகவும் வேதனை அடைகின்றனர். பொது மக்களுக்குத் தொந்தரவு விளைவிக்காமல் அவர்களது ஆதரவை நாடி, அதன்மூலம் தங்கள் குறைகள் நீங்க வழி தேடுவதுதான் நியாயமாகும்.

ஊழியர்களை மட்டும் குறை சொல்லி என்ன பயன்? இவ்வாறு அச்சுறுத்தும் சாதனங்களில் இறங்கினால்தானே நமது அரசாங்கமும் அசைந்து கொடுக்கிறது?

சென்ற வாரம் லாரி வேலை நிறுத்தம் நிகழ்ந்தபோது 'லாரித் தொழிலைத் தேசியமயமாக்குவோம்' என்று சர்க்கார் பயமுறுத்தியது எவ்வளவு அறிவின்மையாகும் என்பதை இந்த பஸ் வேலை நிறுத்தம் நிதரிசனமாக்கி விட்டது. தேசியமயமாக்கப்பட்ட ஒரு தொழிலில் வேலைநிறுத்தம் ஏற்படும்போது, அத்தொழிலில் போட்டியிடும் இதரர்கள் யாரும் கை கொடுத்துக் காப்பதற்கு இல்லாததால் மக்கள் எப்படி எவ்வித பரிகாரமும் இன்றிப் பரிதவிக்கின்றனர் என்பதைச் சந்தேகமற உணர்த்தி விட்டது இந்த அரைநாள் பஸ் ஸ்டிரைக்.


பேய்க்கு வாழ்க்கைப்பட்டால்...

சென்னையில் சமீபத்தில் லாரி 'ஸ்டிரைக்' நடந்ததற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இதர ராஜ்யங்களிலும் 'அடையாள' ஸ்டிரைக் நடந்திருக்கிறது.

இந்த வேலை நிறுத்தங்கள் எல்லாம் அந்தந்த ராஜ்யங்கள் விதிக்கும் வரிகளை எதிர்த்து நடைபெறுகின்றன. அதிக வரிகளை விதித்துத் திட்ட இனங்களுக்கு நிதி திரட்ட வேண்டும் என்று மத்திய சர்க்காரிடமிருந்து ராஜ்ய சர்க்கார்களுக்குக் கடுமையான தாக்கீது பிறப்பிக்கப்படுகிறது. ''என்னைப் பாருங்கள். இரண்டு வருஷங்களில் எவ்வளவு வரி விதித்திருக்கிறேன். உங்கள் பங்கை நீங்கள் நிறைவேற்ற ஏன் தயக்கம்?'' — இது ஸ்ரீ மொரார்ஜியின் அறைகூவல். ராஜ்யங்கள் கொழுத்த வரி விதிக்க மோட்டார் வாகனங்களும், லாரிகளும் தான் இருக்கவே இருக்கின்றன. அப்புறம் கேட்பானேன்? எவ்வளவு பணம் தேவைப்படுகிறதோ அவ்வளவையும் இந்த ஓர் இனத்திலிருந்தே வசூல் செய்துவிட ராஜ்யங்கள் தயங்குவதில்லை.

ஆனால் வரிச்சுமையை லாரிகள் தாங்குமா. ஏற்கனவே மத்திய அரசாங்கமும் ராஜ்ய சர்க்கார்களும் விதிப்பதைச் சேர்த்துப் பார்த்தால் உலகத்திலேயே நம் நாட்டில்தான் வரிச்சுமை அதிகமாயிற்றே என்றெல்லாம் அரசினர் கவலைப்படுவதில்லை.

பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்தின் மீது ஏறித்தானே ஆக வேண்டும்? தேர்தல் சமயத்தில் காங்கிரஸின் கஜானாவில் கொட்டிக் கொட்டி நிரப்பி, அந்தக் கட்சி ஆட்சி பீடத்தில் அமர உதவி புரிந்தவர்கள் முக்கியமாகத் தனியார் துறை போக்குவரவுக்காரர்கள் தான். அதன் பலன்...?



வாமனன் திரிவிக்கிரமன் ஆனான்; குடியானவன் 'பலி'யானான்.




மெட்ரிக் நீட்டலளவுகளில்

மட்டுமே வியாபாரம் செய்யுங்கள்

1962 அக்டோபர் 1ந்தேதி முதல், நாடு முழுதும் மீட்டர், சென்டிமீட்டர் என்ற மெட்ரிக் நீட்டலளவுகள் கட்டாய அமுலுக்கு வந்துவிட்டதால், இப்பொழுது பரிவர்த்தனைகள் மீட்டர் கணக்கிலேயே நடைபெறுகிறது.

ஷர்ட், கோட்டு போன்ற ஆடைகளுக்கு தேவையான துணிகளின் பழைய அளவுகளுக்கு சமமான புதிய அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன. கெஜம், அடி போன்ற பழைய அளவுகளுக்குப் பதில் புதிய அளவுகளை நன்கு தெரிந்து கொள்ள இவை உபயோகமாக இருக்கும்.





ஷர்ட்	: 2 மீட்டரும் 75 சென்டிமீட்டரும் (அல்லது 2.75 மீட்டர்) 3 கெஜத்திற்கும் பதில்	
கோட்டு	: 2.75 மீட்டர்	ஒவ்வொன்றும் 3 கெஜத்திற்குப் பதில்
ட்ரௌசர்கள்	: 2.75 மீட்டர்	
ரவிக்கை	: 0.90 மீட்டர் — 1 கெஜத்திற்குப் பதில்	

6 கெஜம் நீளமுள்ள புடவை புதிய அளவில் 5½ மீட்டராகும்.

1 மீட்டர் = 1 கெஜமும் 3⅜ அங்குலமும்
ஒரு கெஜம் துணியின் விலை 1 ரூபாய் என்றால் 1 மீட்டர் அளவு அதே துணி 1 ரூபாயும் 9 ந.பைசாவும் ஆகும்.

மெட்ரிக் முறையே

சுலபமானது, ஒரே சீரானது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA 62/433

வாசகர்களுக்கு ஒரு வாச மலர்

நேயர்கள் யாவருக்கும் நமது நேயம் மிகுந்த தீபாவளி நல் வாழ்த்துக்களை வழங்குகிறோம்.

அதோடு, தீபாவளிப் பண்டிகையைவிட ஆர்வமாக அவர்கள் எதிர்நோக்கிய 'கல்கி' தீபாவளி மலரையும் 'அறிமுகம்' செய்து வைக்கிறோம்.

'கல்கி' தீபாவளி மலர் என்றும் அது எப்போதும் போல் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிக்கும் கலைக் கன்னலாகத்தான் விளங்கும் என்பது நேயர்களுக்கே தெரிந்த விஷயம் தான். எனினும் "அதெப்படி ஆண்டு தப்பாமல் அதே உயர்ந்த தரத்தில் புதுப்புது விஷயங்கள் கிடைக்க முடியும்?" என்ற வியப்பும் அவர்களுக்கு ஏற்படலாம். அது எங்களுக்கே வியப்பளிக்கும் விஷயம்தான். ஆண்டவனின் கருணை காரணமாகவே ஆண்டுதோறும் இத்தகைய அரிய மலரைப் படைக்க முடிகிறது என்றுதான் எண்ணுகிறோம். இந்த ஆண்டு பூத்துள்ள மலரிலுள்ள சில அம்சங்களைப் பாருங்கள்.

வனவாசியான ராமனும் சீதையும் இந்த வாசமலரின் புற இதழ் போல் மேலட்டையில் திகழ்கிறார்கள். முகப்புச் சித்திரத்தில் வழக்கம் போலவே, அருள்மணம் வீசும் ஆனந்தக் கோலத்திலே ஸ்ரீ காமகோடி ஜகத்குரு தரிசனம் தருகிறார். இவ்விரு சித்திரங்களையும் சிறப்புறத் தீட்டியுள்ள ஓவியர் மணியம் செல்வன். சோழ, சேர சாம்ராஜ்யக் காட்சிகளில் தம் கைவண்ணத்தை மேலும் மலர்த்தித் தீபாவளி மலருக்கு எழில் கூட்டுகிறார். புகழில் இந்த அரசுகள் விரிந்து பரந்திருந்தது போலவே, இம் மலரிலும் சித்திரங்கள் விரிந்து பரந்து விளங்குமாறு பக்கங்கள் புதுமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

முகப்பில் துலங்கும் முனிபுங்கவரின் மூல குருவான ஆதிசங்கரர் அருளிச் செய்த அற்புதமான பக்திக் கிரந்தங்களிலிருந்து நான்கு அருமையான காட்சிகளைத் தொகுத்து அழகானதோர் ஓவிய மடலை அளித்திருக்கிறார் சைத்திரிகர் வினு. 'சங்கராபரணம்' என்ற இந்தத் தொகுப்பில் தமது கற்பனைக் கண்ணைக் கொண்டு மட்டுமே கடவுளரைக் கண்களிக்கத் தீட்டியுள்ள ஓவியர், தாம் பிரத்யட்சமாகக் கண்ட கற்சிலைகளையும், பொற்சிலைகளையும் தூரிகையில் குழைத்துத் தரும் ஒரு பகுதியும் மலரில் உள்ளது. 'வெற்றி எட்டுத் திக்கும் எட்ட.....' என்ற தலைப்பில், சிவபெருமான் வீரம் விளைத்த எட்டு க்ஷேத்திரங்களுக்கு வாசகர்களை அழைத்துச் செல்கிறது இப்பகுதி.

தமிழ்ப்பண்புக்கு என்றே ஒரு தெய்வீகமான மொழியும், இலக்கியமும் இருப்பது போல் ஒரு தனித் தன்மை வாய்ந்த ஓவிய மரபும் உண்டு. அந்த அழகொழுகும் ஓவிய மரபுக்கு ஒப்ப, எழில் சொட்டும் தமிழ் இலக்கியக் காட்சிகளை வனப்புற வரைந்திருக்கிறார் ஓவியர் ராஜம்.

நேயர் கண்களுக்கு மேலும் நல் விருந்தாக அமைந்துள்ளது 'கண்ணுக்கினிய கண்ணன்' என்ற சித்திர மடல். மெய்யடியார்கள் நால்வர் கண்ணனைக் கண்ட நாலு நூதனக் கோலங்களை நாமும் கண்ணாரக் கண்டு மகிழும்படி செய்திருக்கிறார்கள் விஜயா, கல்பனா, ரமணி, நடராஜன் ஆகிய நாலு ஓவிய விற்பன்னர்களும். இவர்களோடு, சித்திரலேகா, சாகர் ஆகியோரது கைவண்ணமும், 'வாழ்வு தந்த புலமை', 'நாடோடிப் பாடல்கள்' என்ற இரு வண்ண மடல்களில் மிளிரக்காண்கிறோம். அமுதன், குமுதா ஆகியோரது ஓவியங்களும் மலருக்கு அழகூட்டுகின்றன.

சிரித்து மகிழும் களியாட்டம் இல்லாமலா தீபாவளி? அதற்கேற்ப, சிரிப்போடு சிந்தனையும் தோய்ந்த ஹாஸ்யச் சித்திரங்களைச் சாமாவும், செல்லமும் குறைவற வழங்கியுள்ளனர். பி. கே. யின் அரசியல் புராணம் நகைச்சுவை அம்சத்தை நிறைவு செய்கிறது. குழந்தைகளுக்கென்று 'வாண்டுமாமா' தயாரித்துள்ள பகுதியில் கல்பனா கவினுறத் தீட்டியுள்ள புள்ளினங்களின் வண்ண சித்திரங்கள் வயது வந்தவர்களின் கருத்தையும் கவரும்.

பகவத்பக்தியை வளர்க்கும் பாகவதோத்தமர்கள், பிரவசன நிபுணர்கள் ஆகியோரின் புகைப்படத் தொகுப்பு மலரின் கண்ணியத்தை உயர்த்துகிறது.

மலரின் உருவ அழகு போன்றது சித்திரங்கள் என்றால், அதில் ஊறும் தேனுக்கு ஒப்பானது அதில் அடங்கியுள்ள கதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும். அப்பப்பா, இம் மலருக்கு விஷய தானம் செய்திருப்பவர்களின் பட்டியலைப் பார்த்தாலே மலைப்பு உண்டாகிறது! ஜகத்குரு ஆசி கூறி அருளியிருக்கிறார். தீபாவளி மலர் தவறாது தமது எழுத்தால் கருத்தைத் துலக்கி வரும் தலைவர் ராஜாஜி இவ்வாண்டும் உள்ளத்தை உருக்கும் ஒரு கட்டுரை நல்கியுள்ளார். ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், அமைச்சர் பக்தவத்ஸலம், பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், பிரம்மஸ்ரீ அண்ணாசாமி பாகவதர், வி. வி. நரசிம்மன், என். ராமேசன், "அண்ணா", தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், வெ. சாமிநாத சர்மா, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், ஸ்ரீஹரி, என். உதயமூர்த்தி, பிலோ இருதயநாத், ரா. கணபதி ஆகியோருடைய கட்டுரைகளில் ஆத்மிகம், இலக்கியம், கலை, வரலாறு, விஞ்ஞானம், வைத்தியம், மானுடஇயல் ஆகிய யாவும் பரிமளிக்கின்றன. ஸ்ரீ வேணுகோபாலன், சுந்தர ராமசாமி, அநுத்தமா, தாமரைமணாளன், கை. சுப்பிரமணியம், நாடோடி, ஜெகசிற்பியன், தி. ஜானகிராமன், கோமதி ஸ்வாமிநாதன், சோமு, தமிழவன், ஆர்வி, ராஜீ, லோமாஸ், ரா. வீழிநாதன், பி. எஸ். மணி இவர்களுடைய சிறுகதைகளும் நா. பார்த்தசாரதியின் நெடுங்கதையும் இம்மலர் பிலிற்றும் தேனுக்குத் தித்திப்பை கூட்டுகின்றன. நவயுகக் கவிஞர் குழாத்தின் நவநவமான கவிதைகள் வேறு மலரெங்கும் விரவி மணம் வீசுகின்றன.

தீபாவளிக்கு நல்ல பெரும் விருந்து இவ்வருட மலர். உண்டால் குறையாத விருந்து. மீண்டும் மீண்டும் உண்டாலும் திகட்டாத விருந்து!

தீபாவளிக்கு -



கைத்தறி ஆடைகள் கவர்ச்சியை அளிக்கும்

இந்த தீபாவளிக்கு–பட்டு அல்லது பருத்தி கைத்தறி ஆடைகளை வாங்குங்கள்

பளபளப்பான வண்ணங்களில் பழமையான முறையில் ஆனால் நவீன மோஸ்தர்களில் செய்யப்பட்ட கைத்தறிப் புடவைகள் பெண்மைக்குப் பெருமை அளிக்கின்றன. அவைகள் மலிவும்கூட.

காஞ்சீபுரம், தர்மாவரம், ஆரணி, பெங்களூர், வாரணாசி, காஷ்மீர், மேற்கு வங்காளம் மற்றும் பல இடங்களிலிருந்தும் வந்த அளவற்ற மாதிரிகள் எங்களுடைய பட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கின்றன.

அதோடு நியாயமான விலையில் பல்வேறு நிறங்களில் ரெடி மேட் ஸ்லாக்குகளும் கிடைக்கும்.

21-10-1962 முதல் 27-10-1962 வரை ரூபாய்க்கு 5 ந.பை. வழக்கமான தள்ளுபடி; தவிர மேலும் ரூபாய்க்கு 5 ந.பை. எல்லா வகைகளுக்கும் கிடைக்கும்.

14-10-1962 முதல் 27-10-1962 வரை ஹாண்ட்லூம் ஹவுஸ் காலை 10 மணியிலிருந்து இரவு 9 மணி வரை (ஞாயிறு உட்பட) எல்லா நாட்களிலும் திறந்திருக்கும்.

ஹாண்ட்லூம் ஹவுஸ்

9, ரட்டன் பஜார், சென்னை-3 போன்: ஷோரூம் 33405

மற்றும்

221, டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய்-1

2, லின்ட்ஸே தெரு, கல்கத்தா-16

9-ஏ, கன்னாட் ப்ளேஸ், புதுடில்லி

வெளிநாடுகளில்:
கொழும்பு, சிங்கப்பூர்,
ஏடென், கோலாலம்பூர்



தலைமை ஆபீஸ்:
ஆல் இந்தியா ஹாண்ட்லூம்
பாப்ரிக்ஸ் மார்க்கெட்டிங்
கோ-ஆப் சொஸைட்டி
லிமிடெட்
ஜன்மபூமி சேம்பர்ஸ்,
பம்பாய்-1


"நான் ஒரு கவிதை கட்டியிருக்கிறேன் பத்திரிகையில் போடுங்கள்!"
"சொல்லுங்கள்!"
"எனக்கு என்ன கிடைக்கும்?"
"நான் ஒரு பத்திரிகை ஆசிரியர். நீ இப்படி அல்ல தண்டனையைப் பற்றிப் பேச!"
"என் பையன் பாஸ் பண்ணிவிட்டான், அவனை ஒரு பாங்கியில் போட்டு விட்டேன்!"
"சரி! வீட்டுக்கு என்ன வட்டி வருகிறது?"
"நீங்க இரண்டு பேரும் ஒற்றுமையா இல்லையாமே! நேற்று நீங்கள் சண்டை போட்டது எங்கும் கேட்டதாமே!"
"நாங்கள் சப்தம் போட்டோமா? இடையிலே கிடையாது! நாங்கள் பேசியே ஒரு யுகம் ஆகிறது!"
ஏண்டா இரு மாறின்று தண்ணீரை ஏகமா குடிக்கறே! குடிக்காதேடா!"
"ஏன் குடிச்சாலென்ன?"
"பிறத்தியாருக்கு நீச்சத் தண்ணீர் இல்லாமல் போய்விடும்!"
"உனக்கு ரகுவைத் தெரியுமா?"
"தெரியாதே!"
"என்ன தெரியாதுங்கறே! இன்னமா பெரிய மீசை வச்சிண்டிருப்பான் உன்னோடு படிச்சவன்!"
"பெரிசா மீசை வச்சிண்டு யாரும் என்னோடு படிக்கவில்லை."
சாமா

நந்தவனம்

சோமு

43. அழிந்த சித்திரம்!

வேணுலிங்கம் தனது வீட்டிலிருந்து வேகமாகப் புறப்பட்டவன் நேரே திருநெல்வேலிக்குச் சென்று வக்கீலையாவைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான்.

கடந்த சில மாதங்களாக வேணுவும் கடலையாண்டியும் மற்றுச் சகாக்களுமாக அந்த வட்டாரத்தில் பெரிய கொள்ளைக்காரர்களைப் போல் வலைய வருவதன் நோக்கம் அநேகமாக இப்போது நிறைவேறி விட்டது. ஜமீந்தார்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து கிளம்பிய சில குடிமக்களைத் தனக்கு உதவியாக வைத்துக் கொண்டு,வேணுலிங்கமும், கடலையாண்டியும் சிங்கம்புத்தூர் எல்லையிலே ஏதேதோ வேலைகளைச் செய்து வந்ததற்கு இப்போது பலன் கிடைத்து விட்டது. நாட்டில் அன்றிருந்த சூழ்நிலையில் ஒரு புதிய சமுதாயம் உருவாகி வந்ததோடு, ஜமீன் ஒழிப்புச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கான அறிகுறியும் ஏற்பட்டுக் கொண்டு வந்தது. வேணு நினைத்தான், இனிமேல் வில்வநாதனையும் சுந்தரியையும் கல்கத்தாவிலே கொண்டு போய்க் குடியேற்றி விட்டால், தான் எடுத்த காரியம் முழுதும் நிறைவேறியதாகும்! வில்வநாதனுக்கு வல்லாளவேலரால் ஆபத்து நேர்ந்து விடாதபடி மிகவும் முன்ஜாக்கிரதையோடு அவரிடமிருந்து அபகரித்துச் சென்ற அந்தத் துப்பாக்கிகளையும் இனிமேல் திரும்பக் கொடுத்துவிடலாம். இனி அவரால் வில்வநாதனுக்கு இடையூறு நேரப் போவதில்லை.

இதையெல்லாம் முடித்தால் மட்டும் போதுமா? இன்னொரு முக்கிய காரியத்தையும் முடிக்க வேண்டும் என்று நினைத்தான் வேணுலிங்கம்.

வேணு நினைத்தான், குமுதவல்லியினுடைய அர்த்தமற்ற பணத்தாசையைத் தணித்து, அவளுடைய விபரீதமான மனப் போக்குகளுக்கு நல்லறிவு புகட்டி, அவளையும் சுந்தரியோடு இணைந்த முறையில் இனிமேல் வீடும் குடித்தனமுமாக வாழ்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த ஏற்பாட்டைச் செய்யக் கூடிய சாமர்த்தியமும், அமைதியான யோசனையும் வக்கீல் ஒருவருக்குத்தான் உண்டு. எனவே வக்கீலிடம் இதற்கும் ஒரு வழி செய்யும்படி கூற வேண்டும்.

''வக்கீலையா! இது வரையில் நானும் எனது நண்பர்களும் கொள்ளைக்காரர்களாக வலைய வந்ததற்கு அரசாங்கம் என்ன தண்டனை விதிக்கப் போகிறதோ, அந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்ள நானும் கடலையாண்டியும் சித்தமாக இருக்கிறோம். ஆனால் அதற்கு முன்பு குமுதவல்லியை வண்ணார் பேட்டைக்கு அழைத்து வந்து, அவளிடம் தெளிவான அறிவு ஏற்படும்படி நீங்கள் யோசனை சொல்லுங்கள். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி வாழ்வை நடத்திக் கொண்டு போவதுதான் தனது நோக்கம் என்று இதுவரை வாழ்ந்து விட்டாள் குமுதவல்லி! இனியும் அந்த மாதிரி இருப்பது அறிவீனம். மகனோடும், மருமகளோடும் சேர்ந்து இனிமேல் அவள் ஒற்றுமையாக வாழ்வதற்கு





பிரபல ஹாஸ்ய எழுத்தாளர் திரு வேங்கடராமன் (நாடோடி) 'ஸ்டடி மிஷன்ஸ் இண்டர்நேஷனல்' என்ற அமெரிக்க ஸ்தாபனத்தின் அழைப்புக்கிணங்க அக்டோபர் 18ந் தேதி அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்.

வழி செய்யுங்கள். இவர்களைக் கல்கத்தாவிலே குடியேற்றி விட்டால், பிறகு நானும் எனது கொள்ளைக்கூட்டத்தாரும் உங்களிடமே வந்து எங்களை ஒப்படைக்கிறோம். இனிமேல் எங்களுடைய படைக்கும் ஜமீன் எதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்கும் அவசியம் இல்லாதபடி நம்முடைய அரசாங்கமே ஜமீன் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப் போகிறது. ஆகையால் கடலையாண்டியும் அவனுடைய கூட்டத்தைக் கலைத்துவிடச் சித்தமாக இருக்கிறான். அவனோடு சேர்ந்து நான் செய்த குற்றங்கள் என்ன? கொள்ளையோ, கொலையோ, அக்கிரமங்களோ செய்ததில்லை. அட்டகாசம் செய்து வந்த சிறு சிறு ஜமீன்தார்களை எச்சரிக்கை செய்திருக்கிறோம். வல்லாளவேலரின் வாழ்விலே தலையிட்டு அவரைப் பயமுறுத்தியிருக்கிறோம். வில்வநாதனுக்குத் தீங்கு இழைக்க முடியாதபடி எச்சரிக்கை செய்திருக்கிறோம். வேறு பாதகங்கள் பழிகள் ஏதும் நாங்கள் செய்ததில்லை. ஆனாலும் போலீஸ் இலாகாவில் எங்களை விசாரித்து எங்களுக்கு என்ன தண்டனை கொடுக்கிறார்களோ, அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்!''

இவ்வாறு வக்கீலிடம் விவரமாகச் சொல்ல வேண்டும் என்று திட்டமிட்டு, இதைக் கடலையாண்டியிடமும் தெளிவாகச் சொல்லி விட்டு, அதன் பிறகே வண்ணார் பேட்டைக்குக் கிளம்பியிருக்கிறான் வேணுலிங்கம்! ஆனால் வழியில் எதிர்பாராத செய்தி இரகசிய உளவு மூலம் வேணுவுக்கு எட்டியது! செண்பகநாயகி கோவிலிலுள்ள சித்திரங்களை அழிப்பதற்காக வல்லாளவேலரின் தலைமையில் ஒரு சிறு படை நந்தவனத்துக்குச் செல்கிறது என்ற செய்தியை, வேணுவின் இரகசிய ஒற்றர்கள் பாதி வழியிலேயே வேணுவைச் சந்தித்துத் தெரிவித்தார்கள்! அப்படியே சீற்றமும் வேதனையும் கொண்ட வேணுலிங்கம் தனது திட்டத்தில் மாறுதல் செய்தான். செய்தி கொண்டு வந்த ஒற்றர்களை உடனே வன வீட்டுக்குச் சென்று, இரகசியமாகக் கடலையாண்டியை அழைத்துக் கொண்டு, நேரே வக்கீலையாவிடம் செல்லும்படி கூறினான். கூறிவிட்டு வேணு செண்பக வனத்தை நோக்கி விரைந்தான்!

இதற்குள் வன வீட்டில் என்ன நடந்திருந்தது?

''என்னுடைய சித்திரங்களை அழிப்பதா?'' என்று கூறிக் கொண்டே சீறியெழுந்த வில்வநாதனைச் சுந்தரி ஓடி வந்து தடுத்தாள்.

ஆனால் எந்த வார்த்தையும் வில்வநாதனுடைய செவியில் ஏறவில்லை. யாரும் அவனை அப்போது தடுத்து நிறுத்த முடியாதபடி ஒரு வெறியின் வசமாகி நின்றான் வில்வநாதன்!

போட்டிருந்த சட்டையை மாற்றவில்லை. நிலைக்கண்ணாடிக்கு முன்னால் சென்று தலையைச் சீவிக் கொள்ளவில்லை. மேல்துண்டை எடுத்துப் போட்டுக் கொள்ளவில்லை. அப்படியே அந்த வன வீட்டிலிருந்து வெளியே குதித்தான். 'விறு விறு' என்று ஓட்டமும் வேகமுமாகப் படர்ந்தான் வில்வநாதன், செண்பகவனத்தை நோக்கி!

திருநெல்வேலிப் பாலத்தருகே சீனிவாச மண்டபத்தில் உட்கார்ந்து, எனக்கும் லாலா ராம்சிங்குக்கும் சித்திரமடலின் வரலாற்றைச் சொல்லிக் கொண்டு வந்த இளைஞனுக்கு இந்த இடத்தில் குரல் நடுங்க ஆரம்பித்தது. செண்பகநாயகி கோவிலின் சுவர் ஓவியங்களுக்கு நேர்ந்த சோக முடிவைக் கூறத் தொடங்கியபோது மண்டபத்து இளைஞன், துயரத்தினால் கலங்கினான்.

'தனியாக நீங்கள் இப்போது வெளியே போகக் கூடாது' என்று சுந்தரி எவ்வளவோ தடுத்தும் அந்த வார்த்தையை உதாசீனம் செய்துவிட்டுச் சீற்றத்தோடு வெளியே பாய்ந்து ஓடிய வில்வநாதனை எண்ணியதும், இளைஞனுடைய கண்களிலே, 'பொல பொல' என்று கண்ணீர் கொட்டியது.

''ஐயா, ஒரு கலைஞனுக்கு உயிர் மற்ற எல்லாப் பொருள்களையும்விடப் பெரிது அவனுடைய சிருஷ்டிதானே! தனது இலட்சியம், தனது கனவு, இந்தக் கனவின் வெளியீடான கலை—

இவற்றுக்கு மத்தியில் வேறு எதை ஒரு பொருட்டாக மதிப்பான் ஒரு கலைஞன்? நீங்களே சொல்லுங்கள். வில்வநாதனுக்கு அவருடைய உயிரைவிடப் பெரிதாகத் தோன்றியது அவருடைய சுவர் ஓவியம்! செண்பகநாயகி கோவிலின் சுவர்களிலே தம்முடைய ஆன்மாவை அல்லவா சித்திரங்களாகப் பொறித்து வைத்திருந்தார் வில்வநாதன். இப்போது அந்த ஆன்மாவுக்கு இடையூறு நேர்ந்தது என்று கேள்விப்பட்டதும் அவரால் எப்படிச் சமாதானமாக இருக்க முடியும்? பாவம், சுந்தரிக்கு இந்த மன இயல்பு தெரியாதா? தெரியும்! ஆனாலும் அவளுடைய உள்ளம் எப்படி இருந்தது? இந்த உலகத்தில் மற்ற எல்லாப் பொருள்களையும் விட அவளுக்கு மிகவும் முக்கியமாக, மிகவும் உயர்வாகத் தோன்றியது அவளுடைய கணவனின் உயிர்தான்! அதற்கு நிகரான ஒரு பொருள் சுந்தரியின் பார்வையில் வேறு எதுவும் இடையாது. அதனால்தான் அவள் தனது கணவனைத் தடுத்து நிறுத்த முயன்றாள். ஆனால் விதி வேறுவிதமாக இருந்தது. சுந்தரி எவ்வளவோ தடுத்து நிறுத்த முயன்ற பின்னும், யார் என்ன சொல்லியும் கேளாமல், அந்தப் பெரிய ஆபத்திலே போய்ச் சிக்கிக் கொண்டார் ஓவியநாதராகிய வில்வநாதன்!''

இவ்வாறு சொல்லி முடித்த போது, மண்டபத்து இளைஞனுடைய முகத்தைப் பார்த்தேன். சோகம் என்ற காரிருள் அந்த முகத்தைப் போர்த்தி மூடியிருந்தது. அவனுடைய கூர்மையான கண்களுக்குப் பின்னால், மனித இதயத்தின் ஆற்றொணா வேதனைகள் அனைத்தும் குமுறி நின்றன. நீல நெடுங் கடலாக அலைவீசின! எனது ஆவலையும் துயரத்தையும் அடக்க முடியாமல் நான் கேட்டேன்:

''தம்பி, என்ன சொல்லுகிறீர்கள்? செண்பகநாயகி கோவிலுக்குச் சென்ற வில்வநாதன் என்ன ஆனான்? நீங்கள் இவ்வளவு தூரம் துயரம் அடையும்படி அவனுக்கு என்ன ஆபத்து நேர்ந்தது..?''

நான் இப்படிக் கேட்டதும் தாபமும் ஏக்கமும் நிரம்பிய குரலிலே அந்த இளைஞன் சொல்லுவான்:

''ஐயா! நந்தவனத்தை நோக்கி ஓடிய வில்வநாதன், எவ்வாறு அந்தப் பெரிய ஆபத்துக்கு உள்ளானார் என்பது குறித்துப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். வல்லாளவேலரின் கையில் ஏழெட்டு 'ரௌண்ட்' சுடக் கூடிய துப்பாக்கி ஒன்றை ஜமீந்தார் அனவரத புவனபதி கொடுத்திருந்தார் என்றும், எந்தச் சந்தர்ப்பத்தில் எது அவசியமோ

அந்த முறையில் அந்தத் துப்பாக்கியை உபயோகித்துக் கொள்ளலாம் என்று ஜமீந்தார் வல்லாளவேலருக்குச் சொல்லி யனுப்பினார் என்றும் கூறுகிறார்கள் !''

''துப்பாக்கியா? துப்பாக்கியும் கையு மாகவா அந்தப் படுபாவி செண்பக நாயகி கோவிலுக்குச் சென்றான்?''

''ஆமாம். சித்திரங்களை அழித்துக் கொண்டிருந்த முரட்டு மனிதர்களின் கூட்டத்திலே தன்னந்தனியாக நமது வில்வநாதன் பாய்ந்து சாடினார் என்றும், அப்போது வல்லாளவேலர் தமது கைத் துப்பாக்கியால் வில்வநாதனைக் குறி பார்த்துச் சுட்டார் என்றும், அந்தக் குண்டு வில்வநாதனுடைய வலது தோளிலே பாய்ந்து அவர் அப்படியே சுருண்டு கீழே விழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள்!''

லாலாவுக்கும் எனக்கும் தூக்கிவாரிப் போட்டது.

''தம்பி, என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? வில்வநாதனுடைய உடம்பிலே குண்டு பாய்ந்ததா? அவருடைய ஒப் பற்ற அந்தக் கலை மேனியிலே — ''

''ஐயா! உயிர் பிரியவில்லை. ஆனால் உயிரைவிட அவர் மிகவும் மதித்துப் பாராட்டிய அவருடைய கலைக் கரம், அது அப்படியே கீழே சாய்ந்தது!''

''என்ன பரிதாபம்! எத்தனையோ ஆபத்துக்களிலே வில்வநாதனைப் பிழைக்க விரும்பிய வல்லாளவேலர் கடைசியில் இப்படி — ''

''இவ்வாறு சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் வேறு விதமாகக் கூறுகிறார்கள். சித்திரங்களை அழித்துக் கொண்டிருந்த சிப்பந்திகளை நோக்கி ஒரே ஆவேசத்தோடு வில்வநாதன் பாய்ந்து சாடினார் என்றும், அவரை அப்படியே கையும் காலும் கட்டிப் போட்டு விடும் படி வல்லாளவேலர் உத்தர விட்டார் என்றும் சொல்லுகிறார்கள்.''

''அப்படியானால் துப்பாக்கியின் குண்டிலிருந்து தப்பினாரா வில்வநாதன்?'' என்று ஆவலோடு கேட்டார் ராம் சிங்.

''இல்லை. கையும் காலும் கட்டிப் போடப்பட்ட வில்வநாதனைச் சிங்கம் புத்தூர் மாளிகைக்குக் கொண்டு போனார்கள் என்றும், அங்கே ஜமீந்தார் வில்வநாதனைக் கண்ட மாத்திரத்தில் ஆவேசத்தோடு பொங்கி எழுந்தார் என்றும் சொல்லுகிறார்கள். ஓவியக் கலைஞ னுடைய உயிருக்கு எவ்வித ஆபத்தும் வேண்டாம் என்றும், விபரீதமான கடைசிச் சித்திரத்தை எழுதிய அந்தக் கையை மட்டும் துண்டித்து எடுத்து விடும்படி யாகவும் ஜமீந்தார் கட்டளையிட்டா ராம். இதன் விளைவாக வில்வநாத னுடைய வலது கை துண்டிக்கப்பட்டது என்று வேறு சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிலர் வேறு ஒரு விதமாகவும் சொல்லுகிறார்கள் !'' என்றான் மண்ட பத்து இளைஞன்.

''வில்வநாதன் ஆபத்திலிருந்து தப் பித்துக் கொண்டான் என்று யாராவது சொல்லுகிறார்களா? அதைச் சொல் லுங்கள். பாவம், அந்த மகத்தான ஓவி யனுக்கு இப்படி ஒரு ஆபத்து வந்தது என்றால் அதைத் தாங்க முடியவில்லையே. எத்தனையோ பல ஆபத்துக்களிலிருந்து வில்வநாதனைக் காப்பாற்றிய வேணு சிங்கம் என்ன பாடு பட்டிருப்பார்! செண்பகசுந்தரியின் கதிதான் என்ன ஆகும் !'' என்று கேட்கும்போது லாலா வுக்கும் எனக்கும் மெய்யாகவே துயர மும் ஆவலும் அலைமோதின. இளைஞன் சொன்னான்:

''ஐயா! சித்திரங்களை அந்த முரட்டு மனிதர்கள் அழித்துக் கொண்டிருந்த தைக் கண்டதும் வில்வநாதன் அவர் களோடு வாதாடினார். தயவு செய்து இந்தக் கொடுமையை நிறுத்துங்கள் என்று கெஞ்சினார். ஜமீந்தாருக்கு என் னிடம் கோபம் என்றால், என்னைத் தண்டிக்கட்டும், எனது சித்திரங்களைத் தண்டிக்க வேண்டாம் என்று கதறினா ராம். ஆனால் யாரும் அந்த வார்த்தை

அவசரம்
அவசரம்
அவசரம்

கடுமையான சுரம். உடல் நிலை கவலைக்
கிடமாயிருக்கிறது... உடனே செய்தி அனுப்ப வேண்டும்

அதற்காகவே "ப்ரயாரிட்டி" தந்தி உள்ளது

நோய், விபத்து, மரணம் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் "ப்ரயாரிட்டி" தந்தியை உபயோகியுங்கள்.

எல்லா எக்ஸ்பிரஸ், அவசர தந்திகளைவிட இது வேகமாகப் போய்ச்சேரும். செலவும் அதிகம் இல்லை. வழக்கமான எக்ஸ்பிரஸ் தந்திக்கு உள்ள கட்டணம்தான் இதற்கும்.

தந்தியை அனுப்பும்போது மட்டும் "ப்ரயாரிட்டி" என்று குறிப்பிடுங்கள்

உங்களுக்கு சிறந்த முறையில்
சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் தந்தி இலாகா

DA 60/623

களைப் பொருட்படுத்தவில்லை. இதைக் கண்டதும் வில்வநாதனுக்கு மேலும் ஆத்திரம் எழுந்தது. இதனால் அவருக்கும் வல்லாள வேலருக்கும் கைகலப்பு ஏற்பட்டது என்றும், அந்தச் சந்தர்ப்பத்தில் வேணுலிங்கம் திடீரென்று அங்கே துப்பாக்கியோடு புகுந்தார் என்றும், வேணு துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்ட போது, அந்தக் குறி தவறி வில்வநாதனுடைய வலது தோள்பட்டையிலே குண்டு பாய்ந்து விட்டது என்றும் சொல்லுகிறார்கள். வழக்கு மன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது இப்படியெல்லாம் பல விதமான வரலாறுகள் சொல்லப் பட்டன!'' என்றான் மண்டபத்து இளைஞன்.

''தம்பி! யார் சொன்ன வரலாறு உண்மையாக இருந்த போதிலும், வில்வநாதன் வலது கையை இழந்தார் என்பது மெய்தானா? சித்திரங்கள் எல்லாம் அழிந்ததோடு, பாவம், அந்த ஓவியனுடைய கையும் போய் விட்டதா?''

''ஆமாம்! வில்வநாதன் தமது வலது கையை இழந்தார். இனிமேல் சித்திரம் வரைய முடியாதபடி பாழும் விதி அவருடைய கையை எடுத்து விட்டது. அதோடு நிற்கவில்லை, இந்தச் சுவர்ச் சித்திரங்களின் சோக முடிவு! எந்த வேணுலிங்கம் இத்தனை உதவிகளையும் செய்து, இத்தனை தூரம் பாடுபட்டாரோ, இவ்வளவு உழைத்தாரோ, அவர் தமது உயிரையே இழந்தார்!''

''என்ன! வேணுலிங்கமா? வக்கீலைப் பார்க்கச் சென்றவர் பாதி வழியில் திட்டத்தை மாற்றிக் கொண்டு செண்பக வனத்துக்கு ஓடி வந்தாரே, உயிரைப் பலி கொடுப்பதற்காகவா அப்படி வந்தார்? என்ன பரிதாபம்!'' என்று கேட்டார் லாலா.

''சித்திரங்களை அழிப்பதற்காக வல்லாளவேலரும் அவருடைய ஆட்களும் செண்பக வனத்துக்குப் போயிருக்கிறார்கள் என்று கேட்டதுமே, வேணுலிங்கம் நிலைமைகளை ஊகித்து விட்டார். வன வீட்டுக்கு இந்தச் செய்தி எட்டியிருக்குமானால், நிச்சயம், வில்வநாதன் இதற்குள் நந்தவனத்துக்குப் பாய்ந்தோடியிருப்பார் என்று பட்டது வேணுலிங்கத்துக்கு. அதனால்தான் கடலையாண்டியை வக்கீலிடம் அனுப்பி விட்டு இவர் நந்தவனத்துக்கு விரைந்தோடினார்.. அப்போது வில்வநாதனைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்காக ஆகாசத்தைப் பார்த்து ஒரு குண்டு போட்டார், வேணுலிங்கம். துப்பாக்கிச் சத்தம் வெளியே யிருந்து வந்ததும், கூட்டம் கலைய ஆரம்பித்தது. கூட்டத்தின் மத்தியில் ரத்த வெள்ளத்திலே வில்வநாதன் விழுந்து கிடப்பதைப் பார்த்ததும் வேணுலிங்கத்துக்கு உடம்பு பதறியது. அவருடைய திடமான இதயத்திலே நெகிழ்ச்சி ஒன்று உண்டு என்றால், அது வில்வநாதனிடம் இருந்த எல்லையற்ற பாசந்தான்! அந்தப் பாசம் அவருடைய உடம்பை ஆட்டியது. கையிலே பிடித்திருந்த துப்பாக்கி தளர்ந்தது. 'தம்பி!' என்று பதறியழைத்துக் கொண்டே கீழே விழுந்து கிடந்த வில்வநாதனை நோக்கிப் பாய்ந்தார் வேணுலிங்கம். அப்போது அந்தப் பொல்லாத கிங்கரர் வல்லாள வேலரின் கைத்துப்பாக்கி வேணுவைப் பழி தீர்த்துக் கொண்டது! 'டுமீல்' என்று கிளம்பிய வல்லாளவேலரின் குண்டு வேணுலிங்கத்தின் மார்பு மீது பாய்ந்தது! அப்படியே குண்டு வந்த திசையைப் பார்த்துக் கொண்டே எல்லையற்ற வெறுப்போடு ஒரு துயரச் சிரிப்புச் சிரித்தார் வேணுலிங்கம். தலை தரையிலே சாய்ந்தது! உலகத்தின் கண் முன்பு ஒரு கொள்ளைக்காரராக, ஒரு திருடனாக வளைய வந்த வேணுலிங்கம் அந்த வேடத்தைக் கலைக்காமல், அந்த மாறு வேடத்துடனேயே இந்த உலகிலிருந்து மறைந்தார் . . . .''


இவ்வாறு சொன்னான் மண்டபத்து இளைஞன். அப்போது அவனுடைய கண்களிலிருந்து துன்ப நெடுவெள்ளம் ஆறாகப் பெருகி ஓடியது!

''ஐயா, இந்தச் சித்திர மடலைப் பாருங்கள்! வன வீட்டிலே யிருந்து உல்லாசமாகச் சித்திரங்கள் வரையும்படி கடலையாண்டி கொடுத்தாரே காகித மடல், அதுதான் இதோ இருக்கிறது. சுவர்களிலே வரைந்த சித்திரங்களை வெளியே எடுத்துப் போக முடியாது என்றும், காகித மடலிலே வரைகிற சித்திரங்களைக் கையிலே வைத்துப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம் என்றும் வேணுலிங்கம் ஒரு காலத்தில் சொன்னார் அல்லவா, அந்தச் சித்திர மடல் தான் இதோ என் கையில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறது! ஆனால் இந்தத் துயரச் சித்திரங்களுக்குக் காரணமாக அமைந்த மனிதர்களும், அவர்களுடைய இலட்சியங்களும், அந்த இலட்சியங்களை இயக்கிய மனித மனத்தின் நிறைவேறாத ஆசைகளும் என்ன முடிவை அடைந்தன பாருங்கள்! லாலா மடித்துக் கொடுப்பதற்காக வந்த இந்தப் பழைய காகிதச் சுருளுக்குள்ளே, ஒரு மனித பரம்பரையின் துயரம் அல்லவா பொதிந்திருக்கிறது! அதனால்தான் இக்காகித மடலை என்னிடம் கொடுங்கள் என்று உங்களைக்கேட்டுக்கொண்டேன்!''

இவ்வாறு சொன்னான் அந்த மண்டபத்து இளைஞன்.

"தம்பி! உங்களுடைய துயரத்தை மேலும் கிளறுவதற்காக எங்களை மன்னிக்க வேண்டும். கையை இழந்த ஓவியர் பிறகு என்ன ஆனார். இந்த மடலிலே உள்ள செண்பக சுந்தரியின் எதிர்காலம் என்ன ஆயிற்று. இந்த ஓவியக் கலைஞருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம் — ஆகிய செய்திகளை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? இத்தனை துயரத்துக்குப் பிறகும் இன்னும் வில்வநாதனுடைய இலட்சியங்கள் முற்றிலும் அழிந்து விட்டதாகத் தோன்றவில்லையே எங்களுக்கு! வாழையடி வாழையாகத் தோன்றுகிற கலைப் பரம்பரையிலே, விட்ட குறை தொட்ட குறை என்கிறார்களே அப்படி ஒரு தொந்தம். இந்த நிமிஷத்திலும் நம்மையெல்லாம் சேர்த்து இணைத்து இயக்குகிறது என்றுதான் நாங்கள் நம்புகிறோம். இல்லையென்றால் இந்தத் தாமிரவருணி நதியின் மணற் பரப்பிலே நாம் எதற்காகச் சந்திக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்கு நிச்சயம், ஏதோ பொருள் இருக்கிறது!" என்றேன் நான்.

"இந்தச் சந்திப்புக்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது என்றுதான் நானும் நினைக்கிறேன்!" என்று கூறி மேலே பேசத்தொடங்கினான் இளைஞன். நானும் லாவாவும் ஆவலுடன் அதைக் கேட்கத் தொடங்கினோம். (தொடரும்)



டிபன் வேளை

சாமா

"காமாட்சி! வா, வா! நான் அன்றைக்கு உன்னைக் கூப்பிட்டேன். இன்றுவது வந்து சேர்ந்தாய். ரொம்ப சந்தோஷம். நான் உன்னை இன்று எதிர்பார்க்கவே இல்லை. வா, உள்ளே!" என்று ஊஞ்சலைக் காட்டி அதில் காமாட்சியை உட்காரவைத்தாள் பட்டு மாமி.

இருவரும் கொஞ்ச நேரம் அளவளாவி விட்டு ஓய்ந்தனர். "ஏண்டியம்மா! டிபன் நேரமாச்சே. ஏதேனும் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டாள் பட்டு மாமி.

"அதுக்கென்ன? சாப்பிட்டால் போச்சு" என்று காமாட்சி சொன்னதன் பேரில் பட்டு மாமி சமையல் அறைக்குள் மறைந்தாள். அங்கு உறியில் வைத்திருந்த ஒரு பாத்திரத்தைத் திறந்து அதில் ஆவலோடு எட்டிப் பார்த்து முகமலர்ந்தாள். அவள் முகம் மலரச் செய்தது அதிலிருந்த இரண்டு மைசூர்ப் பாகுக் கட்டிகள்தான். ஒரு மாத மாகப் பாத்திரத்தில் அடைபட்டுக் கடைசியில் விடுதலை கிடைக்கப் போவதை நினைத்து அந்த மைசூர்ப்பாகுக் கட்டிகள் மகிழ்ந்தால் அதில் வியப்பில்லை. அவைகளை எடுத்து ஒரு தட்டில் வைத்துக் காமாட்சி மாமியிடம் கொண்டு கொடுத்தாள் பட்டு. "சாப்பிடு, இதோ வருகிறேன்!" என்று கூறிவிட்டுத் தண்ணீர் எடுத்து வர உள்ளே சென்றாள் பட்டு.

'அடேயப்பா! பட்டு இளகப்பட்டவள் இல்லை என்றால் இந்த மைசூர்ப்பாகும் இளகப்பட்டதல்ல. சற்றேனும் கைக்கு அசைந்து கொடுக்க மாட்டேங்கிறதே....! என்ன பண்ணலாம்? பட்டு திரும்பி வரும் வரையில் நாம் அவற்றைச் சாப்பிடாமல் வைத்திருந்தால் அவள் விடமாட்டாள். எப்படியேனும் அதைத் தின்றுதான் ஆக வேண்டும் என்று வற்புறுத்துவாள்.'

அதனால் அவள் யோசித்தாள். இரண்டு மைசூர்ப்பாகுக் கட்டிகளும் காமாட்சியின் கைப்பையினுள் அடைக்கலம் பெற்றன.

பட்டு மாமி கையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு அங்கு பிரசன்னமானாள். தட்டைப் பார்த்தபடியே பேசினாள். "என்ன அதுக்குள்ளேயா மைசூர்ப்பாகு இரண்டையும் சாப்பிட்டு விட்டாய்?"

"நீ உன் கையாலே மைசூர்ப்பாகு பண்ணினால் கேட்கணுமா?.... ரொம்ப ருசியாக இருந்தது. வாயில் போட்டதுதான் தாமதம்! கரைந்து போய்விட்டது" என்று புகழ்ந்தாள் காமாட்சி.

பட்டு மாமி இந்தப் புகழ்ச்சியை ஏற்றுக்கொள்வது போல் பாசாங்கு செய்தாலும் அவளால் இதை நம்பமுடியவில்லை. 'என்ன இது? அப்படி மிருதுவாக இருந்தால் நானே சாப்பிட்டிருக்க மாட்டேனா?'

"நான் போய் வருகிறேன்! நீயும் உனக்கு ஒழிந்தபோது ஓய்வுநேரத்தில் என் வீட்டுக்கு வரவேண்டும்!" என்று கூறி மைசூர்ப்பாகு போட்ட பையுடன் விடைபெற்றாள்.

இது நடந்து ஒரு மாதத்துக்குப் பின், காமாட்சியின் வீட்டுக்குப் பிற்பகல் ஒரு மணிக்குப் புறப்பட்டுச் சென்றாள் பட்டு.

கொஞ்ச நேரம் அளவளாவிய பின் காமாட்சி உள்ளே சென்று, அதே பழைய இரண்டு மைசூர்ப்பாகுக் கட்டிகளையும் தட்டில் வைத்து எடுத்து வந்தாள். பட்டு மாமியின் எதிரில் அதை வைத்து விட்டுத் தண்ணீர் கொண்டுவர உள்ளே சென்றாள்.

ஜன்னல் வழியாக, பட்டு மாமி மைசூர்ப் பாகுடன் போராடுவதை எட்டிப் பார்த்து ரசித்தவண்ணம் இருந்தாள் காமாட்சி.

'அடடா! இது நம்மை விட்டுப் போச்சு என்று நான் சந்தோஷப்பட்டேன். மறுபடியும் ஒரு மாதம் கழித்து நம்மோடு உற வாட வந்துவிட்டதே!' என்று வியந்தாள் பட்டு. பிறகு, 'அதோ, காமாட்சி தண்ணீருடன் வருகிறாள். என் கைப்பைக்குள் போட்டு விடுகிறேன்' என்று சொல்லி விட்டுப் பைக்குள் அவைகளைச் செலுத்தினாள்.


"அடே! அதுக்குள்ளேயா இரண்டையும் தின்று விட்டாய்?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் காமாட்சி நகைப்புடன்.

"அவைகளைத் தின்ன ஒரு மாதமா ஆகும்? ரொம்ப நன்றாக இருந்தது! நேரமாச்சு. நான் போய்விட்டு வருகிறேன்! மறுபடியும் நீ என் வீட்டுக்கு எப்போ வருவாய்?" என்று கேட்டாள் பட்டு மாமி.

"முடிந்தால் அடுத்த மாதம் வருகிறேன். ஆனால் ஒரு காரியம் நீ செய்யணும்!" என்றாள் காமாட்சி.

"என்ன வேண்டும்?" என்றாள் பட்டு.

"நீ பைக்குள் போட்டிருக்கும் மைசூர்ப் பாகுகளை என்னிடமே இப்பொழுது திருப்பிக் கொடுத்து விடு. ஒரு மாதம் கழித்து அது என்னிடமே மறுபடியும் திரும்பினிடும். நான் ஜாக்கிரதையாய் வைத்திருக்கணும். சரி!" என்றாள் காமாட்சி சிரித்துக் கொண்டே.









FOR POORLY AND
IMPROPERLY NOURISHED
BABIES AND ADULTS


சிருங்கேரி வித்யா சங்கரர்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

இந்நில உலகில் மக்களுக்கு மாத்திரம் அல்லாமல் மற்ற எல்லா உயிர்களுக்குமே மழை மிகவும் இன்றியமையாதது. காலா காலத்தில் பெய்யும் மழையைப் பருவமழை என்போம். ஆனால் இந்த மாரிவளம் குன்றி, சில காலம் மழை பெய்யாமலும் போவது உண்டு. அப்போதெல்லாம் மக்கள் தவிக்கிற தவிப்பையும் அறிவோம். ஏதோ இறை அருளினால், இறைவன் இஷ்டப்பட்ட போது பெய்விக்கும் மழையை, மனிதன் தான் விரும்பியபோது பெற முயற்சி செய்திருக்கிறான். அந்த முயற்சியையே இன்று செயற்கை மழை என்கிறோம். வானில் உலாவும் கார்மேகங்களிடையே ஐஸ் கட்டிகளைக் கொண்டு தூவி, அதன் மூலமாக மழையைப் பெறுவதற்கு முயல்கிறார்கள். இந்த முயற்சியில் மனிதன் இன்னும் முழு வெற்றி பெற்றதாக இல்லை. இதை யெல்லாம் காட்டிலும் இதிகாச காலத்தில் மழையை வருவிப்பதற்கு ஒரு நல்ல வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆம், அந்த ரிஷ்யசிருங்கரை, அவர் இருக்கும் இடத்தைத் தேடிப் பார்த்து, அழைத்து வந்து விட்டால் அவர் வந்த இடத்தில் மழை பெய்யும் என்று தெரிந்திருக்கிறார்கள். அப்படியே அவரை அழைத்து வந்து,தமக்கு வேண்டிய மழையையும் பெற்றிருக்கிறார்கள் என்று நமது பழைய இதிகாசமான ;ராமாயணம் கூறுகிறது. அந்த ரிஷ்யசிருங்கரது வரலாறு சுவையானது.

விபாண்டகர் என்று ஒரு ரிஷி. அவரது மகனாக ஒற்றைக் கொம்புடன் பிறக்கிறார் ரிஷ்யசிருங்கர். பெண்களது கண் வீச்சில் விழாதவாறு விபாண்டகர் தம் மகனை வளர்க்கிறார். பையன் வளர்ந்து பெரியவனாகிறான். இந்தச் சமயத்தில் அங்க தேசம் மழையே இல்லாது வறண்டு விடுகிறது. அங்கதேசாதிபதியான ரோமபாதன் இதனால் மிகவும் கவலையுறுகிறான். மக்களைக் காக்க வகை சொல்லும்படி தன் குல குருவைக் கேட்கிறான். அவரோ 'ரிஷ்யசிருங்கரை உன் நாட்டுக்கு வரச் செய்' என்கிறார். ரிஷ்யசிருங்கரையோ விபாண்டகர் வெளியே அனுப்பவே மாட்டார். அவரை அழைத்து வர ஒரு பெண்கள் படையே செல்கிறது, விபாண்டகரது பர்ணசாலைக்கு. விபாண்டகர் வெளியே சென்றிருந்த நேரத்தில் இந்தப் பெண்கள் ஆசிரமத்துக்குச் சென்று ரிஷ்யசிருங்கருக்குச் சிங்காரக் கலையில் மோகம் வரும்படி செய்து, அவரை அழைத்து வந்து விடுகிறார்கள். ரிஷ்யசிருங்கரது பாதம் பட்ட மாத்திரத்தில், அங்கதேசம் முழுதும் மழை பெய்ய ஆரம்பித்து விடுகிறது. ரோமபாதனும் தன் மகளையே ரிஷ்யசிருங்கருக்கு மணம் முடித்து வைத்து, அவரைத் தன் நாட்டிலேயே இருத்திக் கொள்கிறான். ஆம், நமக்குக் கூட இப்படி ஒரு ரிஷ்யசிருங்கர் கிடைத்தால், வேண்டும்போது மழையை வரவழைக்கும் கலை கைவரப் பெறுவோம் அல்லவா? செயற்கை முயற்சியில் இறங்க வேண்டாம்தானே? இந்த ரிஷ்யசிருங்கரையே அயோத்தி மன்னனான தசரதன் தன் நாட்டுக்கு அழைத்து அவரைக் கொண்டே புத்திரகாமேஷ்டி யாகம் செய்திருக்கிறான். அதன் மூலமாகத்தான், ராம, லக்ஷ்மண, பரத சத்ருக்னர் பிறந்தார்கள் என்பது இதிகாச வரலாறு. இந்த ரிஷ்யசிருங்கர் பின்னர் இருந்து தவம் பண்ணின இடமே ரிஷ்யசிருங்கபுரி. அதுவே இன்று சிருங்கேரி என்று குறுகியிருக்கிறது. நாம் அந்தச் சிருங்கேரி என்னும் திவ்விய ஸ்தலத்துக்கே செல்கிறோம் இன்று.

இத்தலத்துக்கு ரயிலில் செல்ல வேண்டுமானால் ஷிமோகாஸ்டேஷனில் இறங்கி ஐம்பத்திரண்டு மைல் தெற்கு நோக்கிச் செல்ல வேணும். காரில் செல்பவர்கள் கொப்பா என்ற இடத்துக்குச் சென்று மேலும் பதினைந்து மைல் சென்றால் இவ்வூர் வந்து சேரலாம். மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவில் இருப்பதால், செல்லும் வழியெல்லாம் மலைத் தொடர்களும், அடர்ந்த காடுகளும் இருக்கும். மரங்கள் எல்லாம் சந்தன மரங்கள் தான். பிரயாணம் சுகமாக, மணமாக இருக்கும். பத்ராவதிக்குத் தெற்கேயுள்ள தரிக்கெரே ஸ்டேஷனில் இறங்கிக் காரோ, பஸ்ஸோ பிடித்துச் சென்றாலும் சிருங்கேரி சேரலாம். இந்த ஊர் துங்காநதியின் இடது கரையில் இருக்கிறது. துங்கா நதியும் பத்ரா நதியும் இணைந்த பின்னரே துங்கபத்ரை என்ற பெயரோடு ஓடுகிறது என்பதை அறிந்திருப்பீர்கள். இந்தத் துங்க,பத்ரா நதிகளைப் பற்றியும் ஒரு வரலாறு உண்டு. அன்று ஹிரண்யாக்ஷன் என்னும் அசுரன் பூமாதேவியை எடுத்துச் சென்று கடலில் ஒளித்து வைத்துவிட, ஸ்ரீமந் நாராயணன் வராக வடிவில் சென்று ஹிரண்யாக்ஷனுடன் போர் புரிந்து அவனை வென்று பூமாதேவியை மீட்டு வந்திருக்கிறார். வராக அவதாரம் எடுத்தபோது இடது கொம்பால் குத்தி வலது கொம்பால் பூமாதேவியை வெளிக்கொணர்ந்திருக்கிறார். அப்படி பூமாதேவியை வெளிக் கொண்டு வந்த கொம்புகளில் இடது கொம்பு துங்கையாகவும், வலது கொம்பு பத்ரையாகவும் மாறிப் பெருக்கெடுத்தது என்பது கதை. வராக அவதாரத்தின் மூலம் தானே நிலம் உழும் முறை வழக்கத்துக்கு வந்திருக்கிறது? நிலம் உழ, அதன் வளம் பெருக நீரும் ஆறாகப் பெருக வேண்டியதுதானே? அதனால்தானே வராக வடிவில் காத்தற் கடவுள் தன் இரு கொம்புகளால்



வித்யாசங்கரர் கோயில் — சிருங்கேரி

பூமியைக் குத்திக் குடைந்து உள்ளேயுள்ள தண்ணீரை வெளியே கொணர்ந்திருக்கிறார்? இப்படி ஆற்றுப் பெருக்கை ஏற்படுத்திய தையே, ஒரு கதையாக்கி நமக்குத் தந்திருக்கிறார்கள் நமது புராணிகர்கள். இப்படி உருவான துங்கையின் கரையிலே உள்ள சிறிய ஊர் தான் சிருங்கேரி.

சிருங்கேரி என்ற உடனே நமக்கு ஞாபகம் வருவது ரிஷ்யசிருங்கர் கதை அல்ல. சிருங்கேரி என்றதும் சங்கர ஆசார்ய சுவாமிகளின் நினைவும், ஆதி சங்கர பகவத் பாதாள் அங்கு நிறுவிய சாரதா பீடத்தின் நினைவுமே வரும். காலடியில் பிறந்து சிறந்த அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பிய ஆதி சங்கரர் நிறுவிய முக்கியமான மடங்கள் ஐந்து. மைசூர் ராஜ்யத்தில் உள்ள சிருங்கேரி, ஒரிஸ்ஸா ராஜ்யத்திலுள்ள புரி, கத்யவாரிலுள்ள துவாரகை, இமயத்திலுள்ள பதரி, தமிழகத்திலுள்ள காஞ்சிபுரம் என்ற ஐந்து இடங்களிலும் மடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. அதில்சிருங்கேரியில்மடம் ஸ்தாபிக்க நேர்ந்த சம்பவம் இதுதான்; சங்கரர் யாத்திரையில் இந்தத் தலத்துக்கு வந்ததும் இங்கு பிரசவ வேதனையில் இருந்த ஒரு தவளைக்கு, அதன் ஜன்ம விரோதியான பாம்பு ஒன்று படம் விரித்து, நிழல் தந்து, பாதுகாத்து நின்றதாம். இதைக் கண்ட சங்கரர் இதுவே சாந்தி நிலவும் அற்புதமான இடம் என்று உணர்ந்து, இங்கே மடம் நிறுவியிருக்கிறார்.

ஆம், பொதிகையைப் பற்றிப் பாடும் குமர குருபரரும் பாடுகிறாரே:

சிங்கமும் வெங்களிறும் உடன்
விளையாடும் ஒருபால், சினப் புலியும்
மடப்பிணையும் திளைத்திடும்
அங்கொருபால்,

வெங்கரடி மரையினொடும் விளையாடும்
ஒருபால், விடஅரவும் மடமயிலும்
விருந்தயரும் ஒருபால்...

என்று மீனாட்சி அம்மை குறத்தில் பொதிகையைப் பாராட்டியது போல், வாழ் நாள் முழுதும் பகை உணர்வோடு வாழும் இரண்டு ஜீவராசிகள் இணைந்து வாழ்வதைக் கண்டதும், அது மடம் நிறுவத் தகுந்த இடம் என்று சங்கரர் கண்டது வியப்பல்லவே!

பின்னொரு காலத்தில் சிருங்கேரி பீடத்தின் புகழை உன்னத நிலைக்குக் கொணர்ந்த ஆசாரிய வித்யாரண்யர் தாம் விஜய நகர சாம்ராஜ்ய ஸ்தாபனத்துக்கும் பெருதவி புரிந்திருக்கிறார். அப்போது விஜயநகர மன்னனான ஹரிஹரன் இந்தச் சிருங்கேரி கிராமத்தையே ஆசாரிய பீடத்துக்குச் சாஸனம் பண்ணிக் கொடுத்திருக்கிறான். அப்படிக் கொடுத்த 1346-ம் வருஷம் முதல் அது சங்கரர் மடத்தைச் சேர்ந்த ஒரு ஜாகீராகவே இருந்து வருகிறது. விஜயநகர மன்னர்களும் பின்னர் வந்த மைசூர் அரசர்களும் சங்கராச்சாரியரை ஜகத்குரு என்றே கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

ஆதிசங்கரர் தாம் வாதிட்டு வென்ற மண்டனமிச்ரரின் மனைவியான பாரதி சரஸ்வதியின் அம்சமாகவே அவதரித்தவள் என்று கண்டிருக்கிறார். அந்தப் பாரதியின் சாந்நித்யத்தை உறைவித்தே சாரதா பீடத்தையும் இங்கு நிறுவியிருக்கிறார். ஆதியில்சாரதையின்வடிவம் சந்தன மரத்தினால் ஆக்கப்பட்டிருக்கிறது. பின்னர் விஜயநகர மாமன்னர்களின் ஆலோசகராக வாழ்ந்த வித்யாரண்யர், சாரதையின் வடிவத்தைத் தங்கத்தாலேயே செய்து வைத்திருக்கிறார். அம்மூர்த்தியே அந்தப் பீடத்தை இன்றும் அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சந்நிதியில் நவராத்திரி பூஜை சிறப்பாக நடக்கிறது. இந்தச் சாரதா பீடத்துக்குப் பக்கத்திலேயே ஆதிசங்கரருக்கு ஒரு கோயில் கட்டி வைத்திருக்கிறார்கள்.

சிருங்கேரியில் கிட்டத்தட்ட நாற்பது கோயில்களுக்கு மேல் இருக்கின்றனவென்றாலும் இங்குள்ள கோயில்களி லெல்லாம் சிறப்பாயிருப்பது வித்யாசங்கரரது கோயில் தான். இக்கோயில், கட்டடக் கலை அமைப்பில் சாளுக்கியக் கோயில் போல் இருந்தாலும் கோயிலின் உட்புறம் எல்லாம் திராவிடச் சிற்ப முறையை அநுசரித்திருக்கிறது என்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது. கோயில் கிழக்கே பார்த்த கோயில். கருவறையை ஒட்டி ஒரு மண்டபம். இதைச் சுற்றி ஒரு பிராகாரம். இதை முந்திக் கொண்டு நவரங்க மண்டபம் பதினெட்டு அடி உயரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அம்மண்டபத்தின் விதானத்தில் எட்டு அடி சதுரத்தில் பத்மம் ஒன்று அழகாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. அதன் இதழ்களைக் கொத்திக் கொண்டிருக்கும் கிளிகள் எல்லாம் அழகு வாய்ந்தவை. கருவறையைச் சுற்றியுள்ள கோஷ்டங்களில் பிரம்மா, சரஸ்வதி, லக்ஷ்மிநாராயணன், உமாமகேசுவரனது வடிவங்கள் இருக்கின்றன. கிழக்கு வாயிலுக்கும் தெற்கு வாயிலுக்கும் இடையில் உள்ள சுவரில் இந்திரன், யமன்,

ராமர், வியாசர், துர்க்கை, சனி முதலிய வர்களின் வடிவங்கள் இருக்கின்றன. இன்னும் மன்மதன், அன்னபூரணி, ஹரிஹரர் முதலிய அபூர்வ வடிவங்களையும் காணலாம். எல்லாவற்றையும் தூக்கி அடிக்கும் வகையில் நவரங்க மண்டபத் தூண்கள் இருக்கின்றன. இருக்கும் பன்னிரண்டு தூண்களும், பன்னிரண்டு ராசிகளைக் குறிக்கின்றன. இதில் அதிசயம் என்னவென்றால், அந்தந்த ராசியில், சூரியனது கிரணங்கள் அந்த அந்த ராசிக்குரிய தூண்களின் மேலில் விழுவது தான். கட்டடக் கலையில் அதி நுட்பமான முறையில் தூண்களும், மண்டபமும் அமைத்திருப்பது போற்றுதற்குரியது. இன்னும் மகா மண்டபத்தின் வடப்பக்கத்தில் உருக்காய் செய்யப்பட்ட சனி பகவானின் படிமம் ஒன்றிருக்கிறது. சனி பகவானின் பார்வைக்குத் தப்ப விரும்புபவர்களெல்லாம் அவரை எண்ணெய்க் காப்பு செய்து வழிபடுகிறார்கள். இந்தச் சனி பகவான் பக்கத்திலே ஹரிஹரனும் நிற்கிறார். இந்தக் கோயிலின் மூலவர் லிங்கவடிவில் வித்யாசங்கரர் என்ற திருநாமத்தோடு இருக்கிறார். வித்யாரண்யர் ஞாபகார்த்தமாக, அவரது சிஷ்யர் பாரத தீர்த்தர் பிரதிஷ்டை செய்திருக்கிறார்.

இந்த வித்தியாசங்கரர் கோயிலுக்குமேல் புறம் சிறு கோயில்கள் பல இருக்கின்றன. இவை யெல்லாம் சங்கர மடத்து ஆசாரியர்களது சமாதிகளின் பேரில் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளையே 'சமாதி குடி' என்று சொல்லுகின்றனர். குடி என்றால் கன்னடத்தில் சிறு கோயில் என்று அர்த்தமாம். இந்தச் சமாதி குடிகளுக்கு மத்தியிலே ஒரு குடியில் இருப்பவரை மலையாள பிரம்மா என்கின்றனர். ஐந்து அடி உயரத்தில் அவர் இருக்கிறார். ஆதியில் பிரம்மா ராக்ஷஸனாக இருந்தவர் என்றும் அவர் 'போதும் போதும்' என்று சொல்லும் வரையில் உணவருத்துவதாகச் சொல்லி வித்யாரண்யர் இங்கு அவரை நிறுத்தியதாகவும் கர்ண பரம்பரை கூறுகிறது. இது காரணமாகவே இங்கு நடக்கும் விழாக்களில் எல்லாம், இந்த மலையாள பிரம்மாவுக்கு நைவேத்தியம் பிரமாதமாக நடக்கிறதாம். வித்யாசங்கரர் கோயிலுக்கு வடபுறம் ஜனார்த்தனனுக்கு ஒரு கோயில். அதற்கும் கொஞ்சம் வடக்கே சக்தி கணபதியையும் வாகீசரையும் வித்யாரண்யர் உபாசனை பண்ணி வந்திருக்கிறார். மைசூரை ஆண்ட திப்புசுல்தானும் அவனது தந்தை ஹைதர் அலியும் அவர்களது காலத்திலிருந்த பீடாதிபதியை மிகவும் கௌரவித்து வந்திருக்கிறார்கள். தங்கள் பகைவர்களை வெல்ல, பீடாதிபதிகளைக் கொண்டு சத சண்டிஹோமம் சகஸ்ரசண்டிஹோமம் எல்லாம் செய்திருக்கிறார்கள். இன்னும் வித்யாரண்யரது வரலாற்றைக் கூறும் செப்புப் பட்டயங்கள் பல இருக்கின்றன. வித்யாரண்யர் அதிசய சக்தி வாய்ந்தவராக இருந்திருக்கிறார். ஊமைகளைப் பேசச் செய்திருக்கிறார். 1386-ல் விதேகமுக்தி யடைந்த இந்த வித்யாரண்யரை ஹம்பியில் விருபாக்ஷரது கோயிலுக்குப் பக்கமே அடக்கம் செய்து கோயில் கட்டியிருக்கிறார்கள். அத்தலம் போகும் போது அதனைப் பார்த்துக் கொள்ளலாம்.



உடல் வளைவுகளுக்கேற்றபோல் அமுக்கப்பட்ட ஆசனமும், முதுகுச்சாய்மானமும் மகிழ்ச்சியூட்டும் வசதியை அளிக்கக்கூடிய உறுதியான எஃகு குழாயினால் செய்யப்பட்ட உலோகப் பாகங்களெல்லாம் வாட்டி பெடுக்கும் முறையில் எனமல் பூசப்பட்டுத் துருப்பிடிக்காமல்' செய்யப்பட்ட நாற்காலியை வாங்குங்கள்.

சிறந்த தரத்தில் அடுக்கடுக்காக

- ஒவ்வொரு உலோகப் பகுதியும் 'பான்பரைஸ்' செய்யப்பட்டது. துருப்பிடிக்காமல் வாட்டி எனமல் பூசப்பட்டது.
- ஆசனம் மற்றும் முதுகுச் சாய்மானத்தின் அமைப்பு அதிக வசதியை அளிக்கிறது.
- ஈரத் துணியைக்கொண்டே துடைத்து எளிதில் சுத்தமாக வைத்துக்கொள்ளலாம்.
- மடக்குவதற்கு விசேஷ அமைப்பு.
- வழுக்கிவிடாத, தரையைக் கீறாத ரப்பர் அடிகள் கொண்டது.
- பல்வேறு வர்ணங்களில் கிடைக்கக்கூடியது.

CROMELITE
MANUFACTURING

ஆயிரம் காலம்
ஆள்வதற்கு

தயாரிப்போர்:

க்ரோம் லைட் (இந்தியா) பிரைவேட் லிட்.

பி-35 இந்தியன் எக்ஸ்சேன்ஜ் ப்ளேஸ், கல்கத்தா-1

விநியோகஸ்தர்கள்:

மெஸ்ஸர்ஸ் அடிஸன் & கோ. லிட்., சென்னை, பெங்களூர். மெஸ்ஸர்ஸ் பாவா க்ளாஸ் & க்ரோக்கரீஸ் பிரைவேட் லிட். சென்னை, பெங்களூர், எர்ணாகுளம், ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்., சென்னை, பெங்களூர், செகந்தராபாத். மெஸ்ஸர்ஸ் மஹமத் இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., சென்னை, பெங்களூர், ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ரோனியோ லிட்., சென்னை, ஹைதராபாத். மெஸ்ஸர்ஸ் ஸ்பென்ஸர் & கோ லிட்., 1/153, மவுண்ட் ரோடு, சென்னை.

பத்தினிக்கோட்டம்

அத்தியாயம் பதினேழு

வெண்ணெய் திரண்டது

துடிக்கும் மனத்துடன் திரும்பிப் பார்த்தாள் இளங்கோப்பிச்சி. துயரப் புகை படிந்திருந்த அவள் வதனம் அந்த ஒரே விநாடியில் புத்தொளி பெற்று மலர்ந்தது. மகிழ்ச்சிப் பரவசமடைந்தவளாய் அங்கிருந்து முன்னே பாய்ந்தோடத் தன் கால்களைப் பெயர்த்தவள் சட்டென்று நின்று, அநந்தமதியின் கரங்களைப் பற்றி அவள் காதில் ஏதோ இரகசியமாகச் சொன்னாள். திகிலடைந்து முகம் வெளிறி நின்றிருந்த அந்த மூதாட்டியும் அவள் சொன்னதைக் கேட்டு வியப்புடன் கண்களை அகல விரித்தாள். பிறகு சோழ இளவரசியை அணைத்து அழைத்துக் கொண்டு பின்புற வாசற் பக்கமாக விரைந்தாள்.

கூண்டு வண்டியிலிருந்து இறங்கிய வாலிபன் அந்த இல்லத்தின் சித்திரத் திண்ணையோரம் வந்து தயங்கி நின்றான். கூலவாணிகன் போலிருந்த அவன், வேறு யாருமல்ல; பல்லவ இளவரசன் கோவிந்தவர்மனேதான்!

கோடைப் பகல் மழைக்குப் பின் வெளுத்த வானிலே தோன்றும் இந்திர தனுசுபோல் எழிற் பிம்பமாய் விளங்கிய இளங்கோப்பிச்சி மெல்லக் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டுத் தன் வைர மீன் கண்களை மலர்த்தி நிமிர்த்தி அவனை ஆவல் பொங்கப் பார்த்து, ''வாருங்கள், இளவரசே!'' என்றாள் கன்னற் சுவை சொட்டும் கனிவுக் குரலில்.

களைத்துச் சோர்ந்து நின்றுகொண்டிருந்த கோவிந்தவர்மன், ஏதோ சஞ்சீவிப் பானம் பருகியவன் போல் உற்சாக மலர்ச்சியுடன் நிமிர்ந்தான். தன்னை மறந்த நிலையில் அவளையே ஒரு கணம் விழியசைக்காமல் பார்த்தான். அவனது களை பொருந்திய முகத்தில் வாலிபத்தின் பரிபூரண கவர்ச்சிப் புன்னகை கம்பீரமாகப் படர்ந்து ஒளிர்ந்தது. ''சோழ இளவரசியார் நன்னலம்தானே?'' என்று ஆழ்ந்த அன்புக் குரலில் கேட்டுக் கொண்டே இடைகழிப் படிமீது ஏறினான் அவன்.


மகிழ்ச்சி மேவிய நாணத்துடன் அழகோவியமாய் நெளிந்து குழைந்து நின்றிருந்த இளங்கோப்பிச்சி ஏனோ துணுக்குற்றுத் தலைநிமிர்ந்தாள். அவள் கண்கள் பீதியால் படபடத்துச் சுழன்றன. சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு மிடுக்குடன் ஓரடி முன் வந்து அவனை அலட்சியமாக ஏறிட்டு நோக்கி, ''யாரய்யா நீர்? உமக்கு என்ன வேண்டும்?'' என்று கீச்சுத் தொனியில் அதட்டிக் கேட்டாள்.

அவளுடைய இந்தத் திடீர் மிரட்டலால் திக்கித் திணறிவிட்ட கோவிந்தவர்மன் தன் பார்வையை மெள்ளப் பின்னால் திருப்பினான். அந்த இல்லத்துக்கு நேரெதிரே செல்லும் சாலையோரமிருந்த மரத்தடியில் சளுக்கிய வீரர்கள் இருவர் தம் குதிரைகளுடன் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் அங்கே களைப்பாறுவதற்காக இறங்கினார்களா, அல்லது தன்னைக் கவனிப்பதற்காக நிற்கிறார்களா என்பதை அவனால் அநுமானிக்க முடியவில்லை. இளங்கோப்பிச்சியின் மிரட்டலுக்குரிய காரணத்தைப் புரிந்து கொண்ட அவன், அவளைப் போலவே அலட்சியமாக நிமிர்ந்து நின்று, ''என்ன அம்மே, இப்படிக் கேட்கிறாய்? நேற்றுத்தானே ஏழு குறுணி நெல் அளந்து விட்டுப் போனேன்? அதை இதற்குள்ளாகவா மறந்து விட்டாய்? சரி, சரி; எனக்குச் சேர வேண்டிய இருபது கழஞ்சுப் பொன்னை எண்ணி வை! நான் பல்லவபுரம் நாளங்காடிக்குப் போக வேண்டும்!'' என்று உரத்த குரலில் கடுகடுத்துச் சொன்னான்.

ஜெகசிற்பியன்

''இருபது கழஞ்சுப் பொன்னா? என்னய்யா இது, பித்தலாட்டம்? நேற்று நீர் அளந்துவிட்டுப் போனது இரண்டு குறுணி நெல்தானே? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்?'' என்று சீறினாள் இளங்கோப்பிச்சி.

''அநியாயம், அநியாயம்! ஏழு குறுணியை வாங்கிக்கொண்டு இரண்டு குறுணி என்கிறாயே, இது அடுக்குமா அம்மே?'' என்று கையை ஆட்டிக்



கூப்பாடு போட்ட கோவிந்தவர்மன், ''எங்கே உன் மாமன் இளங்காரிக்குடையான்? அவரைக் கூப்பிடு. பேசிக் கொள்கிறேன்!'' என்றான் ஆக்ரோஷமான குரலில்.

''அவர் எங்கே இருக்கிறார்? ஆடு பிடித்து வர வெளியூர்ச் சந்தைக்குப் போயிருக்கிறாரே!''


''எப்போது வருவார், அம்மே?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர் வந்ததும் அவரிடமே காசு வாங்கிக் கொள்; போ!'' என்று வெடுக்கெனக் கூறிக்கொண்டே வீட்டினுள் சென்று கதவைப் படீரென்று சாத்தினாள் இளங்கோப்பிச்சி.

''ஓகோ! இந்த ஏமாற்றுப் பேச்சு என்னிடம் பலிக்காதம்மே! எவ்வளவு நேரமானாலும், எனக்குச் சேர வேண்டிய நெல் கிரயத்தை வாங்காமல் இங்கிருந்து நகரவே மாட்டேன்!'' என்று அங்கலாய்ப்புடன் கூவிக்கொண்டே தன் தலையில் கட்டியிருந்த சிவப்புக் கச்சையை அவிழ்த்து உதறித் திண்ணையைத் தட்டி விட்டு அதில் தாவியேறி உட்கார்ந்து கொண்டான் கோவிந்தவர்மன்.

கொன்றை மரத்தடியில் நின்று இந்த வாய்ச் சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சளுக்கிய வீரர்கள் தமக்குள் ஏதோ பேசி நகைத்தவர்களாய்ப் புறப்பட்டுச் சென்றனர்.

ஓங்கிப் பெருமூச்சு விட்டுத் தலை நிமிர்ந்த கோவிந்தவர்மன் மெல்லச் சிரித்தவாறு, சாத்திக் கிடந்த கதவைத் தட்டினான். இரண்டு மூன்று முறை தட்டியும் கதவு திறக்கப்படவில்லை. களைப்பும் சோர்வுமாகச் சுற்று முற்றும்



பார்த்து விட்டு, அந்தச் சித்திரத் திண்ணை மீதே சுகமாகச் சாய்ந்து கொண்டான். பல நாட்கள் உறக்கமின்மையால் நலிவடைந்திருந்த அவன் கண்ணிமைகள் ஒன்றுடன் ஒன்று உறவு கொள்ள முயன்றன. அரை நாழிகை நேரத்துக்குப் பின், அந்த இல்லத்து வலப்பக்க வேலியோரம் செழிப்பாக வளர்ந்து நின்ற கொகுடிச் செடியொன்றின் (ஒருவகை முல்லை) மறைவிலிருந்து வெளிப்பட்ட சோழ இளவரசி, அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து சாலையின் கடைக் கோடி வரையில் தன் பார்வையை ஓட்டிப் பார்த்தாள். புழுதி பறியப் புரவியைச் செலுத்திச் சென்ற அவ்விரு சளுக்கிய வீரர்களும் ஏரிக் கரைக்கு அப்பால் போய் மறைந்து விட்டிருந்தனர். மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்த அவள், வாயிலை நோக்கி ஓடி வந்தாள்.



சித்திரத் திண்ணையில் சாய்ந்து கொண்டிருந்த கோவிந்தவர்மன், அவள் அங்கு வந்ததை உணர்ந்ததாகத் தெரியவில்லை. உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட ஓர் அவச நிலையில் இருப்பவன் போல் பாதி விழிகளை மூடியவாறு சலனமற்றுக் காணப்பட்டான். வெண் சங்கு நிறமொத்த அவனது சுந்தர வதனத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பியிருக்க, ஈரப் பசையோடிருந்த சிவந்த உதடுகளில் நெஞ்சைக் கவரும் இளநகையொன்று மென்மையாகத் தவழ்ந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில் அவனைக் கண்ட இளங்கோப்பிச்சிக்கு நெஞ்சம் நெகிழ்ந்து விட்டது. ஏக்கமும் இரக்கமும் பொங்கிப் பெருமூச்சாக வெளிப்பட, இடைகழித் தூண் ஒன்றில் சாய்ந்து கொண்டு அவனையே சற்று நேரம் கண்ணிமைக்காமல் பார்த்

தாள். வனப்பு மிக்க அவளது நெஞ்சகங்கள்விம்மித்தாழ்ந்தன. தன்பூவுடலை நெட்டுயிர்த்து நிமிர்ந்த அவள் ஓசைப்படாமல் நடந்து போய் அவனருகில் நின்றாள். அப்போதும் அவன் அசையாச் சிலையெனச் சாய்ந்தே கிடந்தான்.

அவள் மெல்லக் குனிந்து அவனது நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் தன் பூப்போன்ற மென்விரல்களால் இதமாக வழித்துத் துடைத்தாள். அரைத்துக் குழைந்த சந்தனத்தின் சீதளத் தன்மை வாய்ந்த அவளுடைய கர ஸ்பரிசத்தால் சிலிர்ப்புற்றுக் கண் விழித்து நிமிர்ந்தான் கோவிந்தவர்மன். தன்னை மறந்த கிறக்க நிலையில் பசலைக் கொடியெனத் துவண்டு நின்ற அவள், அவனது திண்ணிய தோளின்மீது தன் கஞ்சமலர்க் கரங்களைத் துவளப் போட்டபடி அவனைப் பட்டும் படாததுமாகப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள். அந்த மதுர மோகனப் புன்னகையில் மெய்ம்மறந்துவிட்ட அவனும் அவளை விழியிமை தட்டாமல் அண்ணாந்து நோக்கினான்.

கன்னற்சுவை நொடிகள் சில கரைந்து மறைந்தன!

சாத்தியிருந்த கதவின் தாழ் திறக்கும் ஒலி கேட்டுச் சட்டென்று விலகிப் போய் நின்றாள் இளங்கோப்பிச்சி. ஆனால், தாழ்நீக்கிய கதவைத் திறந்துகொண்டு யாரும் வெளியே வரவில்லை. நாணத்தால் கன்னம் குழிந்து சிவக்கத் தலை குனிந்த அவள், "காலம், இடம், சூழலை மறந்து இப்படியா உறங்குவது? கண்ணில் எண்ணெயை விட்டுக்கொண்டு சுற்றித் திரியும் சளுக்கியப் புலிகளின் பார்வையில் பட்டு விட்டால் என்ன செய்வது?" என்றாள் பொய்க் கோபத்துடன்.

"நானா தூங்கினேன்? யார் சொன்னது? என் இதய தேவதையை வருவிப்பதற்காகத் தவமல்லவா இயற்றிக் கொண்டிருந்தேன்!" என்று குறும்புக் குரலில் கூறிக் குறுநகை புரிந்தான் கோவிந்தவர்மன். "அப்படியே நான் தூங்கிப் போனாலும், எனக்கு யாதொரு சங்கடமும் நேராமல் காத்து இரட்சிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அன்புத் தெய்வம் ஒன்று இங்கே விழிப்புடன் இருந்துகொண்டிருக்கிறதே, அப்புறம் எனக்கென்ன கவலை?"

இளங்கோப்பிச்சி இதைக் கேட்டுக் கலீரெனச் சிரித்துக்கொண்டே அவன் அருகில் நெருங்கி வந்து இரகசியக் குரலில் கூறினாள்: "உங்கள் காவல் தெய்வத்தின் கண்காணிப்பையும் மீறிப் போகும் வகையில் இப்போது காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இளவரசே! கோட்டைச் சிறையிலிருந்து உங்களை வெளிக் கொண்டு வந்த நம் இளங்காரிக்குடையான் மீது சளுக்கிய அதிகாரிகளுக்கு ஏதோ சந்தேகம் தட்டிவிட்டிருக்கிறது. சற்று முன் அவர்கள் திடீரென்று வந்து அவரைப் பற்றி விசாரித்துவிட்டுச் சென்றார்கள்."

கோவிந்தவர்மன் இதைக் கேட்டு யோசனையில் ஆழ்ந்தான். பிறகு அலட்சியமாகத் தன் தோளைக் குலுக்கிக் கொண்டு, "ஹூம்! இதெல்லாம் நாம் எதிர்பார்த்தது தானே?" என்றவன் அந்தச் சாலை வழியே பல்லவபுரத்தை நோக்கிச் சளுக்கிய வீரனொருவன் புரவிமீது வெகு வேகமாகப் போய்க் கொண்டிருப்பதைக் கவனித்து, "இன்று என்ன, இங்கு சளுக்கிய வீரர்களின் நடமாட்டம் அதிகமாயிருக்கிறதே?" என்று கரகரத்த குரலில் கேட்டான்.

"காலை முதலே இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். காரணம் புரியவில்லை. ஒருகால், அவர்கள் வரித் தண்டல் செய்யக் கிளம்பியிருக்கலாம்."

"என்ன! வரித் தண்டலா?"

"ஆமாம்" என்று தலையசைத்த இளங்கோப்பிச்சி, சற்று நேரத்துக்கு முன்னால் அநந்தமதியிடம் சளுக்கிய அதிகாரிகள் வந்து வரி வசூல் செய்து கொண்டு போன விவரத்தை ஆத்திரத்துடன் கூறினாள். பல்லவ இளவரசன் அதைக் கேட்டு மனம் குமுறிப் பொங்கினான். தாங்கொணா அவமானமுற்றவன்போல் முகம் சுருங்கிக் கறுக்க, தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான். சில விநாடிகளுக்குப் பின் சட்டென்று நிமிர்ந்து, "இளங்கோப்பிச்சி! நீ என்ன சொன்னாய்? எங்கள் ஆபத்துதவி வீரனின் தாயான அநந்தமதி இங்கேயா இருக்கிறாள்? கடந்த வாரம் நான் கோட்டைச் சிறையிலிருந்து தப்பி வந்தபோது, அவள் பெருவள நல்லூர் சேதியக் கலைஞரின் சமையற் பணிப் பெண்ணாகப் போயிருக்கிறாள் என்றல்லவா சொன்னாய்?" என்று தன்னை மீறிய துடிப்புடன் கேட்டான்.


"ஆம், இளவரசே! இன்று காலை தான் அந்த அம்மை இங்கு வந்தாள்."

"அவள் ஏன் பெருவளநல்லூரை விட்டு ஆலம்பாக்கத்துக்கு வந்தாள்?"

பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன் சேதியக் கலைஞரின் இல்லத்தில் தலைமறைவாகத் தங்கியிருப்பதையும், அங்கு எதிர்பாராதவிதமாக ஆந்திர இளவரசி உத்தமசீலி வந்து சேர்ந்ததையும், அவளுக்கு ஏற்பட்ட பயணத் தடங்கலையும், அதனால் அவள் பல்லவ மன்னனைப் பார்க்க நேர்ந்து அவனைப் பற்றி அறிய



பின்னியின்
தூய பட்டுப் புடவை
உங்கள் தோற்றத்தை
அழகுறச் செய்கிறது
ஜார்ஜெட், ஷிப்பான், மற்றும் மென்பட்டு ரகங்களில் கிடைக்கும்.
பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர்-2
பின்னி & கம்பெனி (மதறாஸ்) லிமிடெட்
ஸ்தாபனத்தின் ஒரு கிளை
JWT/BM/55-1983 a



அநந்தமதியிடம் முயன்றதையும், அதன் பொருட்டு சேதியக் கலைஞர் அநந்த மதியை உடனே தம் இல்லத்திலிருந்து வெளியேற்றி விட்டதையும் விளக்க மாகக் கூறிய இளங்கோப்பிச்சி, "இந்த விவரங்களெல்லாம் உங்களுக்குத் தெரி யாதா இளவரசே?" என்று வினவினாள்.

"ஓரளவு அறிவேன்......" என்று ஏதோ யோசனையில் விரக்தியுடன் சொன்னான் கோவிந்தவர்மன்.

"அப்படியானால் பரமேசுவர வர் மரை நீங்கள் இன்னும் பார்க்க வில்லையா?"

அவன் மறுமொழி கூறாமல் மௌன மாயிருந்தான்.

ஒரு கணம் தயங்கிய சோழ இளவரசி அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கிய வாறு, "என் தந்தையாரையும், சந் திரலேகைச் சிற்றரசர் பெரும்பிடுகு முத்தரையரையுமாவது பார்த்தீர்களா, இளவரசே?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டாள்.

"மண்டகப்பட்டு குகைக்கோயிலில் அவர்களைச் சந்தித்தேன்" என்றான் கோவிந்தவர்மன் உற்சாகமற்ற குரலில்.

"நம் ஆபத்துதவி வீரர்களான இளங் காரிக்குடையானும் சம்புவராயனும் கூட அங்கு வந்திருந்தார்களா?"

"அவர்களையும் சந்தித்தேன். பிறகு சம்புவராயன் தன் மன்னரோடு பழை யாறைக்குப் போய் விட்டான். இளங் காரிக்குடையான் எனக்குத் துணையாக என்னோடு வந்தான்."

"அவர் ஏன் இங்கு இன்னமும் வந்து சேரவில்லை?"

"பெருவளநல்லூரில் வைத்து ஒரு கூலவாணிகனின் வண்டியில் நான் ஏறிக் கொண்ட பிறகு அவ்வண்டிக்குப் பாது காப்பாக அவன் முன்னும் பின்னுமாய் வந்து கொண்டிருந்தான். அப்புறம் ஆலம்பாக்கம் எல்லையை அடைந்த போது அவன் என் கண்ணில் படவில்லை. எங்கு சென்றான் என்றும் தெரியவில்லை."

"என் தந்தையார் என்னைப் பற்றி ஏதேனும் விசாரித்தாரா, இளவரசே?"

"உன்னைப் பிரிந்துள்ளதால் ஏற் பட்ட துன்பம் அவருடைய குணத் தையும் போக்கையுமே மாற்றி விட் டிருக்கிறது என்று நினைக்கிறேன்!"

இளங்கோப்பிச்சியின் அழகிய நீலக் கண்கள் கலங்கிக் குளமாயின. "ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?"

"உன்னுடைய உதவியால்தான் நான் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையி லிருந்து தப்பி வர முடிந்தது என்ற விவரத்தைக் கேட்டு அவர் மகிழ்ச்சி யடைவதற்குப் பதிலாக அதிர்ச்சியே அடைந்தார்."

"நல்ல வேடிக்கைதான்! உங்கள் மாதுலரின் மனப்போக்கை நீங்கள் இன்னும் சரியாகக் கணிக்கவில்லை போலிருக்கிறது. என் தந்தையார் எந்த விஷயத்தைக் கேட்டு மகிழ்ச்சி யடைய மறுக்கிறாரோ, அதுவே அவ ருக்கு மிகவும் உகப்பானதாயிருக்கும். 'இப்படியொரு நல்ல காரியத்தை நாம் செய்யவில்லையே' என்று அவர் உள்ளூற வருத்தப் படும்போது அந்த வருத்த உணர்ச்சியே அதை எதிர்க்கும் பேச்சாக வெளிப்பட்டு விடும். ஒரு கலைஞனின் மகத்தான படைப்பை இன்னொரு கலைஞன் குறைத்துப் பேசுவதும், ஒரு கவிஞனின் சிறந்த பாடலில் இன்னொரு கவிஞன் குற்றங் கண்டு கூறுவதும், ஒரு வீரனின் அரிய செயலை இன்னொரு வீரன் அலட்சியப்படுத்துவதும் இல்லையா? தம்மால் சாதித்திருக்கக் கூடிய ஒரு காரியத்தைத் தமக்கு முன் இன்னொரு வர் சாதித்து விட்டாரே என்ற தாளா மையுணர்ச்சியால் எழும் சௌந்தர்ய எதிர்ப்புக்கள் இவை! இவற்றைக் கொண்டு, இவர்களை அவர்கள் உண் மையாகவே எதிர்த்துக் குறைத்து மதிக் கிறார்கள் என்று நாம் எண்ணி விட லாமா?" என்றாள்.

அவளுடைய இந்த வித்தார வாதத் தைக் கேட்ட கோவிந்தவர்மன் உள் ளூற வியந்துகொண்டான் என்றாலும், அதை ஒப்புக் கொள்ள மறுப்பவன் போல் தலையசைத்தான். "சோழ இளவரசி தன் தந்தையாரின் மனப் போக்கைப் பற்றி அளந்து கூறியது நேற்று வரையில் சரியாகவே இருக்க லாம். ஆனால், இன்று அது முற்றிலும் மாறியிருக்கிறது என்பதே என் கருத்து. இல்லையானால், நான் செய்த ஒரு பெரும் தவற்றின் காரணமாய் என் தமையனு ருக்குப் பல இக்கட்டுகள் நேர்ந்திருக்க லாம் என்ற நிலைமையில், அவரைப் போய்ப் பார்க்க நானும் சந்திரலேகைச் சிற்றரசரும் அவசரமாக அழைத்த போது, அவர் எங்களுடன் வரப் பயந்து, ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிப் பழையாறைக்குத் திரும்பிப் போய் விட்டிருப்பாரா?"

இளங்கோப்பிச்சியின் முகம் வாடித் துவண்டது. "வேங்கி இளவரசியும் சளுக்கியத் தளபதியும் சேதியக் கலைஞ ரின் இல்லத்துக்கு வந்ததால், அங்கு தலைமறைவாயிருக்கும் பரமேசுவர வர்ம ருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக் குமோ என்பதை அறிய என் தந்தை யார் உங்களுடன் வர மறுத்து விட் டார் என்கிறீர்கள், அப்படித்தானே?"

"அதுதான் காரணம் என்று நாங்கள் நினைக்கிறோம்! நாடு, நகரம், ஆட்சி,

அதிகாரம் ஆகிய அனைத்தையும் இழந்து பஞ்சைப் பராரியாக ஒளிந்து கிடக்கும் பரமேசுவரவர்மருடன் உறவு கொண்டிருப்பதைவிட, எல்லாம் வல்ல ஏகாதிபதியான விக்கிரமாதித்தனுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்வதில் எத்தனையோ நன்மை உண்டு என்று உன் தந்தையார் எண்ணியிருக்கலாம்! அவரைப் பொறுத்தவரை அது தவறல்லவே?''

சோழ இளவரசி இந்தக் குத்தல் மொழியைக்கேட்டுப் புழுவாய்த் துடித்து விட்டாள். ''இளவரசே! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்; தயவுசெய்து இன்னொரு முறை இப்படிப்பட்ட கூரம்பான சொற்களைச் சொல்லி என் நெஞ்சைப் புண்ணாக்காதீர்கள்! என் தந்தையார் ஒருபோதும் இத்தகைய இழிவான மனநிலைக்கு மாறியே இருக்க மாட்டார்! இது நிச்சயம், நிச்சயம்!'' என்று விம்மினாள்.

அவளுடைய பரிதாப நிலையைக் கண்டு மனம் பதறிப்போன கோவிந்தவர்மன் சட்டென்று அவள் கரத்தைப் பற்றித் தன் மார்பில் புதைத்துக் கொண்டு, ''இளங்கோப்பிச்சி! என்ன இது சிறுபிள்ளைத்தனம்? உன்னைவிட உன் தந்தையாரைப் பற்றி நான் நன்கு அறிவேன்! இந்தப் பழம் பெருமை வாய்ந்த நாட்டின் மானாபிமானத்தில் அவருக்கு இல்லாத அக்கறையா எங்களுக்கு வந்துவிடப் போகிறது? அவர் எங்களுடன் வரத் தயக்கம் காட்டியதற்கு, பரமேசுவரவர்மரின் நலனைச் சார்ந்த வேறு ஏதேனும் ஒரு காரணமாகவும் இருக்கலாம்! அப்படியும் நாங்கள் நினைத்துப் பார்க்கத் தவறவில்லையே!'' என்றான் பரிவுப் புன்னகையுடன்.

இளங்கோப்பிச்சிக்கு இப்போதுதான் போன உயிர் திரும்பி வந்த மாதிரி இருந்தது. அவள் தன் செந்தூர வண்ண அதரங்களை நெளித்து அழகாக முறுவலித்தாள். சற்று நேர மௌனத்துக்குப் பின், ''அது சரி, இளவரசே! மண்டகப்பட்டிலிருந்து பெருவளநல்லூருக்குப் புறப்பட்டுப் போன நீங்கள் பரமேசுவரவர்மரைச் சந்தித்தீர்களா? அவருடைய நிலைமை என்ன? அது பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!'' என்று வினவினாள்.

பெருமூச்சு விட்டுத் தலைகுனிந்த கோவிந்தவர்மன் கம்மிய குரலில், ''நான் பெருவளநல்லூருக்குப் போகவில்லை! சந்திரலேகைச் சிற்றரசர் மட்டுமே சேதியக் கலைஞரின் இல்லத்துக்குப் போயிருக்கிறார்'' என்றான்.

''நீங்கள் ஏன் பரமேச்வரவர்மரைப் பார்க்காமல் வந்து விட்டீர்கள்?''

''நான் அவரைப் பார்க்க விரும்பவில்லை....''

''இளவரசே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம், இளங்கோப்பிச்சி! பரமேசுவர வர்மரின் அருமை அன்னையாரும், என்னைத் தம் சொந்த மகனைப்போல் வளர்த்து ஆளாக்கிய என் அன்புத் தாயாருமான காடவன்மாதேவி போற்றிநங்கைப் பிராட்டியார் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையில் சிறைப்பட்டிருக்க, நான் மட்டும் அங்கிருந்து தப்பி வந்திருக்கிறேன்! இந்த நிலையில் என் தமையனாரின் முகத்தில் எப்படிப் போய் விழிப்பேன்? அப்படியே போனாலும் அவர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?''—துக்க மேலீட்டால் பேச முடியாமல் திணறினான் கோவிந்தவர்மன்.

இளங்கோப்பிச்சிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மனம் குழம்பி நின்றாள் அவள்.

ஏதோ யோசனையில் மூழ்கிக் கற்சிலையாய் அமர்ந்திருந்த கோவிந்தவர்மன் மெல்லத் தலைநிமிர்ந்து, ''இளங்கோப்பிச்சி! எங்கள் முன்னறி தெய்வமான காடவன் மாதேவிப் பிராட்டியாரைச் சிறையிலிருந்து மீட்க ஓர் அருமையான திட்டத்தோடும் அதற்கான சாதனத்தோடும் இங்கு வந்திருக்கிறேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை நீதான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ள வேண்டும். உன்னால்தான் அது சாத்தியமாகும். உன் இதய அன்பனுக்காக அதை நீ சாதித்துத் தருவாயா?'' என்று கெஞ்சும் குரலில் கேட்டுக் கொண்டே, தன் இடுப்பில் மறைத்துச் செருகி வைத்திருந்த — வேங்கி இளவரசியின் சிவிகையிலிருந்து கவர்ந்து வந்த — அந்தப் பட்டோலைச் சுருளை வெளியே எடுத்தான். அதே சமயம், அவனுடைய கையை மற்றொரு வலுமிக்க இரும்புக் கரம் வெடுக்கெனப் பற்றி வீட்டின் உள்ளே இழுத்தது; இதனால் நிலைதடுமாறிப் போன கோவிந்தவர்மன் கதவுக்குப் பின்னால் தடாலெனச் சாய்ந்தான். அவன் கையிலிருந்த பட்டோலைச் சுருள், இளங்கோப்பிச்சியின் காலடியில் போய் விழுந்து உருண்டது.

அதிர்ச்சியுற்று மிரண்டு நின்ற இளங்கோப்பிச்சி அந்தப் பட்டோலைச் சுருளை அவசரமாக எடுத்துக்கொண்டு நிமிர்ந்தாள். அடுத்த விநாடி அவள் மீண்டும் ஓர் அதிர்ச்சிக்கு உள்ளானாள்.

ஆமாம்; அவ்வீட்டின் எதிரேயுள்ள சாலையோரத்தில் வராகச் சின்னம் பொறித்த ஓர் அழகிய சிவிகை வந்து நிற்க, அதன் திரையை விலக்கி வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் வேங்கி இளவரசி உத்தமசீலி!


அடைந்தேன் வெற்றி!
அசல் மைகோ ஸ்பேர் பார்ட்ஸ் உபயோகித்து பராமரிப்புச் செலவை குறையுங்கள்
120%
110%
100%
90%
80%
70%
60%
50%
40%
30%
MICO
மோட்டார் இண்டஸ்டிரீஸ் கம்பெனி லிட்.,
பெங்களூர்
விற்பனை நிலையங்கள்: பம்பாய்-2, 41, குவீன்ஸ்ரோடு.
கல்கத்தா-15, 91A, பார்க் வீதி.
சென்னை-2, 1/155, மவுண்ட்ரோடு.
கம்பெனி, 44, ஜன்பத்.

அத்தியாயம் பதினெட்டு

தாழி உடைந்தது

சித்திரத் திண்ணையில் அமர்ந்திருந்த கோவிந்தவர்மனை வீட்டுக்குள்ளே இழுத்து மறைத்துக் கொண்டவன் இளங்காரிக்குடையான் என்பதையும், ஆந்திர இளவரசி உத்தமசீலியுடன் மற்றச் சளுக்கிய வீரர்கள் வருவதைப் பார்த்தே அவன் அவ்வாறு செய்திருக்கிறான் என்பதையும் புரிந்துகொண்ட இளங்கோப்பிச்சி, நெஞ்சம் நடுங்கினாள். பெருவளநல்லூரிலிருந்து பல்லவபுரத்துக்கு ஆந்திர இளவரசி வரப் போகிறாள் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டு அவளை வரவேற்று அழைத்துப் போகத்தான் இன்று காலை முதலே அந்தச் சாலையில் சளுக்கிய வீரர்களின் கண்காணிப்பு உலா நடந்திருக்கிறது என்பதையும் இப்போது அவள் தெரிந்து கொண்டாள்.

சிவிகையின் முன்னும் பின்னுமாக நின்ற சளுக்கிய வீரர்களில் ஒருவன் இளங்கோப்பிச்சியை நோக்கிச் செருக்குடன் வந்து, ''அம்மணி! எங்கள் வேங்கி இளவரசியாரின் தாகசாந்திக்கு நல்ல இளநீராக ஒன்று வேண்டும்; பறித்துக் கொள்ளலாமா?'' என்றான்.

பேசவும் சக்தியற்றுப் போன இளங்கோப்பிச்சி அவனைப் பயப்பிராந்தியுடன் விழித்துப் பார்த்தாள்.

''நீ கொடுத்து வைத்தவள் அம்மணி! இல்லையானால், இன்று எங்கள் இளவரசியாரைத் தரிசிக்கும் பாக்கியம் உனக்குக் கிடைத்ததுமல்லாமல், அவர் உன் வீட்டு இளநீரைப் பருகவும் விரும்பியிருப்பாரா?''

இளங்கோப்பிச்சி இதைக் கேட்டு உள்ளூறச் சினந்து பொங்கினாள். சிவிகை இருக்கும் பக்கம் மெல்லத் திரும்பினாள். அங்கு நின்ற காவல் வீரர்கள் அவ்வளவு பேரும் அவளையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அதைத் தவிர இன்னொரு காட்சி அவளுக்கு மிகவும் வியப்பை அளித்தது. ஆமாம்; இளவரசியின் சிவிகைக்குப் பின்னால் தனியே நின்றிருந்த ஒருவன், தாமரைப் பூ வடிவிலிருந்த மர ஆசனமொன்றைத் தலையில் சுமந்து கொண்டிருந்தான். அவனைப் பார்க்க மிகமிகப் பரிதாபமாக இருந்தது.

அந்த ஆசனத்தை அவன் ஏன் சுமந்து கொண்டு நிற்கிறான்?—

''நான் கேட்டது காதில் விழவில்லையா, அம்மணி?'' என்று கடுமையான குரலில் அதட்டினான் சளுக்கியன்.

''இளநீர் தானே? பறித்துப் போங்கள்!'' என்று நடுங்கிக் குழறினாள் அவள்.

உடனே தென்னை மரமொன்றில் தாவியேறிய சளுக்கிய வீரன், பச்சைப் பசிய இளநீர்க்காயைப் பறித்துச் சீவி எடுத்து வந்து, ''இந்தா, அம்மணி! இதை நீயே கொண்டுபோய் எங்கள் இளவரசியாருக்குக் கொடு! உனக்குச் சொந்தமான பொருளை உன் கையால் வழங்குவதுதான் நியாயம்!'' என்றான் கோணல் சிரிப்புடன்.

அநியாயக்காரர்கள்தான் தர்ம நியாயத்தைப் பற்றி அழகாகப் பேசுவார்கள் என்று எண்ணிக் குமுறிய இளங்கோப்பிச்சி, அவன் வேண்டுகோளை மறுக்கத் துணிவின்றி — தலைக்கு வந்த ஆபத்து தெங்கிளநீரோடு போகட்டும் என்ற முடிவுடன் — தன் கையிலிருந்த பட்டோலைச் சுருளை இடுப்பில் செருகிக்கொண்டு, இளநீர்க் காயை ஏந்தியவாறு, ஆந்திர இளவரசியின் சிவிகையை நோக்கித் துவள நடந்து சென்றாள்.

பட்டுத் திரையை இடக் கரத்தால் விலக்கிப் பற்றிக்கொண்டு சிவிகையில் அமர்ந்திருந்த உத்தமசீலி, தன் குவளை மலர்க் கண்களை மலர்த்தி அவளைக் குறுகுறுவெனக் கூர்ந்து நோக்கினாள். தும்பியின் சிறகுகள் துடிப்பதுபோலக் காயாம் பூக் கண்ணிமைகள் படபடக்க, ஒல்கி ஒடுங்கி வந்து நின்ற இளங்கோப்பிச்சியும் அவளை மெல்லத் தலைநிமிர்ந்து பார்த்தாள். மேற்கில் ஒரு முழு மதியும், கிழக்கில் ஒரு நிறை நிலாவும் தோன்றி ஒன்றையொன்று எதிர்ப்பட்டு வந்து சந்தித்தாற் போல் இருந்தது இந்த அரிய காட்சி!

வட்ட மதியை அரைத்துக் குழைத்து வானத் தாரகையைப் பொடித்துத் தூவி உருவாக்கிய கந்தர்வப் பதுமை போல் விளங்கிய ஆந்திர இளவரசியின் அற்புதப் பேரழகைக் கண்டு இளங்கோப்பிச்சி வியப்பின் எல்லையைத் தொட்டாள். பிரம்ம சிருஷ்டித் திறனெல்லாம் ஒருங்குசேர்ந்து, அதற்குமேல் ஒன்றுமில்லையென்று எல்லை கட்டி விட்டாற் போல், அத்தனை பேரெழிற் பாவையாய் நின்ற இளங்கோப்பிச்சியைப் பார்த்துப் பிரமிப்பில் ஆழ்ந்தாள் ஆந்திர இளவரசி.

இதுவரை நடுங்கியொடுங்கி நின்ற இளங்கோப்பிச்சி சட்டென்று நிமிர்ந்தாள். 'இவளைப்போல் நானும் ஓர் இளவரசி தானே?' என்ற செருக்கான எண்ணம் உந்தியதால்தான் அவள் அவ்வாறு மிடுக்காகத் தலைதூக்கினாள். தன் கையிலிருந்த இளநீரை ஆந்திர இளவரசியின் எதிரே அலட்சியமாக நீட்டினாள்.

ஒண்முல்லைப் பல்வரிசை ஒளிகாட்டத் தண்ணென்று முறுவலித்த உத்தமசீலி, அவ்விளநீரை வாங்கிப் பருகி முடித்து விட்டு நிமிர்ந்து, ''நன்றி, சகோதரி! உன் உதவிக்கு மிக்க நன்றி!'' என்று நிந் கனைக் குரலில் கூறிக்கொண்டே அவளை இதமாக ஏறிட்டு நோக்கியவள், ஏனோ திடுக்குற்று அதிர்ந்தாள். இதைக் கவனியாத இளங்கோப்பிச்சி சர்வ அலட்சியத்துடன் அங்கிருந்து திரும்பி நடந்தாள்.

சற்றைக்கெல்லாம் ஆந்திர இளவரசியின் சிவிகை புறப்பட்டுச் சென்றது.

சாலையைக் கடந்து வீட்டின் வேலியோரமிருந்த ஒரு பவழமல்லி மரத்தடியில் போய் நின்ற இளங்கோப்பிச்சி, மெல்லப் பின்னால் பார்த்தாள். உத்தமசீலியின் சிவிகை தொலை தூரத்துக்கு அப்பால் சென்று மறைய, அச்சிவிகையுடன் சென்ற சளுக்கியக் காவல் வீரனொருவன் குதிரைமீது வெகு வேகமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

சோழ இளவரசியை மீண்டும் பயம் பற்றிக் கொண்டது. ஏதும் செய்யத் தோன்றாமல் திகைத்து நின்றாள் அவள்.

அம்பெனப் பாய்ந்து வந்த புரவி அவள் எதிரே திமிறவிட்டு நின்றது. கீழே குதித்து இறங்கிய சளுக்கிய வீரன் பணிவோடு அவளை நோக்கி, ''அம்மணி! எங்கள் இளவரசியார் உன்னிடம் ஏதோ ஓர் ஓலையைக் கைதவறுதலாகக் கொடுத்து விட்டாராம்; அதைத் திரும்ப வாங்கிக் கொண்டு வரச் சொல்லி என்னை அனுப்பியிருக்கிறார்'' என்றான் மூச்சு முட்டும் குரலில்.

இளங்கோப்பிச்சி இதைக் கேட்டு வெலவெலத்துப் போனாள்.

'இது என்ன, விந்தை! அவள் நம்மிடம் எந்த ஓலையையும் கொடுக்கவில்லையே! கோவிந்தவர்மனின் கையிலிருந்து தவறி விழுந்த அந்தப் பட்டோலைச் சுருளைத்தானே என் இடுப்பில் செருகி வைத்திருக்கிறேன்? இதைப் பார்த்து விட்டுத்தான் அவள் தன் காவல் வீரனை அனுப்பிக் கேட்கிறாளோ? அவ்வாறானால் இது யாருடைய ஓலை? இதில் அப்படி என்ன முக்கிய சேதி இருக்கும்?' — ஒன்றும் புரியாமல் குழம்பித் தவித்த அவளுக்குத் தலை சுற்றுவதுபோல் ஆகி விட்டது.

''சீக்கிரம் கொடு, அம்மணி! எனக்கு நேரமாகிறது!'' என்று படபடத்தான் சளுக்கிய வீரன்.

அதைக் கண்டு இளங்கோப்பிச்சி நடுங்கித் துடித்தாள்.

'இப்போது என்ன செய்வது? இந்த ஓலைச் சுருளை இவனிடம் கொடுத்து விடலாமா? அல்லது ஆந்திர இளவரசி தன்னிடம் ஓலை எதையும் கொடுக்க வில்லை என்று கூறிவிடலாமா? அப்படிக் கூறினால் அதன் விளைவு என்ன ஆகும்? இந்த முரட்டுச் சாளுக்கியன் வீட்டினுள் புகுந்து சோதனையிட முயன்றால், உள்ளே மறைந்திருக்கும் கோவிந்தவர்மர் அகப்பட்டுக் கொள்வாரே!' — அவள் சட்டென்று தன் இடுப்பில் செருகி வைத்திருந்த பட்டோலைச் சுருளை எடுத்து அவனிடம் நீட்டி, ''இதோ பாருங்கள் ஐயா, இதுதான் என்னிடம் இருப்பது. ஆனால், இதை உங்கள் இளவரசியார் என்னிடம் கொடுக்கவில்லை. சற்று முன் எங்களிடம் நெல் கிரயம் வசூல் செய்ய வந்த கூலவாணிகன் ஒருவன் மறந்து வைத்து விட்டுப் போனதை எடுத்து வைத்திருக்கிறேன். வேண்டுமானால் இவ்வோலையை வாங்கிப் போங்கள்'' என்றாள் குழறிய குரலில்.

சந்தேகத்துடன் அவளை விழித்துப் பார்த்த சளுக்கிய வீரன், அரை மனத்தோடு அந்த ஓலையைப் பெற்றுக் கொண்டு தன் புரவியை வளியெனச் செலுத்திச் சென்றான். (தொடரும்)



உனக்குத் தெரியுமா ?

ஐ. நா. என்று அடிக்கடி பேசப்படுகிறதே அது என்ன என்று தெரியுமா உனக்கு? ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்பது இதன் முழுப்பெயர். இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் அமைக்கப்பட்டது இது. உலக நாடுகளிடையே சண்டை இல்லாமல் செய்து சமாதானத்தை நிலை நிறுத்துவதே இந்த ஸ்தாபனத்தின் நோக்கம். இதைத் தவிர உலக மக்களுக்குத் தேவையான உணவு, உடை, கல்வி, வைத்தியம் ஆகியவைகளைப் பூர்த்தி செய்வதும் இதன் நோக்கமாகும். ஒவ்வொருவருடமும் இந்த ஸ்தாபனம் மூன்று மாத காலத்துக்குப் பொதுச் சபையைக் கூட்டி விவாதிக்கும். இதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்கள். இதில் இப்போது அங்கம் வகிக்கும் மொத்த நாடுகள் 109. இந்தப் பொதுச் சபை விசேஷ அதிகாரங்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்திருக்கிறது. இதற்கு 'ஸெக்யூரிடி கவுன்ஸில்'—பந்தோபஸ்து சபை என்று பெயர்.

கண்டவர் யாரோ ?


கீழ்க் குறிப்பிட்டுள்ளவைகளைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளையும் அவர்களுடைய நாடுகளையும் சொல்ல முடியுமோ ?—முயன்று பாருங்கள்!

1. சைக்கிள்
2. ஏர் — கண்டிஷனிங்
3. லைன் டூரயாய்டு
4. சினிமாஸ்கோப்
5. டைனமைட் (வெடிமருந்து)
6. எலெக்ட்ரிக் பல்ப்
7. பவுண்டன் பேனா
8. சினிமா ப்ரொஜெக்டர்
9. நைலான்
10. ராக்கெட்
11. தையல் மிஷின்
12. நீர்மூழ்கிக் கப்பல்

தொகுத்தளித்தவர் : அ. வசந்தா

விடைகள் :—

1. மாக்மில்லன் — ஸ்காட்லாந்து
2. காரியர் — அமெரிக்கா
3. ஜான் ஹியாட் — அமெரிக்கா
4. ஹென்றிக்ரீட்டியன் — பிரான்ஸ்
5. ஆல்பிரட் நோபல் — ஸ்வீடன் (நோபல் பரிசை ஏற்படுத்தியவர்)
6. எடிஸன் — அமெரிக்கா
7. வாட்டர்மேன் — அமெரிக்கா
8. எடிஸன் — அமெரிக்கா
9. காரோதர்ஸ் — அமெரிக்கா
10. காடார்டு — அமெரிக்கா
11. எலியஸ் ஹோவ் — அமெரிக்கா
12. ஜான் ஹாலண்ட் — அமெரிக்கா



இவ்வாரத்திய உங்கள் ஆல்பத்துக்கு இதோ நிற்கிறாரே இவர் [யார் தெரியுமா? கிரேக்க நாட்டுக் காவல் படை வீரர். வெள்ளைச் சராய், சட்டை, ரத்தச் சிவப்பு நிறத்தில் மேலங்கி (படத்தில் கறுப்பா யிருப்பது) அணிந்து கம்பீரமாக நிற்கும் இவரை உங்கள் ஆல்பத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்!

எப்படி வேலை செய்கிறது?

தீயணைக்கும் கருவி


சினிமாக் கொட்டகைகளிலும், தொழிற் சாலைகளிலும் இதோ அருகில் இருப்பதைப் போன்ற ஒரு பெரிய சிவப்பு கூராப்பூந்திப் பொட்டலம் சுவரில் மாட்டி வைத்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அது தீயணைக்கும் கருவி என்று மட்டும் தெரியுமே யொழிய உங்களில் அனேகருக்கு அது எப்படித் தீயை அணைக்கிறதென்று தெரியாது இல்லையா? அது இயங்கும் சமயத்திலும் பார்த்திருக்க முடியாது.



காற்று என்பது பிராண வாயுவும், நைட்ரஜனும் அதிக அளவிலும் மற்றச் சில வாயுக்கள் குறைந்த அளவிலும் கொண்டு ஆக்கப்பட்ட கலவை என்று உனக்குத் தெரியும். குறைந்த அளவு வாயுக்களில் முக்கியமானது கரியமில வாயு. இதற்கு நிறமோ, வாசனையோ கிடையாது. தனிக் கரியமிலவாயு காற்றைவிடக் கனமானது. நீரைப் போல் இதை ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்துக்கு ஊற்றலாம். எரியும் பொருள்களை அணைக்கும் அபூர்வமான சக்தி இதற்கு உண்டு. இதை வகுப்பறையில் உன் உபாத்தியாயர் சோதனை மூலம் விளக்கிக் காட்டியிருப்பாரே? வாஷிங் சோடாவுடன் கந்தகாமிலத்தைக் கலந்தால் கரியமில வாயு ஏராளமான அளவில் வெளிப்படும்.

தீயை அணைக்கும் ஆற்றலும், கனமும் உடையதாதலால் தீயணைக்கும் கருவிக்குள் இதை உற்பத்தி செய்யும்படி அமைத்திருக்கிறார்கள். வீர்யமுள்ள வாஷிங் சோடா கரைசலை (5) தீயணைக்கும் சாதனத்துக்குள் நிரப்பி இருக்கிறார்கள். சிறு துவாரம் செய்யப்பட்ட ஓர் உலோகக் குழாய்க்குள் (2) கந்தகாமிலக் கண்ணாடிப் பாட்டிலை இரண்டுக்கும் தொடர்பு ஏற்படாதபடி (3) பாதுகாப்பாகப் பொருத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சாதனத்தின் அடியில் இருகு போன்ற ஒரு குமிழ் (4) இருக்கிறதல்லவா? தீ விபத்தின்போது இந்தச் சாதனத்தைச் சுவரிலிருந்து கழற்றிப் பூமியில் பலமாக அந்தக் குமிழியைத் தட்டினால் அதனுடு இணைக்கப்பட்டுள்ள கந்தகாமில பாட்டில் அது உடைத்து அமிலத்தை வெளியேற்றும். வெளிப்பட்ட அமிலம் தன்னைச் சூழ்ந்துள்ள வாஷிங் சோடாக் கரைசலோடு கலக்கவே ஏராளமான கரியமில வாயு உற்பத்தியாகும். இந்த வாயு இந்தச் சாதனத்தின் மேல் புற முள்ளசிறு துவாரத்தின் (1) வழியே வெகு வேகமாக வெளியேறும். இதைத் தீயின் மீது காட்டுவார்கள். கனமுள்ள இந்த வாயு தீயின் மீது விழுந்து படிந்து அமுக்கும். இதற்கு எரியும் பொருளை அணைக்கும் திறமையும் உண்டே! சினிமாக் கொட்டகையில் நீ பார்க்கும் அச் சிவப்பு நிற உலோகக் கும்பாச் சிக்குள்ளென்னஇருக்கிறது; அது எப்படி வேலை செய்யும் என்றுதெரிகிறதா?



காட்டுக்குள்ளே

குரைக்கும் மான்

அதோ துள்ளித் தாவிப் பாய்ந்து ஓடிவருகிறதே அதுதான் குரைக்கும் மான். உணர்ச்சி வசப்பட்டாலோ, பீதி யடைந்தாலோ இந்த வகை மான் கரகரப்பான குரலில் ஒருவிதமாகக் குரைக்கும். அதனால் தான் இதற்கு இந்தக் காரணப் பெயர். சீனு, இந்தியா, பர்மா, மலாயா ஆகிய நாடுகளில் இது காணப்படுகிறது — வெவ்வேறு பெயர்களில். இதன் முகத்தில் விநோதமான கோடுகளைக் காணலாம்.

இந்திய வகைக் குரைக்கும் மான்கள், மான் இனத்திலேயே மிகச் சிறியவை. நிமிர்ந்து நின்றால் அதன் தோள் வரை இரண்டடிக்கும் குறைவாகவே இருக்கும். இதன் மெல்லிய பலமற்ற கால்களோடு ஒப்பிடும்




போது இதன் உடல் கனமானது. ஓடும் போது தலை தாழ்வாகவும் உடலின் பின்பகுதி உயர்ந்தும் காணப்படுவது சற்று விகாரமாகவே இருக்கும். இந்த வகை ஆண் மான்களுக்குத்தான் கொம்பு உண்டு. கொக்கி போல இருக்கும். இதன் நீளம் மூன்றிலிருந்து நான்கு அங்குலத்துக்கு மேலிராது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இது பயன்படுவதில்லை. இதன் மேல்தாடையில் நீண்ட கோரைப் பற்கள் உண்டு. இதன் உதவியால் தன் விரோதிக்கு இது காயமுண்டு பண்ண முடியும்.

சூரியோதயத்திலும், அஸ்தமன சமயத்திலும் இது தொடர்ந்து குரைக்கும். இந்தச் செய்கையினுல் இது தன் இருப்பிடத்தை வேட்டையாடுபவர்களுக்குக் காட்டிக் கொடுத்து மாட்டிக் கொள்ளும்.

ஆனந்த நடமாடும் அந்துருண்டை


நாப்தலின் பால் என்ற அந்துருண்டையை நாட்டியமாட வைக்க முடியுமா உங்களால்? இதோ, நான் சொல்கிறபடி செய்யுங்கள். அது நடனமாடுவதைக் காணலாம். ஒரு பெரிய கண்ணாடித் தம்ளரில் நீரை நிரப்பிக் கொண்டு அதில் கொஞ்சம் எலுமிச்சம் பழ ரசத்தை ஊற்றிக் கலக்குங்கள். பிறகு சமையலுக்குப் பயன்படும் சோடா உப்பை அதில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுக் கலக்குங்கள். இல்லா விட்டால் பொங்கி வழியும். கொப்புளங்கள் விட்டுப் பொங்கும் இந்தக் கலவையில் நாலைந்து அந்துருண்டைகளைப் போடுங்கள். முதலில் இவை அடியில் போய் உட்கார்ந்து விடும். கொஞ்ச நேரங் கழித்து ஒவ்வொன்றாக நீர் மட்டத்துக்கு மேலே ஆடியபடி மிதந்து வரும். உங்களை எட்டிப் பார்த்ததும் மறுபடி அடியில் போய் உட்கார்ந்து கொள்ளும்! ஆனால் இது அங்கேயே இருக்கும் என்கிறீர்களா? அதுதான் இல்லை. மறுபடியும் உங்களைக் காண நீர் மட்டத்துக்கு வரும். திரும்பவும் கீழே போகும், மேலே வரும்! இப்படியே இந்த நாப்தலின் உருண்டைகள் நர்த்தனமாடுவதைக் காண உங்களுக்கு வியப்பாக இருக்கும்.

இது எப்படி ஏற்படுகிறது? மேலும் கீழும் ஓடி விளையாடும் அந்துருண்டைகளை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும். நீரில் மூழ்கிக் கீழே போகும் உருண்டையின் மீது சிறு சிறு கொப்புளங்கள் வந்து ஒட்டிக் கொள்ளுவதைக் காண்பாய். இவை கரியமில வாயுக் கொப்புளங்கள். சோடா பாட்டிலை உடைத்தால் பொங்கி வருமே, அது என்ன? கரியமில வாயு இல்லையா? அதே கரியமில வாயு முடிச்சுக்கள் தான் இந்த நாப்தலின் உருண்டையின் மீது ஒட்டிக் கொண்டிருப்பதும். சின்னச் சின்ன பலூன் போன்ற இவை அந்த உருண்டையைத் தூக்கிக் கொண்டு மேலே கிளம்புகின்றன. மேல் பரப்புக்கு வந்ததும் உருண்டையில் ஒட்டிக் கொண்டிருந்த பலூன்களில் பல உடைந்து வாயு வெளியேறி விடுகிறது. மீதமுள்ள கரியமில வாயு பலூன்களால் அந்துருண்டையைச் சுமக்க முடிவதில்லை. ஆகவே கனந் தாங்காமல் அந்துருண்டை மறுபடி கீழே வருகிறது. ஆனால் கீழே வந்ததும் புதிய பலூன்கள் அதன் மீது வந்து ஒட்டிக் கொண்டு மேலே தூக்கிக் கொண்டு கிளம்புகின்றன.




கரியமில வாயுக் கொப்புளங்கள் சோடா உப்பிலிருந்து உற்பத்தியாகின்றனவே தவிர அந்துருண்டையிலிருந்தல்ல. அந்துருண்டையின் பக்கங்கள் ரொம்ப வழவழுப்பாக இருந்தால் காற்றுக் கொப்புளங்கள் ஒட்டிக்கொள்ள முடியாது. ஆகவே அதன் பக்கங்களைக் கொஞ்சம் சொர சொரப்பாக்கினால் நாட்டியம் விக்கினமில்லாமல் நடைபெறும், நீயும் ரசித்து மகிழலாம். 'எங்கே அந்துருண்டை? கொண்டா இப்படி!' என்று அங்கு யாரோ அதிகாரம் செய்வது காதில் விழுகிறது!

உன் கண் உன்னை ஏமாற்றினால்...!



ஒன்றே போலச் சில தவளைகளையும், ஒற்றை வெடிகளையும் இங்குள்ள படங்களில் பார்க்கிறீர்கள் இல்லையா? ஆனால் நீங்கள் நினைப்பது போல அவை எல்லாமே ஒரேமாதிரி இருக்கவில்லை. சட்டென்று பார்ப்பதற்கு அப்படித் தோன்றினாலும் அவைகளை உற்றுக் கவனித்தால் அவற்றின் அமைப்பில் சிறு மாறுபாடுகளைக் காண்பீர்கள். ஆனால் தவளைகளில் இரண்டும், ஒத்தை வெடிகளில் இரண்டும் மட்டும் அமைப்பில் ஒரே மாதிரியாக இருக்கின்றன. அது எவை என்று கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.

விடை :— தவளைகளில் மூன்றும் எட்டும், ஒத்தை வெடிகளில் இரண்டும் எட்டும் ஒரே மாதிரியானவை.









போர்முனை

அத்தியாயம் 18

கொரில்லா

ஒரு மாதமாய்ச் சோம்பிக் கிடந்த புஜங்களையும் கால்களையும் இயக்கி மும்முரமாக வேலை வாங்குவதென்பது கடினமாய்த் தானிருந்தது. மைக்கேல் அதற்காக வடிவேலுவைக் கோபித்துக் கொள்ளாததுடன் அனுதாபமும் காட்டினான். அசிரத்தையாகக் கார் ஓட்டி அவனைக் காயப்படுத்தி விட்டதற்காக எரிந்து விழப் போகிறான் மைக்கேல் என்று எதிர்பார்த்திருக்கும் போது அதற்கு நேர்மாறாக அவன் பரிவு காட்டியது ஆச்சரியமளித்தது வடிவேலுவுக்கு. 'போலீஸார் தன் மீது தவறில்லை என்று தீர்மானித்தபிறகு மைக்கேல் என்ன செய்வான் பாவம்! தண்டனை தர வழியில்லையாதலால் தட்டிக் கொடுத்து நல்லவனாய் நடிக்கிறானா? அல்லது உண்மையாகவே தன்னிடத்தில் அவனுக்கு அபிமானம் உண்டா?'

''கால்களுக்கு ரொம்பவும் தொந்தரவு கொடுக்காதே, வடிவேலு! இன்னும் கொஞ்ச நாட்களுக்கு விட்டுப்பிடி'' என்றான் மைக்கேல்.

''ஆமாம்! என்ன அவசரம் இப்போது? ஜப்பானியன் வந்து சேருவதற்குள் இன்னும் இரண்டு தடவைகள் கால்களை ஒடித்துக் கொண்டு சொஸ்தப்படுத்திக் கொள்ளவும் அவகாசம் இருக்குமென்று தோன்றுகிறதே!''

''அவனாகவே படையெடுத்து வர வேண்டும் என்று காத்திருப்பது போன்ற அசட்டுத்தனம் வேறில்லை.''

''நாமாகவே அவனை வலுச்சண்டைக்கு இழுக்க வேண்டுமென்கிறீர்களா ?''

''கண்டிப்பாக! ராணுவத் தளவாடங்களைத் தயாரிக்கும் நுணுக்கங்களையும் போர் முறைகளையும் ஜெர்மனியாரிடமிருந்து கற்றுக் கொண்டு, விமானங்களையும் குண்டுகளையும் ஜப்பானியர் செய்து குவித்துக் கொண்டிருக்கையில் நாம் சும்மா விழித்துக் கொண்டு நிற்பதா? இப்படிப் பலமான யுத்த ஆயத்தங்களைச் செய்து கொள்ள அவர்களை அனுமதித்து நம்மை அவர்கள் தாக்கும் வரையில் பொறுத்திருப்பதா? தாய்லாந்து மீது படையெடுக்கும் 'மடடார்' திட்டத்தை உட்கார்ந்த இடத்தில் சர்ச்சை செய்வதிலே நம் தளபதிகள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழித்து விடுவார்கள் போலிருக்கிறது.''

''நடுநிலைமை வகிக்கும் நாட்டினுள் நம் படைகள் நுழைந்தால் ஆக்கிர

பிப்பு செய்த தேசமாகப் பிரிட்டனை உலகம் கருதாதா? தூரக்கிழக்கில் யுத்தத்தை ஆரம்பித்து வைத்ததே பிரிட்டன்தான் என்ற பழி ஏற்படாதா? ஜப்பானுடன் நாமே சண்டையை இழுத்து விட்டுக் கொண்டால் அமெரிக்கா நமக்கு உறுதுணையாக நிற்காது என்ற அச்சமும் நிலவுகிறதல்லவா?''

''டாம் இட்!'' என்று வைதான் மைக்கேல். மைதானத்தில் ஓர் ஓரமாய் இருந்த ரோட்ரோலர் கல் உருளையின் மீது உட்கார்ந்து 'பைப்'பைப் பற்றவைத்துக் கொண்டான். ''யுத்த தந்திரம் வேறு; அரசியல் வேறு. எனக்கு அரசியலைப் பற்றி அக்கறை இல்லை. நடுநிலைமை வகிப்பதாய்க் கூறிக் கொண்டு தாய்லாந்து தன் தென்பகுதியில் சாலைகளையும் பாலங்களையும் செப்பனிட்டுக் கொண்டிருப்பது எல்லாருக்கும் தெரியும். கனமான டாங்குகளையும் மற்ற ராணுவ வாகனங்களையும் தாங்குமளவுக்குச் சக்தியுள்ளவையாய்ப் பாலங்களை அமைக்கிறார்கள் என்றும் ஜப்பானியரின் தூண்டுதலின் பேரில்தான் இவையெல்லாம் நடைபெறுகின்றன என்றும் ஊகிக்க இடமிருக்கிறது. வேறென்ன காரணம் வேண்டும், நாம் போர் தொடுப்பதற்கு?''

''உத்தரவிடுங்கள்! இதோ கிளம்பி விடுகிறேன்'' என்ற வடிவேலு, விஷமப் புன்னகையுடன் 'அட்டென்ஷ'னில் நின்று சல்யூட் அடித்தான்.

''நான் சொல்வதெல்லாம் உனக்கு மட்டுமல்ல; இங்குள்ள பிரிட்டிஷ் தளபதிகள் பலருக்கும் கூட வேடிக்கையாகத்தான் இருக்கும்'' என்று வெறுப்பு கொந்தளிக்கக் கூறினான் மைக்கேல். ''புலிவேட்டை ஆடுவதிலும் கோல்ப் விளையாடுவதிலும் நாட்களை விரயமாக்கும் இவர்களுக்கு ஜப்பானியன் அதிர்ச்சி வைத்தியம் செய்யப் போகிறான், பார்!''

''ஏது, மேலதிகாரிகளைத் தாராளமாகத் தாக்கத் துணிந்துவிட்ட மனநிலையில் இன்று இருக்கிறீர்கள் போல் இருக்கிறதே!'' என்று கேட்ட வடிவேலு புல்தரையில் உட்கார்ந்து விஷயங்களைத் தெரிந்துகொள்கிற ஆவலுடன் காப்டனை ஏறிட்டு நோக்கினான்.



''வடிவேலு! இங்குள்ள பிரிட்டிஷ் சிப்பாய் ஒவ்வொருவனும் போர் முனைக்குத் தூக்கிச்செல்ல வேண்டிய ராணுவத் தளவாடங்களின் எடை என்ன தெரியுமா உனக்கு? புகை மூட்டத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள அவன் பயன்படுத்தப் போகும் முகமூடி உள்பட மொத்தம் நாற்பத்தி இரண்டு பவுண்டு! இவற்றையெல்லாம் மூச்சு வாங்கச் சுமந்து கொண்டு, கம்பளிச் சட்டையும் கனமான பூட்ஸும் அணிந்துதான் பிரிட்டிஷ் 'டாமி' போர் முனைக்குப் போகப் போகிறான், ஜப்பானியக் குள்ளனை எதிர்க்க. சும்மா நடந்து போய் விடுவானா? இவனை ஏற்றிச் செல்ல மோட்டார் வேண்டும். ராணுவ லாரிகள் போகச் சாலை வேண்டும். மலாயாவிலுள்ள காடுகளில் தெருக்களா ஓடுகின்றன? மோட்டார் எப்படி அதனுள் பிரவேசிக்க முடியும்? ஆகவே 'கடக்க முடியாத காடுகள்' என்று சுலபமாய் முடிவு கட்டிவிட்டான் இவன். இந்த வனங்களிலெல்லாம் ஜப்பானியன் பிரவேசித்து முன்னேறி வருவதென்பது இயலாத காரியமென்று நிர்மாணித்து விட்டான்; பைத்தியக்காரன்!

''ஒற்றையடிப் பாதைகள் வழியாகக் கானகத்தைக் கடந்து வருவான் ஜப்பானியன். பாதை ஏதுமில்லையானாலும் அதை ஏற்படுத்திக் கொண்டு வருவான். நீளமான கத்தியை வலக்கரத்தில் ஏந்தி இரு பக்கங்களிலும் வேகமாக வீசிச் செடி கொடி புதர்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டு முன்னேறுவான். 'ஸப்மிஷின் கன்' ஒன்றை இடது தோளிலிருந்து முதுகுப் புறமாய்த் தொங்க விட்டுக் கொண்டு, இலேசான கான்வஸ் பூட்ஸும், மெல்லிய சட்டையும், அரை நிக்கரும் அணிந்து அலட்சியமாய் ஆக்கிரமிப்பை நடத்துவான்!

''நடந்தே வருவார்கள்! சைக்கிள்களில் வருவார்கள்; ஆயிரக்கணக்கில் வந்து குவிவார்கள்! கொரில்லாப் போர் முறையில் நீங்கள் பயிற்சி பெறவில்லை என்றால் அவர்களைச் சமாளிப்பதென்பது அசாத்தியமான காரியமாகி விடும்.''

''கொரில்லா யுத்தம் என்றால் மனிதக் குரங்குகளைப் போல்

சண்டை போட வேண்டுமாக்கும் என்று ரொம்ப நாளைக்கு எண்ணிக் கொண்டிருந்தேன்! பிறகுதான் அந்தச் சொல்லின் உச்சரிப்பு ஒரே மாதிரியாக இருந்தாலும் அட்சரங்களில் வித்தியாசம் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.''

வயிற்றைப் பற்றிக் கொண்டு பெரிதாகச் சிரித்தான் மைக்கேல். பின்னர், ''இந்த யுத்த முறையை முதன் முதலில் ஸ்பானிஷ் வீரர்கள் நெப்போலியனுடைய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய போது கையாண்டார்கள். ஸ்பானிஷ் மொழியில் கொரில்லா என்றால் சிறிய சண்டை என்று பொருள். ஆனால் ராணுவ அகராதியில் கொரில்லாப் போர் முறை என்பது நேர்மையற்ற, ஒழுக்கமற்ற, கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள், வரையறைகள் ஏதுமற்ற யுத்தம் என்பதாக விவரிக்கப்பட்டிருக்கும்'' என்றான்.

''அதாவது அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி எதிரியைத் தாக்கி வீழ்த்த முயல வேண்டும். அதைத் தானே கூற முற்படுகிறீர்கள்?''

''இல்லை, இல்லை!'' என்று அவசரம் அவசரமாக மறுத்துரைத்தான் மைக்கேல். எப்படி அவனுக்குப் புரிய வைப்பது என்று யோசிப்பவனாகக் காணப்பட்டான். பிறகு தொடர்ந்தான்: ''யுத்தம் புரிவதை ஒரு கலையாக வைத்துக் கொண்டோமானாலும் அதை ஒரு வாத்தியத்துடன் ஒப்பிட்டு நோக்குவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். என்றாலும் அப்படிப் பாவித்துக் கொள் சில விநாடிகளுக்கு. அந்தக் கலையின் நுணுக்கங்களை உன்னிப்பாகக் கவனித்துக் கற்றுத் தேறாமல் தாறுமாறாக வாத்தியத்தை வாசிக்க ஆரம்பித்தால் எப்படியிருக்கும்?''

''கர்ண கடூரமாக இருக்கும்.''

''அதுதான் கொரில்லாப் போர் முறை. ஆயினும் சமீப காலமாக அப்படித் தாறுமாறாக வாசிப்பதே ஒரு கலையாகி வருகிறது! அந்தக் கர்ண கடூரக் கலையின் நுணுக்கங்களைக் கற்றுத் தேறுவது மிகக் கடினமான காரியம்!''

வடிவேலு தலையாட்டினான் விளங்கியதற்கு அடையாளமாக.

''குறி பார்த்துச் சுடுவதில் நீ தேர்ச்சி பெறுகிறாய். பலன் என்ன? ஆள் உயரத்துக்கு வளர்ந்திருக்கும் காட்டுப் புல்லுக்கிடையில் ஜப்பானியன் பதுங்கிக் கிடக்கையில் நீ யாரைக் குறி பார்ப்பாய்? நீ புல் புதர்களை விலக்கி எதிரியைத் தேடிக் கொண்டிருக்கையில் அவன் முதுகுப்புறமாய்ப் பாய்ந்து உன்னைக் குத்திக் கொன்று விடுவான். வெடிமருந்துகூட வீணடிக்க மாட்டான். புல்லைப் பிடுங்கிக் கத்தியிலிருக்கும் ரத்தக் கறையைத் துடைத்தெறிந்து விட்டு நடப்பான். அணிவகுத்து 'மார்ச்' செய்வதில் மணிக்கணக்காக நேரத்தைச் செலவிடுகிறீர்கள். காடுகளில் 'மார்ச்' செய்வது சாத்தியமாகுமா? திடீரென்று ஒரு நாள் இந்த முகாமுக்குச் சோதனையிட வருகிற கர்னல் உன் ஆடைகள் அழுக்கா யிருந்தால் கோபிக்கிறார். பூட்ஸ்களில் பாலிஷ் ஏறிப் பளபளக்கவில்லை என்றால் இரைகிறார். நடக்கவிருக்கும் யுத்தத்தில் எத்தனை புதைசேற்றுக் குழிகளில் நீங்கள் இறங்க வேண்டியிருக்கும்?

''என் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பதாக இருந்தால் இங்குள்ள ஒவ்வொரு வீரனையும் சேற்றுக் குட்டையில் தள்ளிப் புரளச் செய்ய வேண்டும் என்பேன். அரை மணி ஒரு மணி என்று அந்த அருவருப்பான நிலையில் கிடந்து உழலச் சித்தமாயிருக்கும் வண்ணம் அவர்கள் உடலும் உள்ளமும் உறுதிப்படவேண்டும். ஆனால் இங்கே இப்போது நிலவுகிற மானக்கேடான விஷயம் என்ன தெரியுமா உனக்கு? மலாயாவில் ஆங்காங்கே உள்ள ரப்பர்த் தோட்டங்களில் பல பட்டாளங்கள் தண்டு இறங்கியுள்ளன. உயரமான மரங்கள் நெருக்கமாக வளர்ந்திருக்கும் அந்த இடங்களில் சாயங்கால வேளையிலேயே நன்கு இருட்டி விடுகிறது என்பதோடு உச்சிப் பொழுதிலும் நிழலாகவே உள்ளது. சூரிய வெளிச்சத்தையே வாரக் கணக்கில் காணாத அந்தச் சிப்பாய்களை ஒருவித மனச் சோர்வு ஆட்கொள்கிறது. கேட்டால், 'அது ஒரு வியாதி; அதன் பெயர் ரப்பரைட்டிஸ்' என்கிறார்கள்!''

''கொரில்லா வீரன் எப்படி நடந்து கொள்வான்? அதைச் சொல்லுங்கள்!'' என்று கேட்டான் வடிவேலு.

''கொரில்லாவுக்குத் துப்பாக்கி வேண்டியதுதான்; ஆனால் அதை மட்டும் அவன் நம்பியிருப்பதில்லை. அவனுடைய முக்கியமான ஆயுதம் தான் மேற்கொண்டிருக்கும் லட்சியத்தை எப்படியும் அடைந்தே தீருவது என்கிற வைராக்கியம்தான். பகைமை வெறி கொந்தளிக்கும் உள்ளத்தோடு ஓர் அங்குலம் பூமியைக் கூட விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சபதம் எடுத்துக் கொள்வான். நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுக்காகவே தான் போராடுவதை உணர்த்தி

ரூ.5,395 பரிசுகளாக வெற்றி பெறுங்கள் 'ஆஸ்ப்ரோ' திறமைப் போட்டி

முதற்பரிசு:




12 வருட தேசிய திட்ட சேமிப்பு பத்திரம்: தற்போதைய மதிப்பு ரூ.2,000; 12 வருடங்களுக்குப் பின் ரூ.3,300.

இரண்டாவது பரிசு:



மர்பி ரேடியோ மதிப்பு ரூ.865.00.

மூன்றாவது பரிசு:



உஷா தையல் மிஷின் மதிப்பு ரூ.530.00.

தகுதிப் பரிசு:



50 பார்க்கர் பால் பாயிண்ட் பேனாக்கள், மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.14.00.

இந்த கண்ணாடி ஜாடியில் எவ்வளவு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் அடங்கும் என்பதைக் கணக்கிடுங்கள்!

ஜாடியின் பரிமாணங்கள்:— 26 செ.மீ. x 52 செ.மீ.
நான்கு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கொண்ட ஒவ்வொரு பட்டையின் பரிமாணங்கள்: 13 செ.மீ. x 3·9 செ.மீ.



அருகாமையிலிருக்கும் உங்கள் ஆஸ்ப்ரோ வியாபாரியிடம் எல்லா விபரங்களும், பிரவேசக் கூப்பன்களும் பெற்றுக்கொள்ளவும்.



தலைவலி, ஜுரம், ஜலதோஷம் மற்றும் ப்ளூவிற்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள் · மீண்டும் நிச்சயமாக சுகம் பெறுங்கள்

ஒரு நிக்கொலஸ் N தயாரிப்பு

தரத்திற்கும் தூய்மைக்கும் நீங்கள் பெறும் உத்தரவாதம்.

அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரிப் பெறுவான்.''

''ஆனால் இங்கோ நாட்டு மக்கள் வேறு, ராணுவம் வேறு என்பது போல் இரு சாராரும் ஒதுங்கு கிறார்கள். வீரர்கள் ஊதியம் பெறுவதால் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாய் எண்ணுகிறார்களே ஒழிய, மனத்தில் ஆழப் பதிந்து போன ஒரு லட்சியத்துக்காக உயிரைப் பணயம் வைப்பதாய் நினைப்பதில்லை. அந்த கைய சூழ்நிலை உருவாக்கப்படவில்லை.''

தலையசைத்து ஆமோதித்து விட்டுத் தொடர்ந்து கொரில்லாவின் பிரதாபங்களை விவரித்தான் மைக்கேல். அடக்க மாட்டாத ஆர்வத்துடன் கேட்டு வந்த வடிவேலு, விரைவிலேயே அந்த யுத்த தந்திரத்தில் ஜப்பானியர் அபாரத் தேர்ச்சி பெற்றிருப்பதை நேருக்கு நேராகக் காணவிருந்தான்.

அத்தியாயம் 19

கடற்கரையில்

சிருங்கார பூமியாகிய மலாயாவின் தென்கோடியில் உள்ள செளந்தரியம் மிக்க சிங்கப்பூர் தீவில் தனிச்சோலையுடன் திகழும் சாங்கி கடற்கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தனர் வடிவேலுவும் குமாரியும். கடற் காற்று நேராகத் தன் முகத்தைத் தாக்குமாறு அலைகளை நோக்கியபடி அமர்ந்திருந்தாள் குமாரி. கன்னங்களையும் கழுத்தையும் காற்று தழுவிக் கொஞ்சுவதை அவள் வெகுவாக ரசித்தாள் என்பதை மூடிய கண்களும் புன்னகையில் மலர்ந்த இதழ்களும் புலப்படுத்தின.

''நீ இங்கே வந்ததும் பேசாமடந்தையாகி விடுவாய் என்பது தெரிந்திருந்தால் இந்தப் பக்கமே அழைத்து வந்திருக்க மாட்டேன் உன்னை'' என்றான் வடிவேலு.

''வாயைத் திறந்தால் அரட்டை என்கிறீர்கள். மூடினால் பேசாமடந்தை என்று பட்டம் சூட்டுகிறீர்கள். நான் என்ன செய்ய?'' என்றவாறே இமைகளைத் திறந்தாள் குமாரி. தூரத்தில் ஒரு கலம் மிதந்து வருவது அவள் கண்களுக்குத் தட்டுப்பட்டது. ''முன்னொரு காலத்தில் இங்கே நீல உத்தமன் என்ற சோழன் கப்பலேறி வந்தானாம். கரையில் இறங்கியதும் முதன்முதலாகச் சிங்கம் போன்ற ஒரு பிராணி அவன் கண்களுக்குத் தட்டுப் பட்டதாம். உடனே 'சிங்கபுரி' என்று இந்தத் தீவுக்குப் பெயர் வைத்து விட்டானாம்!''

''நல்ல வேளையாய்ப் போயிற்று! தப்பித் தவறி ஒரு பூனை அவன் கண்களில் தென்பட்டிருந்தால் இந்நகரின் கதி என்ன ஆவது? பூனைப்பூர் என்றல்லவா பெயர் பெற்றிருக்கும்?''

கலகலவென்று சிரித்து மணலை அளைந்தாள் குமாரி. ''அதே பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான் சுமத்திராவிலிருந்து பலர் மலாக்காவில் குடியேறினார்கள். இவர்களைத்தான் மலாய்க்காரர்கள் என்கிறோம். அதற்கு முன்னால் இந்தத் தீபகர்ப்பத்தில் ஆட்களையே விழுங்கி ஏப்பம் விடுகிற காட்டுமிராண்டிகளைத் தவிர வேறு யாருமே கிடையாது!''

''ஏய்! கடற்கரையில் ஏதாவது உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கலாம் என்று வந்தால் பள்ளிக்கூடப் பாடத்தையெல்லாம் ஒப்பிக்க ஆரம்பித்து விட்டாயே!''

''சேறும் சகதியும் காடுகளும், கொடிய மிருகங்களுமே நிறைந்திருந்த இந்தப் பிரதேசத்தில் பல தேசத்தவரும் புகுந்து புது வாழ்வு தொடங்கி வெள்ளியச் சுரங்கங்களையும் ரப்பர்த் தோட்டங்களையும் சிருஷ்டித்துச் செல்வம் கொழிக்கும் நாடாகச் செய்திருக்கிறார்களே, அந்த அதிசயத்தை என்னவென்பது? எத்தனை விதமான மக்களின் உழைப்பு இந்த அற்புதத்தை உருவாக்கி யிருக்கிறது? போர்ச்சுகீஸியர், சீனர், ஜப்பானியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், இந்தியர்....''

''போதும், போதும், நிறுத்து!''

''காட்டுமிராண்டிகளைத் தவிர பேய் பிசாசுகளும் உலவி வந்தனவாம் இங்கே அந்த நாட்களில்! வெள்ளியச் சுரங்கங்களைத் தேடிக்கொண்டு காடுகளுக்குள் சஞ்சரிப்போர் இந்தப் பேய் பிசாசுகள் தங்களைப் பிடித்துக் கொண்டு உலுக்காமல் இருக்க மந்திரவாதிகளைப் பின்னோடு இட்டுப்போவார்களாம். அப்படியிருந்தும் பாருங்கள், ஒரு முறை இப்படிப் பயணப்பட்ட எண்பத்தேழு சீனர்களில் பதினெட்டுப் பேர்களே மிஞ்சினார்கள். மற்றவர்கள் பிசாசுகளிடம் அகப்பட்டுக்கொண்டு உயிரையே விட்டுவிட்டார்களாம்....!''

''அவர்கள் ஆத்மா சாந்தி அடைவதாக! அவர்களும் பேய் பிசாசுகளாக அலையாதிருப்பார்களாக!''



உஜ்ஜயினியில் அகில இந்திய காளிதாஸ விழாவில் சென்னை ஸம்ஸ்கிருத ரங்கக் குழுவினரின் சாருதத்த நாடகத்துக்குப் பெற்ற பரிசு சுவர்ண கலசம். இதை டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் பொதுக் கூட்டமொன்றில் ஸம்ஸ்கிருத ரங்கத் தலைவர் டாக்டர் வே. ராகவனுக்கு வழங்கினார். ஸ்ரீ ஸி. சந்திரசேகரன் ஸம்ஸ்கிருத ரங்கத்தினர் நடித்த 'நமர் பூஜா'வில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கு ரவீந்திரநாத டாகூரின் நூல்களை அவ்வமயம் வழங்கினார்.

"பிளாக் மார்க்கெட் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்றாள் குமாரி ஆகாயத்தை நோக்கியவாறு.

தூக்கிவாரிப் போட்டது வடிவேலுவுக்கு. 'பணத்தாசை என்பது மனிதனை எப்படியெல்லாம் ஆட்டுவிக்கிறது? ஒரே மகளின் உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும் அலட்சியப்படுத்துகிற அளவுக்குச் சக்தி பெற்றதா அது?'

"அப்பா சிங்கப்பூரிலேயே தங்கியிருக்க விரும்புவதற்கு இன்னொரு காரணமும் இருப்பதாக ஊகிக்கிறேன். ஆனால் நிச்சயமாகத் தெரியாததனால் அதைப் பற்றி இப்போதைக்கு ஒன்றும் கூறப் போவதில்லை நான்."

"ஆவி வடிவங்களில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?"

"லவலேசமும் கிடையாது!"

"இப்போது மலேரியா பற்றி எல்லாருக்கும் தெரிந்திருப்பதால் இப்படித் தைரியமாகச் சொல்கிறீர்கள்! அந்தக் காலத்தில் மருத்துவத் துறை இத்தனை முன்னேற்றம் காணவில்லையே? மலேரியா ஜுர நடுக்கத்தைப் பிசாசு பிடித்து உலுக்கிப் போடுவதாக அவர்கள் நினைத்துக் கொண்டதில் வியப்பென்ன?"

"பேய் பிசாசுகளைவிடப் பயங்கரமான ஜப்பானியர் படையெடுப்புக்குப் பயந்து எத்தனை பேர்கள் இந்த நாட்டையே விட்டு ஓடி விட்டார்கள்? அப்படியிருக்க நீயும் உன் அப்பாவும் துளிக் கூடக் கவலைப்படுவதாகக் காணோமே?"

"சென்னைக்கோ நாகைப்பட்டினத்துக்கோ கப்பலேறி விடலாம் என்று கதறினேன் அப்பாவிடம். கேட்டால் தானே? நீ வேணுமானாலும் போய்ப் பாட்டியுடன் இரு என்று என்னை மட்டும் துரத்தியடிக்கப் பார்த்தார். அவர் நகர மாட்டாராம், இந்த ஊரை விட்டு. அப்பாவைத் தனியே விட்டு விட்டு நான் போவேனா?"

"ஏன் கிளம்ப மறுக்கிறார்? அவருடைய ஒரே மகள்; நீ பத்திரமாக இருக்க வேண்டுமென்கிற அக்கறை இல்லாமலா போய் விட்டது அவருக்கு?" என்றான் வடிவேலு.

'மக்குப் பெண்ணாய் இருக்கிறாளே. இவளுடைய அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்கிற உரிமையை எனக்கு எதற்காகத் தருகிறாள் இவள்?' என்று சஞ்சலமடைந்தான் வடிவேலு. "வருத்தப்படாதே, குமாரி! உன் அப்பா உன்னைச் சர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்வார்" என்றான் ஆறுதலாக.

"முதலில் மனத்துக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போதெல்லாம் நான் தமிழ் நாட்டுக்குப் போகாததற்காகச் சந்தோஷப்படவே செய்கிறேன். அதுவும் சமீப காலமாகத்தான்!" என்று கூறி விட்டு அவள் அவனை ஓரக்கண்களால் பார்த்தாள். அசாதாரணமான ஒளியுடன் அவள் நயனங்கள் பிரகாசித்தன அப்போது.

அவள் விழிகளில் கூத்தாடிய களிப்பைக் கண்டு கொள்ளாதவன் போல், "சமையற்காரன் கம்பி நீட்டி விட்டதால் நீயாகவே சமைக்கக் கற்றுக் கொண்டு வருகிறாயே, அதை எண்ணிப் பூரித்துப் போகிறாயாக்கும்!" என்றான் வடிவேலு.

ஏமாற்றம் அவள் நெஞ்சை ஒடித்ததென்றால் அதை அவள் முகம் பிரதிபலிக்கவில்லை. சாமர்த்தியமாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அப்பாவே நேற்று 'ஏ—ஒன்' என்று சர்டிபிகேட் கொடுத்து விட்டார். அடுத்த வாரம் பத்துமலைக்குப் போகும் போது இட்டிலி தோசையெல்லாம் நானே தயாரித்து மூட்டை கட்டப் போகி



சஷ்டியப்த பூர்த்தி விழா


வெங்கவாயல் (லேட்) பரமசிவ முதலியாரின் குமாரரும், கல்கத்தா, மெஸர்ஸ் மல்லல்லாயின் பங்குதாரருமான ஸ்ரீ பி. சுந்தர விநாயக முதலியார் (பி. எஸ். விநாயக்) அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி 17-9-62 அன்று கல்கத்தா பேஹலாவில் அவருடைய இல்லத்தில் அதிவிமரிசையாக நடைபெற்றது. ஏராளமான நண்பர்களும், உறவினர்களும் வந்து சிறப்பித்தார்கள்.

ஆனந்தமான வாழ்க்கைக்கு



காட்பரீஸ்
சாக்கலேட்...

மிட்டாய்
மட்டுமல்ல-
ஒரு
உணவும்கூட




றேன். நீங்களும் வாருங்களேன்'' என்று கூறினான்.

''பத்துமலைக்கா? அது எங்கே இருக்கிறது?''

''கோலாலம்பூரிலிருந்து ஏழு மைல் தூரத்தில்.''

''நீ உன் கைப்படச் சுட்டு எடுத்து வரும் தோசையைத் தின்பதைத் தவிர அங்கே வேறு என்ன விசேஷமோ?''

''பத்துமலைக் குகையில் வேலன் கோயில் இருக்கிறது. அங்கே ஒரு வேலைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். தைப் பூசத் திருவிழாவின் போது ஏகக் கூட்டமாயிருக்கும். இப்



போது போனால் அவஸ்தைப் படாமல் மலை ஏறி இறங்கலாம். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் படிகளைக் கோயில் அதிகாரிகள் புதுப்பித்தபோது அப்பா அதற்குத் தாராளமாக நன்கொடை கொடுத்து உதவினார். நல்ல காரியங்களும் அவர் செய்வதுண்டு!''

''தண்டபாணியிடம் பிரார்த்தித்துக் கொண்டது போதாதென்று இந்த வேலனிடமும் போய் என் ஆணவம் அழிய வேண்டும் என்று கோரப் போகிறாயாக்கும்!''

''உங்களிடம் ஏதோ வேடிக்கையாகச் சொன்னேனே ஒழியத் தண்டபாணியிடம் என்னை மன்னித்து விடுமாறு தான் நான் கேட்டுக் கொண்டேன்.''

''மன்னிப்பதா? எதற்காக?''

''அன்று எலும்பு முறிந்து ரத்தம் கொட்டுகிற உங்கள் கால்களை மடியில் தாங்கிக் காரோட்டிப் போவதென்பது எனக்கு அருவருப்பாயிருந்தது. அப்பாவைத் திருப்திப் படுத்தத்தான் அதற்குச் சம்மதித்தேன். முன்பின் தெரியாத ஒருவர், புரிந்த குற்றத்துக்குத் தண்டனை பெறாதவாறு நான் ஏன் குறுக்கே நிற்க வேண்டும் என்று நினைத்து உங்களை வெறுத்தேன். அப்படியெல்லாம் எண்ணியதற்காகப் பின்னால் தண்டபாணியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.''

''உனக்கு ரொம்பத் தொந்தரவு கொடுத்து விட்டேன், குமாரி!'' என்று உண்மையான விசனத்தோடு கூறினான் வடிவேலு.

''தயவுசெய்து அப்படிச் சொல்லாதீர்கள். உங்களுக்கு அந்த உபகாரம் செய்ய முடிந்ததே என்று இப்போது

நான் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறேன்!'' — அவள் இதழ்கள் துடித்தன. ஆர்வத்தோடு ஆசை ததும்பும் விழிகள் அவனைப் பார்த்தன.

''கிளம்புவோமா ?'' என்று கேட்டான் வடிவேலு.

நீண்ட பெருமூச்செறிந்தாள் குமாரி. எழுந்து மணலில் மெதுவாக நடந்தவாறே, ''உங்களுக்குத் தேனூரில் ஒரு காதலி இருக்கிறாள் இல்லையா?'' என்று கேட்டாள்.

திடுக்கிட்ட அவன், ''உன்னுடைய கிண்டலும் கேலியும் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கின்றன'' என்று இலேசாகக் கோபித்தான்.

''அவள் பெயர் கூட எனக்குத் தெரியும்!''

''கண்டு பிடித்து விட்டாயல்லவா? ரொம்பக் கெட்டிக்காரிதான் போ !'' என்றபோதே வடிவேலுவுக்கு வியப்பாகத்தான் இருந்தது. 'தாராவைப் பற்றி இவளுக்கென்ன தெரியும்?'

''இந்திராணிதானே அவள் பெயர்?''

குபீரென்று சிரித்தான் அவன்.

'' அப்படியானால் அவள் உங்கள் காதலி இல்லையா? அப்பாடா!'' என்று நிம்மதி பெற்ற மனத்தினளாய்த் தன் முட்டாள்தனத்தை எண்ணி நகைப்பவளைப் போல் மார்பில் கரங்களை ஒன்று சேரப் பதித்துச் சிரித்தாள் அவள். பிறகு, ''உங்களுக்கு என்ன இனிப்புப் பண்டம் பிடிக்கும்? பாதாம்ஹல்வா பண்ணட்டுமா, பத்துமலைக்கு எடுத்துப் போக?'' என்று கேட்டாள்.

வடிவேலுவுக்கு என்ன பதிலளிப்பதென்றே தோன்றவில்லை. தாராவைப் பற்றி வெளியிட வேண்டுமென்று நினைத்தான். இந்திராணி என் காதலி இல்லைதான். ஆனால் வேறொருத்தி இருக்கிறாள் என்று கூற வாயெடுத்தான். ஆனால் அவ்வாறு சொன்னால் அவளுடைய இந்த அபரிமிதமான ஆனந்தம் சட்டென்று மாறி விடுமென்றும், சோகத்தில் அவள் ஆழ்ந்து விடுவாள் என்றும் அவனுக்குப் பட்டது. அவளுடைய அந்தக் குதூகலத்தை உடனடியாகக் குலைக்க மனம் வரவில்லை அவனுக்கு. சமய சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டு கூடிய சீக்கிரமே கூறிவிட்டால் போகிறது என்று தீர்மானித்தவனாக, ''வெறும் குழந்தை நீ! போக்கிரித்தனம் மாறாத அசட்டுக் குழந்தை!'' என்றான்.

''குவா, குவா!'' என்று அந்தக் குழந்தை விளையாட்டாக அழுது கொண்டே சிரித்தது. (தொடரும்)

5—58-10M

பிரேமையும்



"என்னவோ, அம்மா! நீ செய்தது எனக்குப் பிடிக்கவில்லை. படித்தவள் நீ. புத்திசாலி. இப்படிக் கொஞ்சம் கூடச் சகிப்புத் தன்மை யில்லாதிருந்தால் எப்படி? சொல் பார்க்கலாம்." இது ஜானகியின் அப்பா.

"ஜானகி, செய்திறதையும் செய்து விட்டு அசட்டுத்தனமாக வேறு பேசறியே! என் வயிற்றை என்னவோ செய்கிறதடீ!" இது ஜானகியின் அம்மா.

"ஏண்டீ, இப்படி ஒரு பெண் அசடாயிருக்குமோ! நல்லது பொல்லாதது தெரிய வேண்டாமோ? நாங்களெல்லாம் புக்ககத்துக்குப் போய்க் குடித்தனம் பண்ணினோமே! இப்படியா?" இது ஜானகியின் பாட்டி.

தன் செயலுக்கு இப்படி ஒரேயடியாக எதிர்ப்புக் கிளம்பும் என்று ஜானகி எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் எதிர்க்கும்படியாக ஜானகி அப்படி என்னதான் செய்துவிட்டாள்?

கணவனோடு சண்டை போட்டுக்கொண்டு பிறந்தகம் வந்துவிட்டாள்.

ஒருவரும் அவளை ஆதரிக்க முன்வராமற் போகவே ஜானகியின் உள்ளத்தின் உறுதி ஆட்டம் கண்டது. ஆத்திரத்தில் பொறுமையிழந்து பிறந்தகத்துக்குப் புறப்பட்டு வந்தது தவறுதானோ என்று அவள் சிந்திக்கலானாள்.

அவள் கணவன் ராமமூர்த்தி கொஞ்சம் முன் கோபக்காரன். அத்துடன் பிடிவாதக்காரனுங் கூட. சாதாரணமாக, ஜானகிக்குக் கோபம் வராதுதான். ஆனால் மிகவும் செல்வமாக வளர்ந்தவள். பெற்றோருக்கு ஒரே பெண். பிறந்த வீட்டுச் சலுகை அதிகம். கணவன் கோபத்தில் எதையாவது சொன்னால் ஜானகி பொறுத்துக் கொண்டிருக்க மாட்டாள். உடனே பதில் கூறிவிடுவாள். ராமமூர்த்திக்கு இன்னும் கோபம் வரும்; வார்த்தைகளைக் கொட்டுவான்; ஜானகி கண்ணீரை உகுப்பாள்.

ராமமூர்த்தியும், ஜானகியும் கல்யாணம் ஆகித் தனிக் குடித்தனம் போனதிலிருந்து எத்தனையோ சச்சரவுகள் நேர்ந்து விட்டன. இத்தனைக்கும் இருவரும் ஒருவரை யொருவர் விரும்பி மனம் ஒப்பித்தான் கல்யாணம் செய்து கொண்டனர்.

ஜானகி திருச்சியில் ஆறும் படிவம் படித்துக் கொண்டிருந்த போதுதான் ராமமூர்த்தி எதிர்வீட்டுக்குக் குடி வந்தான். அவனுக்குத் தகப்பனார் இல்லை. தாயார் இருந்தாள். விவாகமாகி விட்ட அண்ணன் பெங்களூரில் பெரிய வேலையில் இருந்தான். பத்து வயதுத் தம்பி கிட்டு இருந்தான். திருச்சியை அடுத்த ஒரு கிராமத்தில் அவர்களுக்கு நிலபுலன்கள் இருந்தபடியால் தாயும் மகனும் அதைக் கவனித்துக் கொள்ளச் சௌகரியமாயிருக்குமென்று திருச்சியில் குடியேறினர். பெங்களூரில் பெரிய பதவியில் இருந்த ராமமூர்த்தியின் தகப்பனார் திடீரென்று இறந்துவிட்டார். ராமமூர்த்தியின் கல்லூரிப் படிப்பையும் கிட்டுவின் படிப்பையும் திருச்சியில் வைத்துக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

ராமமூர்த்தி கல்லூரிக்குத் தினம் சைக்கிளில் போவான். சில நாட்கள் ஏதும் நிகழவில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ராம

உரிமையும்



மூர்த்தி வாசலுக்கு வரும்போதெல்லாம் ஜானகியும் தன் வீட்டு வாசலுக்கு வருவாள். முதலில் சாதாரணமாகத்தான் வந்தாள். பிறகு அடிக்கடி வந்தாள். அப்புறம் ராமமூர்த்தியைக் கண்டதும் நாணிக் கோணிக் கொண்டு அஜந்தா ஓவியம் போல் பவனிதமாக உடம்பை வளைத்துக் கொண்டு நின்றாள்.

இப்பொழுதெல்லாம் ஜானகியின் வீட்டு வாசலில் அவள்தான் கோலம் போடுகிறாள்: வேலைக்காரி வாசலுக்குத் தண்ணீர் தெளிப்பதோடு சரி. வாசலில் கோலம் போடுவதற்காகவே ஜானகி தன் அண்ணா ரங்கராஜனை நச்சரித்து ஒரு கோலப் புத்தகம் வாங்கினாள். அதிலுள்ள கோல நிறுவகளையெல்லாம் இராப் பகல் ஓய்வு ஒழிவில்லாமல் கற்றுக் கொண்டு தன் கைத்திறமையை வாசலில் காண்பிக்கலானாள். கோலம் போட்டு ஒழிந்த நேரங்களில் பின்கட்டுக் குடித்தனக்கார மாமியின் குழந்தையை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வருவாள். அந்தக் குழந்தையை வாசல் திண்ணையில் வைத்துக்கொண்டு கொஞ்சி மகிழ்வாள். ஆனால் அவள் கடைக்கண், எதிர் வீட்டு வாசற்புறத்தை அடிக்கடி நோக்கும்.

ராமமூர்த்தி மாத்திரம் இலேசுப்பட்டவனா என்ன? தினமும் தன் சைக்கிளைத் துடைக்கிற சாக்கில் ஜானகியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

தினமும் கிட்டுதான் ராமமூர்த்தியின் சைக்கிளைத் துடைப்பது வழக்கம். இப்பொழுதெல்லாம் ராமமூர்த்தி தானும் ஒருமுறை சைக்கிளைத் துடைக்க ஆரம்பித்தான்.

''அண்ணா! நான் அப்பவே சைக்கிளைத் துடைச்சுட்டேன்! தினம் நீயும் ஒருதரம் எதுக்காக அண்ணா துடைக்கிறே?'' என்று கேட்டுக் கிட்டு ராமமூர்த்தியைத் திணற அடித்தான்.

''பேசாமல் இருடா முட்டாள் பயலே!'' என்று கூறி விட்டுச் சைக்கிளைத் துடைக்கிற பாவனையிலே எதிர் வீட்டு ஜானகியைப் பார்த்த வண்ணம் பரவசமடைந்தான்.

இந்த நாடகத்தை இப்படியே நீடித்து நடக்க விடாமல் செய்த பெருமை ஜானகியின் அண்ணா ரங்கராஜனைச் சேர்ந்தது. அவன் மெதுவாக இந்த விஷயத்தைத் தன் தகப்பனாரிடம் சொல்லி, ராமமூர்த்தியைப் பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்தான். பிறகு வெகு சுலபமாக ராமமூர்த்தி — ஜானகி கல்யாணம் ஒரு சுப வேளை சுப தினத்தில் நடந்தது. கல்யாணம் நடந்த கையோடு ராமமூர்த்திக்குச் சென்னையில் நல்ல வேலை கிடைத்தது. ஜானகியும் ராமமூர்த்தியும் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

தனிக் குடித்தனம் பற்றி ஜானகி எத்தனை இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள்!

ராமமூர்த்தி ஜானகியிடம் மிகவும் பிரியமாயிருந்தான். அவள் கேட்பதற்குமுன்பே அவளுக்குத் தேவையானவற்றையெல்லாம் வாங்கித் தந்தான். சினிமா, நாடகம், நடனம் முதலியவற்றுக்கெல்லாம் அழைத்துச் சென்றான். அவனிடம் உள்ள குறை முன் கோபம்தான். ஆனால் சட்டென்று வரும் கோபம் பட்டென்று வந்த சுவடு தெரியாமல் மறைந்துவிடும்!

ராமமூர்த்திக்குக் கோபம் வரும்


ஸோமாஸ்

சமயத்திலும் சற்றுப் பொறுமையாயிருக்கும் குணம் மட்டும் ஜானகியிடம் இருந்திருந்தால் அவர்களுக்குள் சண்டை, சச்சரவே வந்திருக்காது.

''அப்படிக் கூட ஒரு கோபம் வருமா என்ன?'' என்று ஜானகி பொருமுவாள்.

கோபம் தீர்ந்த மறுகணமே ராமமூர்த்தி முகமலர்ச்சியுடன் ''ஜானகி! நான் கோபத்தில் சொன்னதை யெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாதே. வா, நாம் ஏதாவது ஒரு சினிமாவுக்குப் போய் வரலாம்!'' என்று புது அரிசிச் சாதம் மாதிரி குழைவான்.

ஆனால் ஜானகி கொஞ்சமும் செவிமடுமாட்டாள். அவன் எத்தனை கெஞ்சினாலும் முகம் கொடுத்தே பேச மாட்டாள். ராமமூர்த்தி தன்னுடைய திறமை முழுதும் செலவிட்டுத் தன் வழிக்கு அவளைத் திருப்ப முயலுவான்.



''நம்ம தீபாவளிப் பட்சணத்தையெல்லாம் தாத்தாகிட்டே கொடுத்து வைப்போமாடா? பத்திரமாக இருக்கும்.''

''போடா இடியட்! அவர் கையைப் பார்த்தாயா? கத்தியும் உலக்கையும் தயாராயிருக்கு!''

கடைசியில் ஒரு மாதிரி ஜானகியின் பிடிவாதம் தளரும். முகத்தில் இலேசாகப் புன்னகை மலரும். ஆனால் இந்த மகிழ்ச்சி கொஞ்ச நேரத்துக்குத்தான் நிலைத்து நிற்கும். அதற்குள் ராமமூர்த்திக்கு இன்னொரு தடவை கோபம் வந்து விடும். அதன் காரணமாக ஜானகியும் அசோக வனத்துச் சீதை மாதிரி ஆகி விடுவாள்.

ராமமூர்த்தியின் அருங்குணம் என்னவென்றால் எது நடந்தாலும் அதை அப்போதைக்கப்போது மறந்துவிடுவான். ஜானகியினிடம் அந்தச் சுபாவமே கிடையாது.

''கோபம் வந்தால் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி விடுவது. அப்புறம் வந்து 'கண்ணே, முத்தே' என்று கொஞ்சினால் அதெல்லாம் யாருக்கு வேண்டியிருக்கிறது!'' என்று சீறுவாள்.

இந்தத் தடவை ஜானகி விட்டுக் கொடுப்பதாகவே யில்லை. மனத்தில் ஒரு திடமானத்துடன் பிறந்தகம் போய் விட்டாள்.

ஒரு சாதாரணச் சம்பவம் தான் அவர்களுக்குள் இத்தனை பெரிய மன வேற்றுமையை உண்டாக்கி விட்டது.

ராமமூர்த்தி ஆசையோடு ஒரு புடவை வாங்கி வந்தான். அதைப் பார்த்ததும் ஜானகியின் முகாரவிந்தம் மலர்ந்து ஒளி வீசும் என்று ஆசையோடு எதிர்பார்த்தான். காரணம், கடைக்காரன் அது ரொம்பவும் புது மோஸ்தர்ப் புடவை என்று கூறியது தான். ராமமூர்த்திக்குத் தெரிந்த வரையில், கண்ணில் பட்ட பெண்களைக் கவனித்துப் பார்த்தவரையில் அதை யாரும் கட்டிக் கொண்டிருந்ததாக நினைவில்லை.

ஜானகி அந்தப் புடவையைப் பார்த்ததும் 'ஹா!' என்று அதிசயப் படாமல் மௌனமாக, எவ்வித உணர்ச்சியுமின்றி வாங்கி ஒரு புறம் வைத்து விட்டாள்.

''என்ன ஜானகி, புடவை உனக்குப் பிடிக்கவில்லையா? கடைக்காரர் இது புத்தம் புதிய மோஸ்தர் என்று சொல்லிக் கொடுத்தார்...'' என்று ஆவலோடு கூறினான் ராமமூர்த்தி.

''புடவை பிடிக்கவில்லை யென்று நான் உங்களிடம் சொன்னேனா? நீங்களாக எதையாவது கூறி ஏன் சண்டைக்கு இழுக்கிறீர்கள்? இந்த நகரக் கடைகளில் இதே மாதிரிப் புடவை கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்புறம்தான் நான் என் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியும்'' என்றாள்.

ராமமூர்த்தி பதில் பேசாமல் புடவையை எடுத்துக் கொண்டு கடைத் தெருப் பக்கம் புறப்பட்டு விட்டான். அன்று ராமமூர்த்திக்குக் கோபம் வராமல் இருந்தது என்னவோ அதிசயந்தான்.

ஒரு ஜவுளிக் கடை விடாமல் நான்கு நாட்களாக ஏறி இறங்கி அலுத்துப் போய் ஜானகியிடம் புடவையைக் கொண்டு வந்து கொடுத்து, ''ஜானகி, நீ தாராளமாக இதை உடுத்தலாம். இந்த மாதிரிப் புடவை இன்னும் எந்த ஜவுளிக் கடைக்கும் வரவில்லை. நகரத்தில் உள்ள எல்லா ஜவுளிக் கடைகளையும் துருவிப் பார்த்து விட்டேன். எங்கும் கிடைக்கவில்லை!'' என்றான் ராமமூர்த்தி. அவன் குரலில் அவளைச் சந்தோஷிக்கச் செய்யும் ஆர்வமும், சம்மதிக்க மாட்டாளோ என்ற ஏக்கமும் வெளிப்பட்டன.

ஆனால் ஜானகி அவனுடைய உணர்ச்சிகளைப் பொருட்படுத்தவேயில்லை.

''இதைக் கடையிலேயே கொடுத்து விடுங்கள்....'' என்று முகத்தில் அடித்தாற் போல் கூறினாள்.


ராமமூர்த்தியின் முகம் வெளிறிப் போய் விட்டது.

''என்ன ஜானகி, உனக்குத்தான் புது மாதிரி டிஸைன் என்றால் பிடிக்குமே! யாருமே இன்னும் வாங்கிச் செல்லவில்லையாமே....!''

''அதனால்தான் வேண்டாம் என்கிறேன்!''

''ஜானகி....!'' ராமமூர்த்தியின் குரலில் கடுமை தொனித்தது. ''முன்பு ஒரு சமயம் இதே மாதிரி நான் ஒரு புடவை வாங்கிக் கொண்டு வந்தேன். அப்பொழுதும் நீ இதே மாதிரி எல்லா ஜவுளிக் கடைகள் முழுவதும் சுற்றி அலையவைத்தாய். அம்மாதிரிப் புடவை இன்னும் சில கடைகளில் கிடைக்கிறது என்று நான் சொன்னதும் நீ அந்தப் புடவை வேண்டாம் என்று சொல்லிவிட்டாய். இப்பொழுது இந்தப் புடவை எங்கும் கிடைக்கவில்லை என்றதும் வேண்டாம் என்று மறுக்கிறாய். என்னைப் பழி வாங்கும் நோக்கத்தோடு இப்படி யெல்

மாறிவரும் காட்சி



தட்ரிக்கு ரஸ்தா



தட்ரி—உத்தரப்பிரதேசத்தில் அமைந்த திர்வானில் ஒரு குக்கிராமம். சுபிக்ஷசக்கரம் எட்டிப்பார்க்காத கிராமமாகவே பழங்காலம்போலவே இருந்து வந்தது. ரஸ்தா வசதியில்லாததால் வெளியிடங்களுடன் தொடர்பு இல்லாமல் தனித்திருந்தது.



ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்தன. மாபெரும் மாறுதல் தொடங்கியது. ஆயிரக்கணக்கான கிராமங்களைப்போல, தட்ரியும் திட்டமிட்ட முன்னேற்றத்தின் சாதனைகளை வெளிப்படுத்தியது. விவசாயிகள் அதிக முயற்சியுடன் உழைத்தனர். நிலம் செழிப்பாக விளைந்தது. அதிக அளவில் கரும்பு சாகுபடியாயிற்று. கரும்பை கரும்பாலைக்கு எடுத்துச்செல்ல ஒரு ரஸ்தா தேவைப்பட்டது.

தட்ரி கிராமத்தின் உற்சாகமான மக்கள் ஒன்றுகூடி ஒரு அற்புதமான பணியைச் செய்யத்தொடங்கினர். அருகில் உள்ள பிரதான ரஸ்தாவுடன் ஒரு தொடர்புச்சாலையை அமைத்தனர். சாலை செல்லும் வழியில் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களை தானமாக வழங்கினர். சாலை அமைக்கப்பட்டது. அபிவிருத்தி இயக்கத்தில் மக்களுடைய நம்பிக்கையை இது வெளிப்படுத்துகிறது. இதனால் ஒவ்வொருவருக்கும் வருங்காலம் வளமாக இருக்க வழி ஏற்படுகிறது.

ரஸ்தா அமைக்கும் வேலை கிராமப்புறங்களின் தோற்றத்தை மாற்றி வருகின்றன. முன்னேற்றம் மற்றும் சுபிக்ஷத்தின் ராஜபாட்டையில் இந்த கிராமங்களை அழைத்துச்செல்கிறது. திட்டத்தின் முதல் பத்தாண்டு காலத்தில் தார்போடப்படாத ரஸ்தாக்கள் 1,51,000 மைலிலிருந்து 2,50,000 மைலாக உயர்ந்தது. தார்போட்ட ரஸ்தாக்கள் 97,500 மைலிலிருந்து 1,44,000 மைலாக உயர்ந்தது. மூன்றாவது திட்டகாலத்தில் மேலும் 25,000 மைல் தார்போட்ட ரஸ்தா அமைக்க தீர்மானித்துள்ளோம். தார்போடப்படாத ரஸ்தாக்களின் நீளமும் கணிசமாக அதிகரிக்கப்படும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

நாட்டினருக்கெல்லாம்

நல் வாழ்வு



வாய் செய்கிறாயா?" என்று பெருங் குரலில் கத்தினான்.

ஜானகி அவனோடு முகம் கொடுத்தே பேசவில்லை. கடைசியில், "அவரவர்கள் சுபாவத்தைப் பிறர் மேல் ஏற்றிப் பேசுவது என்ன புத்திசாலித்தனமோ? எப்பவோ நடந்த சம்பவத்தை மனசில் வைத்துக் கொண்டு வீண் சண்டைக்கு ஏற்பாடு செய்கிறீர்களே!" என்று வெடுக்கென்று பதில் சொன்னாள்.

ராமமூர்த்திக்குக் கோபம் தாங்கவில்லை. உடம்பெல்லாம் நடுங்கியது. புடவையை ஒரு மூலையில் வீசி எறிந்து விட்டு "சீ! அநுதாபமும் அன்பும் இல்லாத பெண்களோடு குடித்தனம் பண்ணுவதை விட எங்கேயாவது ஓடிப் போய்விடுவது உத்தமம்!" என்று கர்ஜித்துவிட்டு வெளியேற அடியெடுத்து வைத்தான்.

"நில்லுங்கள்!" என்று கண்ணகி மாதிரி கனன்று சீறினாள் ஜானகி.

"நீங்கள் எங்கேயும் போக வேண்டாம். அன்பும் அநுதாபமும் இல்லாதவளான நானே போகிறேன். நீங்கள் சந்தோஷமாயிருங்கள்!" என்று அலட்சியமாகப் பேசிவிட்டு விடுவிடு என்று தன் ஆடை அணிகளை யெல்லாம் எடுத்துப் பெட்டியில் வைத்துக் கொள்ளலானாள். ராமமூர்த்தியும் அவள் கோபத்தை லட்சியம் செய்யவில்லை.

அன்றிரவே ரயிலேறி ஜானகி திருச்சிக்குப் புறப்பட்டு விட்டாள்.

இருவரும் தன் செயலை ஆதரிக்காமற் போகவே ஜானகிக்கு வேதனை தாளவில்லை. ஒருவரோடும் சரியாய்ப் பேசவில்லை. முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டிருந்தாள். ஒரு வாரம் ஓடி விட்டது.

"ஜானகி, நாளைக்கு நீயும் நானுமாகச் சென்னைக்குப் போவோம். கணவனிடம் மனைவி தணிந்து போய் விட்டதனால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது!" என்று அப்பா கூறியதைக் கேட்டு ஜானகி அதிர்ந்து போனாள்.

"அப்பா, என் மீது உங்களுக்கு அன்பில்லையா? முதல் முதலில் நான் என் கணவரோடு புறப்பட்ட போது குழந்தை மாதிரி விம்மி விம்மி அழுதீர்களே! அந்த அன்பும், ஆசையும் எங்கே போயிற்று, அப்பா? நான் உங்களுக்குப் பாரமாய்ப் போய் விட்டேனா?" என்று கேட்டு ஜானகி 'ஓ'வென்று அழுதாள்.

"சுத்த அசடாயிருக்கிறாயே, அம்மா! உன் மீதுள்ள அன்பு மிகுதியினால் தான் இப்படிப் பேசுகிறேன். முதல் முதலில் நீ புக்ககத்துக்குப் புறப்பட்ட போது நான் கண்கலங்குவதைப் பார்த்த மாப்பிள்ளை, 'மாமா, நீங்கள் ஒரு வாரம் கழித்து வேண்டுமானால் ஜானகியை அழைத்துக் கொண்டு வந்து சென்னையில் விட்டு விடுங்கள்' என்று கூறியபோது நீ அதற்குச் சம்மதித்தாயா? மாப்பிள்ளைக்கு முன்னால் பாய்ந்தோடி வண்டியில் ஏறிக்கொண்டாயே? அதனால் உனக்கு என் மீது அன்பு இல்லையென்று நான் முடிவு கட்டி விட முடியுமா? நாம் இருவருமாகப் புறப்பட்டுப் போய் அங்கு இரண்டொரு நாட்கள் தங்கிவிட்டு மாப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு திரும்பலாம். அப்புறம் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் எங்களுடன் இரு!" என்று கூறி அப்பா ஜானகியின் தலையை அன்போடு கோதினார்.



"என் மேல் கோபமா? ஏன் இப்படி முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

"பெண்டாட்டியைக் கண்டதும் 'பல்லை இளிக்காதே'ன்னு எங்கம்மா சொல்லி அனுப்பிச்சிருக்காளே! அது உனக்கு எப்படித் தெரியும்?"

"அப்பா, அவ குணம் உங்களுக்குத் தெரியாது. மகா முன் கோபி. எடுத்ததற்கெல்லாம் கோபித்துக் கொள்ளும் ஒரு மூர்க்க குணமுள்ள மனிதருடன் என்னால் வாழ முடியாது அப்பா, வாழ முடியாது!"

"அம்மா! இப்பொழுது நீ அப்படித்தான் பேசுவாய். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் நாம் புறப்பட வேண்டும். மனசை அலட்டிக் கொள்ளாமல் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்" என்று கூறி விட்டு அப்பா தம் வேலையைக் கவனிக்கச் சென்றார். ஆனால் ஜானகியின் கோபம் தணிகிற வழியாயில்லை.

நாலைந்து நாட்கள் சென்றன. அன்று அதிகாலையில் ஜானகி வாசலில் ஜலம் தெளித்துப் பெருக்கிக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். பெரிய கோலமாக ஏராளமான பொட்டுக்கள் வைத்துத் தன்னை மறந்த நிலையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

வாசலில் தடதடவென்று வண்டி வந்து நின்றதும் அவள் சிந்தனை கலைந்தது. வண்டியிலிருந்து இறங்கியவரைப் பார்த்ததும் அவள் திடுக்கிட்டாள். சாட்சாத் அவள் கணவன் ராமமூர்த்தியேதான்!

சிறிது நேரம் நின்று கண்கொட்டாமல் அவனையே பார்த்தாள். ஜானகி முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே ஓடி விட்டாள். நல்ல வேளையாக அவள் தகப்பனார் மாப்பிள்ளையைப் பார்த்து விட்டார்.

"வாருங்கள், வாருங்கள்! மாப்பிள்ளை!" என்று முகமலர்ச்சியோடு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். ஜானகியின் தமையன் ரங்கராஜன் ராமமூர்த்தியை இறுகத் தழுவிக் கொண்டு வரவேற்றான். ஜானகியின் தகப்பனாருக்கு என்ன பேசுவது, என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை.

"மாப்பிள்ளை, குழந்தைக்கு ஒன்றும் தெரியாது. உங்களிடம் அசட்டுத்தனமாக நடந்து

கொண்டு விட்டான். அவனை மன்னித்து விடுங்கள். நான் அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டு அங்கே வர ஏற்பாடு பண்ணிக் கொண்டிருக்கிறேன். அதற்குள் நீங்களே...''

''....மாமா, ஜானகி எந்தத் தவறும் செய்யவில்லை. தவறெல்லாம் என்னுடையது தான். அர்த்தம் இல்லாமல் நான்தான் அவளிடம் கோபித்துக் கொண்டு விட்டேன். எனக்கு முன்கோபம் அதிகம், மாமா. என்ன செய்வது! அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவளை அழைத்துக் கொண்டு போகலாம் என்று தான் புறப்பட்டு வந்தேன்.''

தன் கணவன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜானகியின் மனம் நெகிழ்ந்துவிட்டது. அவள் முகபாவம் மாறியிருப்பதைக் கவனித்த அவள் தாயார் அவளிடம் காப்பி தம்ளரைக் கொடுத்து மாப்பிள்ளையிடம் கொடுக்கச் சொன்னாள். ஜானகிக்கு உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. நடுங்கிய வண்ணம் ராமமூர்த்தியின் அறைப்பக்கம் வந்தாள். நாசூக்காகத் தந்தையும் மகனும் வெளியேறினர். காப்பி தம்ளரை மேஜை மேல் வைத்துவிட்டுக் குனிந்த தலை நிமிராமல் நின்றாள். அவனைக் காணாதபோது பொங்கியெழுந்த கோபம் இப்பொழுது இருக்க இடம் தெரியாமல் மறைந்தது. தான் செய்தது எத்தனை பெரிய தவறு என்பது இப்பொழுது ஜானகிக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆனால் கணவனிடம் அதை எப்படி வெளியிடுவது என்று தெரியவில்லை.

''ஜானகி, என்னை மன்னித்து விடு. இனி மேல் நான் கோபித்துக் கொள்ளவே மாட்டேன். ஆனால் ஒரு விதத்தில் நான் பாக்கியசாலி. நீ கோபித்துக் கொண்டு வந்ததினால் தான் நான் உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வர நேர்ந்தது. இங்கே வந்ததனால் தான் நீ கோலமிடும் காட்சியைக் கண்டு மீண்டும் ரசிக்க முடிந்தது. முன்பு, நம் விவாகத்துக்கு முன்பு நீ உன் வீட்டு வாசலில் கோலம் போடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருப்பேனே, நினைவிருக்கிறதா, ஜானகி?'' என்று கேட்டு எழுந்து தாவி அவள் தந்தக் கரங்களைப் பற்றினான்.

ஜானகி மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு காப்பித் தம்ளரை அவனிடம் கொடுத்தாள் மணக்கமழும் காப்பியைக் குடித்து விட்டு ராமமூர்த்தி ஜானகியின் முகவாயைத் தொட்டு நிமிர்த்தி, ''இன்னும் என் மீது கோபமா ஜானகி?'' என்று கேட்டான்.

''...அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான் கோபத்தோடு ஊருக்குப் புறப்பட்ட பொழுது ஒரு வார்த்தை தனியாகப் பேசி, ஊருக்குப் போக வேண்டாம் என்று சொல்லியிருந்தீர்களானால் என் கோபமெல்லாம் பறந்து போயிருக்கும்! நீங்கள் அப்படிக் குழைவாகக் கேட்பீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு தான் நான் ஊருக்குப் போவதாகச் சொன்னேன். நீங்கள் என்னைத் திரும்பிக் கூடப் பாராமல் வெளியே போய் விட்டீர்கள்! எனக்கும் கோபம் தாங்க முடியவில்லை....!''

''...நான்தான் தவறு என்னுடையதென்று ஒப்புக் கொண்டு உன்னிடம் நிபந்தனையின்றிச் சரண் அடைந்து விட்டேனே! இனி மேல் அது பற்றிப் பேச வேண்டாம். எனக்குக் கோபம் அதிகமாக வருவதென்னவோ உண்மைதான். ஆனால் உன்னிடம் நான் அடிக்கடி கோபத்தைக் காட்டுவதற்குக் காரணம் உனக்குத் தெரியாது. ஆபீஸிலும் சரி, வேறெங்கேயும் சரி, என் கோபத்தைக் காட்ட முடிவதில்லை; உன்னைத் தவிர நான் வேறு யாரிடம் போய்க் கோபித்துக் கொள்ள முடியும்? நீயே சொல்லு. உன்னிடம் அளவு கடந்த பிரேமையும், அதிகப்படி உரிமையும் இருப்பதனால்தான் அன்பு செலுத்துவதோடு கோபத்தையும் காட்டி விடுகிறேன்......மன்னித்து விடு, ஜானகி!'' என்று கூறி அவள் கரங்களைப் பற்றிக் கண்களில் ஆசையோடு ஒற்றிக் கொண்டான் ராமமூர்த்தி.

''இதெல்லாம் என்ன? அப்புறம் எனக்கு நிஜமாகவே கோபம் வந்து விடும். என்னிடம் கோபித்துக் கொள்ள உங்களுக்குப் பூரண உரிமை உண்டு....''

''.....உனக்கும் என்னிடம் கோபித்துக் கொள்ளப் பூரண உரிமை உண்டு, ஜானகி! ஆனால் கோபித்துக்கொண்டு நீ மட்டும் தனியாக ரயிலில் வருவது ரொம்பத் தப்பு; அதற்கு இனிமேல் உனக்கு உரிமையில்லை...!'' என்று கூறி ராமமூர்த்தி அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

ஜானகி நாணந்தாங்காமல் முகம் சிவந்து தலை குனிந்தாள்.

வடபழனி ஆண்டவர் கோடி அர்ச்சனை

கடந்த பத்து மாதங்களாகச் சென்னை வடபழனியுறை குழந்தை வேலனுக்கு நடைபெற்று வரும் கோடி அர்ச்சனையில் பக்தகோடிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு சுமார் 45 லட்சம் அர்ச்சனைகளைப் பூர்த்திசெய்து தந்திருப்பதாக அறிகிறோம். மிகுதியையும் ஆஸ்திக அன்பர்கள் விரைவில் பூர்த்தி செய்து, கலியுக வரதனை ஆண்டவன் அருளைப் பெற வேணும். ஒரு சகஸ்ரநாம அர்ச்சனைக்கான கட்டணம் 10 ரூபாய். தொகை அனுப்ப வேண்டிய முகவரி: பொருளாளர், ஸ்ரீ வடபழனி ஆண்டவர் கோடி அர்ச்சனைக் குழு, 4, வெல்டர்ஸ் ரோடு, மவுண்ட்ரோட், சென்னை—2.



இரகசியம்

"அம்மா, அம்மா! நான் வெளிநாட்டுக்குப் போக ஸ்காலர்ஷிப் கிடைத்து விட்டதம்மா. இரண்டே வருஷங்களில் உன் மகன் எம். ஏ. பட்டதாரியாகத் திரும்பி வருவான். இன்று என் கல்லூரி முழுதும் என்னைப் பெருமைப்படுத்துகிறார்கள். அம்மா! ஒரு நண்பன் என்னை அப்படியே தூக்கிக் கொண்டு விட்டான். ஏனம்மா, உன் கண்களில் ஜலம் வருகிறது? என்னை இரண்டு வருஷங்கள் பிரிவதற்காகத்தானே?"

சிவகாமியின் கண்களில் நீர் முட்டியது. தன்னைத் தாழ்த்திக் கொண்டாள். பக்கத்தில் இருந்த சோபாவில் அப்படியே சாய்ந்து கொண்டு விட்டாள்.

"அம்மா! நீ எனக்குத் தைரியமாக விடை கொடுத்தால்தான் நான் போவேன். இல்லாவிட்டால் பிரயாணத்தை நிறுத்தி விடுகிறேன். முக்கியமான விஷயம், ஸ்காலர்ஷிப் கிடைத்தால் கூட, மற்றப் பிரயாணச் செலவுகளுக்கெல்லாம் எனக்குப் பெருந் தொகை தேவைப்படுமே? உன்னால் கொடுக்க முடியுமா அம்மா?"



சிவகாமியின் மனத்தில் இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் கேட்ட அதே விஷயமும், நடந்த அதே சம்பவமும் திரும்பி நடப்பது போல் ஒரு பிரமை ஏற்பட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "நீ போய்ப் புகழோடு திரும்பி வா. இந்த இரண்டு வருஷங்களை நான் எப்படியோ கழித்து விடுகிறேன்" என்று ஈனக் குரலில் மெதுவாகச் சொன்னாள்.

பணத்துக்கு அம்மா என்ன ஏற்பாடு செய்வாளோ என்ற சிந்தனையில் சுந்தரம் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தான். சிவகாமி சுந்தரத்திடம் ஒரு வெல்வெட் பெட்டியைக் கொடுத்தாள். கையில் பெட்டியை வாங்கிய சுந்தரம் ஒன்றும் புரியாமல் அதை என்ன செய்ய வேண்டும் என்று கேட்பது போல் தாயின் முகத்தைப் பார்த்தான். சிவகாமி நிதானமாக, "சுந்தரம்! இவ்வளவு காலமாக நம் குடும்பத்தின் பரம்பரைச் சொத்தான இந்த வைர மாலையைக் காப்பாற்றிவிட்டேன். இப்பொழுது பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்த இந்த மாலையை உபயோகிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதை நீ அடமானம் வைத்து உன் பிரயாணச் செலவுக்கு நாணயமாக மாற்றிக் கொள்" என்றாள்.

"அம்மா! நம் குடும்பச் சொத்தை நான் அடமானம் செய்து பிரயாணம் செய்யவே மாட்டேன். அப்படியாவது பட்டமோ, படிப்போ தேவையில்லையம்மா. நீ இவ்வளவு நாட்கள் காப்பாற்றியது போல், இனியும் உன்னிடமே அது இருக்கட்டும்."

"சுந்தரம், இதை மட்டும் நீ மறுக்கவே மறுக்காதே. ஒரு தடவை நான் அந்த மாலையைப் படிப்புக்காகக் கொடுக்காமல் இருந்த தவற்றுக்கு, இன்று வரை துன்பத்தை அனுபவிக்கிறேன். மறுக்காமல் பெற்றுக் கொள்!" என்று கூறிய சிவகாமி தனது பழங் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

சிவப்பிரகாசம் கௌரவமான ஒரு பாங்கர். வியாபாரத்தின் நுட்பங்களை அறிந்தவர். சொந்தமாக ஒரு பாங்கையும் நடத்தி வந்தார். அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் நகைக் கடைகள் வேறு அவருக்குச் சொந்தமாக இருந்தன. தாயை இழந்த தம் ஒரே மகளை அவர் சீரும், சிறப்புமாக வளர்த்தார். தமக்குப் படிப்பு இல்லாத குறையைத் தீர்த்துக் கொள்ளப் படித்த மருமகனையே தேடினார். அவர் விருப்பமும் நிறைவேறியது. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த புத்திசாலிப் பையனைத் தமது மருமகனாகத் தேர்ந்தெடுத்தார்.

அருணாசலம் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறி, உபகாரச் சம்பளத்திலேயே பட்டம் பெற்றார். எம். பி., பி. எஸ். பரீட்சை நான்காவது ஆண்டு படிக்கும்போது கலியாணம் வெகு விமரிசையாக நடந்தது. பிள்ளையின் பெற்றோர்கள் கிராமத்தில் இருந்ததால், அடுத்த இரண்டு ஆண்டுப் படிப்பை மாமனார் வீட்டிலேயே இருந்து படிப்பது என்று தீர்மானமும் ஆயிற்று.

உலகத்தில் தன் விருப்பம் ஓரளவாவது நிறைவேறினால்கூடப் பெருமைப்படுவது மனித இயல்பு. ஆனால் தான் எதிர்பார்த்ததைவிட அதிகப் படிப்பும், பண்பும் உள்ள மருமகனைப் பார்க்கும்போது சிவப்பிரகாசம் தன்னை மறந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

அந்த இரண்டு ஆண்டுகளும், சிவகாமியின் வாழ்க்கையிலும் ஒரு பொற்காலம்.

எம்.பி., பி.எஸ். படிப்பு முடிந்தது. மாகாணத்திலேயே முதன்மையாகத் தேறினார் அருணாசலம். அந்த இன்ப நாட்கள் அப்படியே இருந்திருக்கக் கூடாதா? காலம் ஏன் மாறுகிறது? பருவங்கள் ஏன் தோன்றுகின்றன? வருஷங்கள் ஏன் ஓடுகின்றன?

சிவப்பிரகாசத்தின் போக்கில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. எப்போதும் கலகலப்

பாகப் பேசுபவர் தனிமையை நாடினார். எவ்வளவு வேலைகள் இருந்தாலும், தம் பெண், மருமகனோடு பேசாமல் தூங்கப் போக மாட்டார். அப்படிப்பட்டவர் நாள் முழுதும் தம் அறையில் கதவை மூடிக் கொண்டு தனிமையில் இருக்கலானார். அப்பாவின் இந்த நிலையைக் கண்டு சிவகாமி மிகவும் கலவரம் அடைந்தாள்.

ஒருநாள் சிவகாமி உள்ளச் சோர்வுடனும், உடல் அயர்வுடனும் தன்னை மறந்து படுத்துக் கொண்டிருந்தாள். அப்போது உள்ளே வந்த அருணாசலம் வெகு உத்ஸாகமாக, ''சிவகாமி! எனக்கு எம். டி. படிக்க மேல் நாட்டு ஸ்காலர்ஷிப் கிடைத்து விட்டது. மூன்று வருஷங்களில் உன் கணவன் பெரிய பட்டதாரியாக வந்து விடுவான். அப்பா, இதைக் கேட்டால் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். பிரயாணச் செலவுக்கு...'' என்றார். அதற்குச் சிவகாமி ஆத்திரமாக, ''போதும், போதும், உங்கள் படிப்பு. குடும்பம் இருக்கிற நிலையில் மேல் நாட்டுக்கு வேறு போக வேண்டுமா? என் உடல் நிலைமை உங்களுக்குத் தெரியாது'' என்றாள்.


''சிவகாமி! என்னுடைய எதிர்காலம் உன் கையில்தா னிருக்கிறது. அப்பாவுக்குச் செல்லப் பெண். நீ கேட்டால் அவர் மறுக்க மாட்டார்'' என்று சொல்லிச் சிவகாமியின் தாடையை அன்பாகத் தூக்கினார். சிவகாமியை அப்போது ஒரு பேய் தான் பிடித்து ஆட்டியது. ''போதும், போதும், நிறுத்துங்கள். மாமனார் வீட்டில் இருந்து கொண்டு இவ்வளவு நாட்கள் படித்தது போதாதா? தொழில் நடத்திச் சம்பாதிக்கத் துப்பில்லை. இன்னும் படிப்பாம். வெட்கக் கேடு. உங்கள் பேராசைக்கு என் அப்பாவா பலியாக வேண்டும்?'' என்று



வசுமதி ராமசாமி

ஒரே கத்தாகக் கத்தி ஞன். ஒரு நிமிஷம் அருணாசலம் அயர்ந்து விட்டார். செல்வந்த ரான அப்பாவின் ஒரே பெண்ணை மணப்பவ னுக்கு இம்மாதிரி அவ மானம் வரத் தவறாது என்றெல்லாம் நினைத் தார். ஆனாலும் அவ ருக்குப் படிப்பின் மீது உள்ள ஆர்வம் அதிக மாக இருந்தது.

கடைசியில் சிவகாமு, "எனக்கு ஒரு நல்ல யோசனை தோன்று கிறது. உன்னிடம் ஒரு விலையுயர்ந்த வைர மாலை இருக்கிற தல்லவா? நீ அதை உப யோகிப்பதே இல்லை. பூஜையில் இருப்பது போலத்தானே இருக் கிறது? அதை எனக்குக் கொடு. நான் அதை அடமானம் வைத்துப் பணம் வாங்கிக் கொள்கிறேன். நீ அப்பாவிடம் இந்த நிலையில் ஒன்றும் சொல்ல வேண்டாம். அவர் எப் பொழுதும் போல் ஆன பிறகு, அவரிடம் சொல்லிப் பணத்தைக் கட்டி நகையை மீட்டுக் கொள்ளு" என்று சொல்லி விட் டுச் சிவகாமியை நம்பிக்கையுடன் உற்றுப் பார்த்தார்.



"'பிரமாதம்! எக்ஸலண்ட்!' என் கிறீர்களே! நான் செய்த பட்சணத் தைத்தானே!"

"அதில்லை.... இந்த வெள்ளித் தட்டை!"

சிவகாமிக்குக் கோபம் பொங்கியது. "ஆமாம். அந்த நகை என் குடும்பத்தில் பூஜிதப் பொருளாகத்தான் இருக்கிறது. இந்த மாதிரி ஒரு அற்பக் காரியத்துக் கெல்லாம் அதை நான் கொடுக்க மாட்டேன். உங்கள் படிப்பைக் கொண்டு குப்பையில் போடுங்கள். இனிமேல் மேல்நாட்டுக்குப் போகிற பேச் சையே என்னிடம் பேச வேண்டாம்" என்று சீறினுள். அருணாசலம்வாயடைத்துப்போனர். சிவகாமி கொஞ்சம் கூட அன்பில்லாமல் இப்படி விபரீதமாக நடந்து கொள்வது அவ ருக்கு ஆச்சரியமாக இருந்தது. டாக்டர் படிப்பு படித்து விட்டால் போதுமா? ஒரு பெண் தாய்மை அடைவதற்கு முன் குறைந்த மாதத்தில் உள்ளத்தின் சோர்வும், உடலின் அயர்வும் டாக்டருக்குப் பிடிபடுகிற வியா தியா? எதைப் பார்த்தாலும் எரிச்சலும், அரு வருப்பும் வரும் அந்தச் சமயத்தில் சிவகாமி தன் கணவன் கல்நெஞ்சுடன் தன்னைப் பிரிந்து போவதாக நினைத்துச் சீற்றம் கொண் டதில் ஆச்சரியமில்லை அல்லவா?

அருணாசலம், திருப்பித் திருப்பிச் சிவகாமி தன் கணவனை விடத் தந்தைதான் மேல் என்ற எண்ணத்திலேயே தன்னை அலட்சியம் செய் கிறாள் என்றுதான் எண்ணினுன்.

அன்று இரவு சிவகாமி வெகு நேரம் வரை யில் தூக்கமின்றிப் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். பிறகு எப்பொழுது கண் உறங்கினளோ, தெரியாது. ஆனால் திடீ ரென்று சத்தம் கேட்டு விழித்துக் கொண் டாள். அறையில் ஒரு பக்கத்தில் இருந்த இரும்புப் பெட்டியை மூடி விட்டு இருளோடு இருளாக ஓர் உருவம் ஓடியது தான் தெரிந் தது. சிவகாமிக்கு உடம்பு முழுதும் நடுங் கியது. இருளில் தட விக் கொண்டே போய் விளக்கைப் போட் டாள். பக்கத்துப் படுக்கையில் அருணா சலத்தைக் காண வில்லை. இரும்புப் பெட்டி திறந்து, அரை குறையாக மூடி இருந் தது. இரண்டையும் ஒரு நிமிஷம் மாறி, மாறிப் பார்த்தாள். சமாளித்துக் கொண்டு, இரும்புப் பெட்டியி லிருந்த வெல்வெட் பெட்டியைப் பார்த் தாள். அதில் இருந்த வைரமாலையைக் காண வில்லை. அவளுக்கு அப் போது இருந்த உணர்வு அவமானமா, கோபமா, துக்கமா என்று சொல்ல முடியாது. எல்லாம் இரண்டு நிமிஷங்கள்தான். மின்னல் போன்ற ஓர் உணர்வு.

"ஐயோ, ஐயோ! திருடன் திருடன் ஓடு கிறான்" என்று பெரிதாகக் கத்தினுள். பங்க ளாவிலுள்ள எல்லா வேலைக்காரர்களும் கூடி விட்டார்கள். சிவப்பிரகாசம், அருணாசலம் இங்கு இல்லை என்பதைக் கவனிக்கத் தவற வில்லை. என்ன காரணத்தினலோ மருமகனைப் பற்றி மகளிடம் கேட்கவில்லை. போலீஸ் காரர்கள் படையெடுத்தார்கள். வீடு அமளி, துமளிப் பட்டது. அப்பாவியான வேலைக் காரர்களையெல்லாம் போலீஸார் அநாவசிய விசாரணை செய்து துன்பப்படுத்தினர்கள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு சிவகாமி என்னுதை எண்ணமெல்லாம் எண்ணிப் புழுங் கிக் கொண்டு தன் அறையில் படுத்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது சாதாரண மாக அருணாசலம் உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் அவளுக்குக் கோபம் பொங்கியது.

"இரண்டு நாட்களாக எங்கே தலை மறைவு?" என்று எடுக்கும் போதே அடுக் காகக் கேட்டாள்.

அருணாசலம் அவளைச் சமாதானப்படுத்த நினைத்து வினயமாக, "எனக்குத் தூரத்து உறவினர் ஒருவர் செல்வந்தர் என்று முந்தியே சொல்லியிருக்கிறேன் அல்லவா? அவருக்கு ஒரே பெண் நொண்டியாக இருக்கிறாள். நம்முடைய திருமணத்துக்கு முன் அந்தப் பெண்ணை நான் மணந்து கொள்ள வேண்டு மென்று எவ்வளவோ மன்றாடினர். இன்று அவர் அதை யெல்லாம் மனத்தில் கொள் ளாமல் என் வெளிநாட்டுப் பிரயாணத்துக்கு உதவி செய்ய மனமுவந்து ஒத்துக் கொண் டார். நான் வருவதற்குள் உன் வைரமாலை களவு போனதைக் கேட்க மிகவும் வருத்த மாக இருக்கிறது" என்றார்.

திரிசூலம் திருப்பணி

பல்லாவரத்துக்கும் மீனம்பாக்கத்துக்கும் இடையேயுள்ள திரிசூலம் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள திரிபுரசுந்தரி அம்பாளுக்கு நவராத்திரியின் போது சிறப்பான முறையில் லட்சார்ச்சனை வைபவம் நடந்தேறியது. இக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரி நியமனமாகியிருப்பதால் இலிஜீர்ணோத்தாரணத்துக்குக் காணிக்கை செலுத்த விரும்புபவர்கள் **நிர்வாக அதிகாரி, திரிசூலம் பிரம்மபுரீசுவர ஆலயம், திரிசூலம், பல்லாவரம் (வழி), சென்னை** என்ற விலாசத்துக்கு அனுப்ப வேணும்.

அவர் குரலில் இருந்த பரிவும், குழைவும் சிவகாமியின் இதயத்தைத் தொட்டன. 'இந்த அன்புதோய்ந்த வார்த்தையில் பொய் இருக்குமா, புரட்டு இருக்குமா என்ன; என் மனம் அதற்கு மேல் இருட்டுக் குற்றமல்லவா சுமக்கிறது?'' இப்படி அவள் மனத்திரையில் ஓடிய நல்லெண்ணத்தை அடுத்த நிமிஷம் விதி தன் நீண்ட கையால் அழித்தது.

''சீ, இப்படி ஒரு துரோகமா? எங்கப்பா உங்களைப் பிள்ளைப் பாசத்துடன் நடத்தியதற்கு இது பிரதியா? வீட்டிலேயே தன் மனைவியின் நகையைத் திருடும் அளவுக்கு ஒரு பேய்ப் படிப்பா?''

இதைச் சிவகாமி முடிப்பதற்குள் ''சிவகாமி! என்ன வார்த்தை பேசுகிறாய்?'' என்று கத்தினார் அருணாசலம்.

சிவகாமிக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. ''ஆமாம். அதைத்தான் நான் சொல்லுகிறேன். உங்கட வீட்டுக்கு இரண்டகம், நான் வைரமாலை கொடுக்க மறுத்ததும், திருடிக் கொள்ளத் துணிந்து விட்டீர்கள்..... நான் பெண். என்னுடைய பெண்மை கணவனுடைய இந்த இழிவான செயலை மறைக்க முயன்றது. அதனால் திருடன். திருடன் என்று கத்தினேன்.''

பெண் புலியின் சீற்றத்தைக் கண்டு ஆண் சிங்கம் இளைத்தது.

''ஆமாம், கைப்புண்ணுக்குக் கண்ணாடியா? போலீஸ்காரர்கள் திருடன் வெளியிலிருந்து வந்ததற்குத் தடயம் ஒன்றும் தெரியவில்லை என்று சொன்னார்கள். அந்த இரும்புப் பெட்டிப் பூட்டு யாருக்குமே திறக்க வராது. அதை அன்று நான் உங்களுக்கு வேடிக்கையாகச் சொல்லிக் கொடுத்தேன். அந்த வித்தையைக் கற்றுக் கொண்டு இந்த இழிவான செய்கைக்குத் துணிந்து விட்டீர்கள். உங்களுடைய இந்தக் குற்றத்தினால் என் எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றுகிறது.''

அருணாசலம் வாசற்படியில் போய் நின்று கொண்டு ஒருமுறை திரும்பி முறைத்தார். பிறகு வேகமாக நடந்து விட்டார்.

சிவகாமிக்கு வாய் அடைத்து விட்டது. நாள்கள் அருங்கள் நான்களாகக் கனத்து விட்டன. குடல் புரண்டு நெஞ்சை அடைத்தது.

எட்டு மாதங்கள் ஓடின. சிவகாமிக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அவள் மனம் மறுகித் தவித்தது. சந்திரோதயம் போன்ற அந்தக் குழந்தையின் முகத்தில் அருணாசலத்தின் சாயலைக் கண்டு அழுதாளா, சிரித்தாளா என்று அவளுக்குத் தெரியாது.

அருணாசலம் வெளிநாட்டுக்குப் போய் விட்டார் என்று தெரிந்தது. சிவப்பிரகாசம் அருணாசலத்தைத் தேடி அழைத்து வர எவ்வளவோ முயற்சி செய்தும் பலனில்லை. நாட்கள் ஆகஆக, சிவகாமி பலவாறு எண்ணி, எண்ணி மாய்ந்தாள்.

குழந்தை சுந்தரம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். ஐந்து ஆண்டுகள் ஆயின. சிவகாமி அந்தக் கனத்த நாட்களைப் பாரவண்டி இழுப்பது போல் இழுத்தாள். குழந்தையினுடைய பேச்சிலும், சிரிப்பிலும் சில சமயம் தன் துன்பச் சுமையை மறப்பாள். ஆனால் குழந்தை புதுசாக விளையாடும்பொழுது அவனுடைய மகிழ்ச்சி ஒரு நிமிஷம் தான் இருக்கும். அடுத்த நிமிஷம் கோடைகாலத்து இடி முழக்க மழை போல் அழுது விடுவான்.

அருணாசலம் எம். டி. பாஸ் செய்து லண்டனிலேயே பெரிய டாக்டராக விளங்குகிறார் என்ற செய்தியும் சிவகாமிக்கு எட்டியது. பிறகு அவரிடம் வைத்தியம் செய்துகொள்ளக் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள், நல்ல கைராசிக்காரர், தீராத வியாதிகளையெல்லாம் தமது சிகிச்சையினால் குணப்படுத்தி விடுகிறார்; அங்கேயே பணத்தைக் குவிக்கிறார்; நிரந்தரமாகத் தங்கி விட்டார் என்றெல்லாம் செய்திகள் அவ்வப்போது அவளுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன. சிவப்பிரகாசமும் சிவகாமியும் டாக்டர் அருணாசலத்துக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினார்கள். ஒன்றுக்கும் பதிலே கிடையாது. சிவகாமியின் மனஸ்தாபம் அதிகமாயிற்று. தன் மகனை அழைத்துக் கொண்டு மேல் நாட்டுக்குப் போய் விடலாமா என்றெல்லாம் சிந்தித்தாள். வயது சென்ற தகப்பனாரிடம் இதையெல்லாம் பற்றிக் கேட்க மனம் துணியவில்லை.

இன்றைக்குச் சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன் உலக மகாயுத்தம் வலுப்பிடித்ததாக இருந்தது. 1942-ம் ஆண்டில் லண்டன் மாநகரத்து மக்கள் யுத்த பயத்தில் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் வெளியேறின டாக்டர் அருணாசலம் நகரத்தின் நூறு மைல்களுக்கப்பால் விமான விபத்தில் மறைந்தார் என்ற செய்தி சிவப்பிரகாசத்துக்கு யுத்தம் முடிந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு கிடைத்தது. சிவகாமியின் மன நிலையைப் பற்றிச் சொல்லி முடியாது. அதற்கு வார்த்தைகளே இல்லை. வயதான காலத்தில் தன் ஒரே மகளின் கதியைப் பார்த்த சிவப்பிரகாசம் படுத்த படுக்கையாய் ஆகிவிட்டார். ஆண்டவன் அவருடைய துயருக்கும் ஒரு முடிவைக் கொடுத்தார். சிவகாமி தனக்கிருந்த ஒரே ஆதரவும் போகப் போகிறது என்று தெரிந்ததும், கல்லாகச் சமைந்து விட்டாள். அவர் மறைந்து சில நாளைக்குப் பிறகு, தற்

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆன் மோஸ்கோப்" பரிசோதனையில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட விரைவாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண நன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட் சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவம்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட அதிக ரிய குளோரோபில் இல்லை — குழந்தைகள் அதன் பெப்பர்மின்ட் வாசனையை மிகவும் விரும்புகிறார்கள்!



செபமாகச் வெகாமி இரும்புப்பெட்டியைத் திறந்தான். அதில் அந்த வைர மாலை வைத்திருந்த வெல்வெட் பெட்டியைக் கண்டதும் ஓர் வெறுப்பாக இருந்தது. அந்தப் பெட்டியைத் தூர எறிந்து விட வேண்டும் போல் இருந்தது. கையில் எடுத்தான். கையில் எடுத்த பெட்டி கனத்தது. ஆச்சரியத்துடன் திறந்து பார்க்கும் பொழுது, அதில் வைர மாலை பிரகாசித்துக் கொண்டிருந்தது. அத்துடன் ஒரு கடிதமும் இருந்தது. கடிதம் தன் பெயருக்கு இருப்பதைப் பார்த்ததும் அவசரமாகப் பிரித்தான். அப்பாவின் கையெழுத்து. அதில் என்ன எழுதியிருக்கப் போகிறார் என்று ஆவலுடன் படிக்க ஆரம்பித்தான்.

அன்புமிக்க வெகாமி,

உன் மகன் பல்லாண்டு வாழ வேண்டும் என்று ஆசீர்வாதம் தான் நான் உனக்குச் சொல்ல முடியும். களவு போனதாக நீ நினைக்க வைரமாலை நம் பரம்பரைச் சொத்து. நம்முடைய மூதாதையரில் ஒருவர் சோழ அரசனிடம் பேஷ்கார் வேலை பார்த்தார். ஒரு சமயம் பொன்னி நதி சிற்றத்திலேயோ, மகிழ்ச்சியிலேயோ பொங்கினாள். நதிக் கரையிலுள்ள பல கிராமங்கள் அழிந்தன. வெள்ளத்துக்கு அணைபோட முடியாமல் நிபுணர்கள் தவித்தார்கள். அரண்மனை பேஷ்கார் அந்தச் சமயம் குரல் வாழும் மக்களை முதுகில் சுமந்து கொண்டும், படகில் ஏற்றிக் கொண்டும் பலவாறு பாடுபட்டுக் காப்பாற்றினர். கடைசியில் ஒரு குடும்பத்தைப் படகில் ஏற்றி விட்டு, நீந்திக்கொண்டு வந்தார். அந்தச் சமயம் நதியின் வெள்ளம் அதிகமாகி, சமாளிக்க முடியாமல் நதியில் மூழ்கி விட்டார். அவர் செய்த அந்த மாபெரும் தியாகத்துக்கும் பணிக்கும் அவருடைய மகனிடம் பரிசாக இந்த வைர மாலையை அரசர் அளித்தார். அதிலுள்ள நல்முத்துக்களும், நவரத்தினங்களும் விலை மதிக்க முடியாதவை. இந்த மாலையை நம் குடும்பத்துப் பெண்கள் விசேஷ தினங்களில் அணிந்து கொள்வார்கள். உன் தாயார் மறையும்போது அதை உனக்குக் கொடுக்கும்படி சொல்லியிருந்தார். இந்த அபூர்வமான பொருள் நம்மிடம் வரும்போது உயிரைப் பலி வாங்கிக் கொண்டு தான் வந்தது. இதுதான் அந்த வைரமாலையின் சரிதம்.

எந்த வியாபாரம் செய்தாலும் செய்யலாம். கொடுக்கல், வாங்கல் மட்டும் செய்யக் கூடாது. புயலடிக்கும் கடலில் செல்லும் கப்பலைப் போன்றது பாங்கு வியாபாரம். எனக்குப் பாங்கியில் இரண்டு நஷ்டம் ஏற்பட்டது. அதை உனக்கும், அருணாசலத்துக்கும் சொல்ல எனக்கு விருப்பமில்லை. பாங்கு வியாபாரம் நம்பிக்கை என்ற அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்ட காற்றுக் கோட்டை. என் நஷ்டத்தைத் தெரிந்துகொண்ட இரண்டொருவர் பாங்கியில் போட்ட பணத்தைக் கேட்டு நெருக்கினார்கள். அரைகுறையாகத் தெரிந்த இன்னும் பத்துப் பேர்கள் சேர்ந்து கொண்டார்கள். அன்று பத்தாயிரம் ரூபாய் பெரிய பாங்குக்குக் கட்ட வேண்டிய நாள். என்னால் அந்தத் தொகையைப் புரட்ட முடியவில்லை. அதனால் தற்கொலை செய்துகொள்ளும் அளவு என் மனம் முதிர்ந்து விட்டது. அப்பொழுது நம் குடும்பச் சொத்தின் நினைவு வந்தது. அதை நீயன்றோ விசேஷ நாட்களில் தானே உபயோகிக்கப் போகிறாய்? தாற்காலிகமாக அடமானம் வைத்தால் அந்தத் தொகையைச் சுலபமாகப் பெறலாம் என்று தீர்மானம் செய்தேன். அந்தக் கசப்பான விஷயத்தை உன்னிடம் சொல்ல நான் விரும்பவில்லை. அன்று இரவு நீ தூங்கும்பொழுது என்னிடம் இருந்த மற்றொரு சாவியால் பெட்டியைத் திறந்து, நகையையும் எடுத்துக் கொண்டு சாவியையும் உருவிக் கொண்டு ஓடினேன்......"

அதுவரையில் தான் வெகாமி பாதிக் கடிதத்தைப் பார்த்தான். அதற்கு மேல் படிக்க முடியவில்லை. மயக்கமே விழுந்துவிட்டான்.

வெகாமி இதைச் சொல்லி விட்டு நீண்ட பெருமூச்சுடன் பேசாமல் இருந்தான். அவன் இந்தக் கதையைச் சொல்லும் போது வழிந்த கண்ணீர் கன்னத்தில் கறையாக இருந்தது. சுந்தரத்தின் கண்கள் கண்ணீரை மாலையாகச் சொரிந்தன. தாயின் கைகளைப் பற்றிக் கொண்டு விம்மினான். வெகாமி தன் ஓரே மகனின் வாழ்வைக் கண்டு கண் அழ, வாய் சிரிக்கக் காலத்தை ஓட்டினான்.

'முகராசி'யோடு நீங்கள் காலையில் விழித்தெழ முன்னேற்பாடு:

ரிச்சர்ட் ஹட்நட் த்ரீ ப்ளவர்ஸ்

க்ளென்ஸிங் கோல்ட் க்ரீம்

முகப் பொலிவுக்கு மிகச் சிறந்த அழகுசாதனமான ரிச்சர்ட் ஹட்நட் த்ரீ ப்ளவர்ஸ் க்ளென்ஸிங் கோல்ட் க்ரீம் — எளிய முறையில் அற்புதமான பராமரிப்பு. தூங்கச் செல்லுமுன் முகத்தில் தேய்த்தால், இரவோடிரவாக உங்கள் சருமத்தை ஊடுருவிச் சுத்தம்செய்து, மட்டமளித்துப் புது மெருகு தருகிறது. மறுநாட் காலை 'அல்லி மலர்ந்ததுபோல்' மெல்லின முகத் தெளிவுடன் விழித்தெழுவீர்கள்.



அழகுபடுத்த முன்னோட்டமாக த்ரீ ப்ளவர்ஸ் வேனிஷிங் க்ரீம் தடவிக் கொண்டீர்களானால், எழிலுக்கு அதுவே யோகமான ஆரம்பம். இன்றே துவங்குங்கள், முகப் பொலிவுக்கு அன்றாடம் ரிச்சர்ட் ஹட்நட் த்ரீ ப்ளவர்ஸ் க்ரீம்களை உபயோகியுங்கள். உங்கள் வதனத்தின் வனப்பை வளரச் செய்கிறது த்ரீ ப்ளவர்ஸ்!

வார்னர்-லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது).



WL. 1373 TM



நினைவு

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்



மாடத்து மூலையில் குருவி கத்தியது. ஒவ்வொரு தடவையும் இறீச் சென்று தொடங்கிய இனிய குழைவாக நீண்டு ஓய்ந்து போகும் கூவல். நாலைந்து வீடுகள் தள்ளி உரத்த குரலில் விற்க ஆரம்பித்துவிட்ட கறிகாய் வண்டிக்காரன். தெரு மூலையிலிருந்து ஓங்கிக் கொண்டே வந்த ஸ்கூட்டரின் உறுமல்.

சென்னைக்குத் திரும்பி வந்துவிட்டேன்: நான்கு நாட்கள் கிராமத்தில் அமைதியாகக் கழித்துவிட்ட பின்பு. ஐந்து வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் அந்த மண்ணை மிதித்த போது மனத்தில் எத்தனையோ நினைவுகள் துளிர்விட்டு எழுந்தன. அங்கே தங்கியது நாலேநாட்கள்தான். அதற்குள், அங்கே மீண்டும் வாழ்ந்தது போல, ஐந்து வருஷ இடைவெளியைக் கூட இழுத்து இணைந்து விட்டது போல் ஒரு பிரமை. எத்தனையோ பேர்கள் பார்க்க வந்தார்கள், என்னைப் பற்றி, உடம்பு தள்ளாமையினால் என்னுடன் வராத தந்தையைப் பற்றி விசாரித்து விட்டுப்போனார்கள். வந்த வேலைகளைக் கவனித்து முடித்துக் கொண்டது போல, அவர்களையும் ஒரு வழியாகச் சமாளித்து முடித்துக் கொண்டேன்.

நாலாம் நாள் காலை.

மொட்டை மாடியில் பாயை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தேன். காற்றில் இடிந்து விழுந்த காரைக்கு நடுவே ஆணியில் செதுக்கிய பெயர் மங்கலாகத் தெரிந்தது. மழையும் வெய்யிலும் அந்தப் பெயரை இன்னும் அழித்து விடவில்லை. என் நினைவிலுந்தான். கண்களை மூடிக் கொண்டேன். அருகே அந்தக் குரல் கேட்பது போல இருந்தது. சற்று நகர்ந்தால் அவள் கையைமேலே இடித்து விடும் போலத் தோன்றியது.

அந்தப் பக்கம் கையை நீட்டினேன். அந்த இடம் வெறிச்சென்று இருக்கது. அங்கே யாரும் இல்லை.

பெட்டியின் அடியில் வைத்திருந்த ஆல்பத்தில் அந்தப் புகைப் படம் இருக்கிறது. நிறையப் படங்கள். நடுவே அது ஒன்று மட்டும் பளிச்சென்று பார்வையில் விழுகிறது. காற்றில் அலையும் பின்னல். நடு வகிடு எடுமிடத்தில் சாந்துப்பொறி. தாவணியின் வெளியேவந்த பவழ மாலை. பருகுவது போலத் துடிப்பு இன்றி, ஜாடை பேசி நின்ற கண்கள்.

அது ஜானுவின் படம்.

ஜானு! அவள் இப்போது எங்கே இருப்பாள்? மணமாகிக் குழந்தைகளும் இருக்குமோ? இப்போது அவள் யாருடைய சொத்தோ? எனக்கு எப்படித் தெரியும்? அவளுக்கு இப்போது இருபது வயது இருக்கலாம். அதற்குள் கல்யாணமும் முடிந்திருக்க வேண்டும் என்பதில்லை. அப்படி நினைக்கும் போது என் மனத்தில் இப்படி ஒரு களிப்பு இழைந்து நிற்பானேன்? அந்த நினைவில் எனக்கு ஏன் இத்தனை பரபரப்பு? அவள் யாரோ நான் யாரோ? நாங்கள் மீண்டும் சந்திக்கப் போகிறோமா?

எழுந்து கைப்பிடிச் சுவரோரமாக நின்றேன். எதிர்வீடு பூட்டிக் கிடந்தது. வெகு நாட்களாகப் பெருக்கவோ மெழுகவோ ஆளில்லாமல் திண்ணையில் விரல் கனத்துக்குப் புழுதி. உதிர்ந்த சருகுகள் படிக்கு நேரே பறந்து கொண்டிருந்தன. அங்கேதான் ஜானுவை நான் முதன் முதலில் பார்த்தேன்.

காலைவேளை. பொற்கதிர்கள் பட்டுக் கண்களில் நீலம் தெறிக்க, வழிந்தகூந்தலைப் புறங்கையினால் ஒதுக்கிய படி, கோலத்தின் நடுவிலே நின்றவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை

மூடி விட்டு அந்தப் பார்வையில் ஆழ்ந்து போனேன்.

அவள் உள்ளே போய் விட்ட பின்பும் ஒளி வீசிப்படர்ந்த புன்னகை நினைவிலிருந்து மறையவில்லை. பிரித்த புத்தகத்தின் நடுவிலும் அந்த முகந்தான் தெரிந்தது. இப்போது வெறிச்சென்றிருக்கும் வாசலிலும், கோலத்துக்கு நடுவே அவள் நின்று நிமிர்ந்து பார்ப்பது போலத்தான் ஒரு தோற்றம் என் நெஞ்சில் எழுந்தது. அவர்கள் போய் ஐந்து நாட்களாயிற்று. அவள் தந்தை அவ்வப்போது வந்து போவதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் மதுரையில் இருந்தார்கள். ஜானுவும் இங்கே வந்திருப்பாளோ? எதிர்வீட்டிலிருந்து இந்த மாடியைப் பார்த்து, இப்போது நான் யோசித்துக் கொண்டு நிற்பதைப் போல—

இருக்க முடியாது. அந்த நினைவில் இந்த ஞாபகம் அவ்வளவு ஆழமாக ஊன்றி இருக்க முடியாது. புகைப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குத் தோன்றுவதும் அப்படித்தான். அவள் குழந்தையல்ல; வளர்ந்து விட்ட பெண்ணுமல்ல; அப்போது. வெடுக்கென்ற சுபாவம், தயங்காமல் பேசும் பேச்சு, நிமிர்ந்த பார்வை, துறுதுறுவென்ற நடை, ஒவ்வொன்றும் அதைத்தான் சொல்லிக் காட்டின. அதுதான் அவள் அழகோ? அந்த இயல்பினால்தான் அந்தத் தனிக் கவர்ச்சியோ? புகைப் படத்தில் அந்த வசீகரத்தையுமா பார்த்தேன்?

எனக்குக் கல்லூரி விடுமுறை. அப்போது தான் அவர்கள் கிராமத்துக்கு வந்திருந்தனர். எதிர்வீட்டை வாங்கிச் செப்பனிட்டு வைத்திருந்த தோற்றம், கொஞ்சம் நாட்களுக்கு அவர்கள் அங்கே இருப்பார்கள் என்பதைக் காட்டிற்று.

எங்கள் வீட்டில் பசும் பால் வாங்கிக் கொண்டு போக வருவாள். நடையில் வாசற் கதவின் மறைவில் உருவத்தின் நிழல் தெரிந்ததும் அம்மா தயாராக எடுத்து வைத்திருக்கும் செம்பைக் கொடுத்து அனுப்பி விடுவேன். அம்மாவுக்கு ஏன்தான் இத்தனை அவசரம் என்று எனக்குப் புரியவில்லை.

ஒன்பது மணிக்குப் புத்தகமும் கையுமாகக் கிளம்பி விடுவேன். பள்ளிக்கூடத்துக்கு ஒன்றாகப் போகும் நாலைந்து பேர்கள். எனக்கு அந்தக் குரல் மட்டும் அடையாளம் தெரியும். அந்தச் சிரிப்பொலி மட்டும் தனியாகக் கேட்கும். நானே பேசி அந்தப் பதிலையும் கேட்கத் தோன்றும். ஆனால் பேசவில்லை. விளக்க முடியாத ஏதோ ஒரு கூச்சம் தடுத்து நிறுத்தி வைத்திருந்தது.

கோவிலில் உற்சவம். நான் சுவாமி புறப்பாட்டைப் பார்க்கப் போனவன்தான். ஆனால் என் பார்வை கூட்டத்தின் நடுவே ஆகாயத்தைச் சுட்டிக் காட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த குழந்தை முகத்தில்தான் நிலைத்து நின்றது.

சட்டென்று ஓர் ஆகாச வாணம் சீறிக் கொண்டு கிளம்பி உயரத்தில் நின்று வெடித்தது. அதிலிருந்து பூமழையாக வண்ணச் சிதறல்கள் உதிர்ந்தன. ஒரே ஒரு நீலப்பொறி மட்டும் நழுவி நெடுந்தூரம் விழுந்து இருளில் கலந்து போயிற்று. அதைத் தொடர்ந்து பார்த்த வண்ணம் அதிசயித்து நின்றாள் ஜானு. கூட்டம் கலைந்து வந்தபோது எங்கள் தெருவின் பக்கம் திரும்பியவர்கள் நாங்கள் இருவருந்தான். அந்த வேளையில் அவளுக்கு நான் துணையா? ஏதோ பேச வேண்டுமென்று ஆர்வத்தை அடக்க முடியவில்லை. அதுதான் முதல் தடவையாக நான் அவளிடம் பேசியது.

மறுநாள் அம்மாவின் முன்னிலையிலும் பேசினேன். நாங்கள் பேச ஆரம்பித்து விட்டது தெரியட்டுமென்றுதான். அம்மாவின் அதிசயித்த பார்வைக்குளத்தனையோ அர்த்தங்கள்!

அவள் குரலில் மறுப்பு இல்லை. சங்கோசமும் இல்லை. இயல்பாக, எளிமையாக எழுந்த பதிலில் நேர்மையான நினைவின் பிம்பம் தெரிந்தது. என்னையும் அந்த இயற்கையான சுபாவத்தில் வரம்பு கட்டி நிறுத்துவது போல அந்தப் பார்வை. ஆனாலும் என் மனம் அதில் அழுந்தி நிற்கும். அவர்கள் வீட்டு மாடியில் இளம் வெய்யிலின் ஒளியில் முடியாத கூந்தல் காற்றில் அலைய அவள் துணி உலர்த்தியபடி நிற்பாள். தற்செயலாகத் திரும்பும் முகம் என்னைப் பார்த்து விட்டால், புரிந்து கொண்ட ஜாடையாக ஒரு புன்னகை தெளிந்து மறையும்.

எனக்குள் ஒரு தவிப்பு. அந்தக் கன்னத்தின் வழுவழுப்பில், நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் ஒளிந்துகொண்டு உறுத்தும் வேகம். கள்ளமில்லாத அந்தப் பார்வை நெஞ்சைச் சுடும். ஊமையாய் ஓர் அவமான உணர்ச்சியில் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்வேன். அந்த நிமிஷத்தை இப்போது நினைத்தால் கூட எனக்குக் கண்ணெதிரில் மின்னல்கள் இணை பிரிந்து பாய்கின்றன.

அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். கல்யாணக் கூடம். ஆனாலும் உள்ளே நிழலொளியாகத்தான் வெளிச்சம். வாழை இலைக்கு எதிரே தட்டுப் பாய் போட்டிருந்தது. மறுக்க முடியாமல் உட்கார்ந்தேன். இலையில் உப்புமாவை வைத்து விட்டு அவள் தூண் மறைவில் நின்றாள். நிமிர்ந்து பார்க்காவிட்டாலும் அவள் பார்வை என்மேல் தங்கியது எனக்குத் தெரியாமலில்லை.

கணீரென்று ''உப்பு நிறையப் போட்டிருக்கிறேனா? நான்தான் பண்ணினேன்'' என்றாள்.

பக்கத்திலிருந்த அவள் தாய்க்குத் தூக்கி வாரிப் போட்டிருக்க வேண்டும். எங்கள் இருவருக்கும்தான் சிரிப்புத் தாங்க முடியவில்லை. கலகலவென்று அப்படி அவள் சிரித்த போது எனக்கு வேறு எந்த விதமாகவும் நினைக்கத் துணிவில்லை.

மாலை நேரம். ஆற்றங்கரைப் பக்கம் உலாவப் போயிருந்தேன். கையில் காமிரா; தோய்ப்பதற்குத் துணிகளும் தண்ணீர் எடுக்கக் குடமுமாக அவள் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தாள். கால் விரல்கள் தண்ணீரை அளைந்தன. கையில் வைத்திருந்த கூழாங் கற்களை ஒவ்வொன்றாக நீரில் எறிந்து அதன் சுழிவைப் பார்த்தபடி விளையாடிக் கொண்டிருந்தாள்.

அவள் என்னைப் பார்க்கவில்லை. ஆனால் நான் அவளைப் பார்த்தேன். காமிராவைப் பிடித்த கை உயர எழுந்து, கீழே இறங்க மனமில்லாமல் அப்படியே நின்றது. நான் செய்வது சரிதானா? அவளுக்குத் தெரியாமல், அவளுடைய அனுமதி யில்லாமல் —

குற்ற நினைவின் சுமையில் கை ஓடவில்லை: அதற்குள் அவளே திரும்பி விட்டாள். கன்னக்

கதுப்புக்களில் மாம்பழச் செப்பு மிளிர்ந்தது. கருட்டை மயிர் வெய்யிலில் பளபளத்தது.

"படம் பிடிக்கப் போகிறீர்களா? என்னைத் தானே?" என்று கையைப் பின்னால் கட்டிக் கொண்டு நளினமாக எழுந்து நின்றாள். அந்தத் துணிவில் என் தைரியம் தளர்ந்து போயிற்று.

"உனக்கு ஆட்சேபணை இல்லை என்றால்...?" என்று இழுத்தேன்.

"ஒரு நிபந்தனை. அப்புறம் நான் ஒரு தடவை படம் எடுப்பேன்."

"யாரை?"

"உங்களை!"

அந்த மௌனப் புன்னகையில் என் மனம் நெகிழ்ந்தது. அதன் தூய்மையில் என் எண்ணங்கள் புடமிட்டு ஒளி வீசின.

எங்கெங்கோ சுற்றி விட்டு வீடு திரும்பிய போது இருள் கவிந்து விட்டது. ஆனால் நெடு நேரம் அந்த நிமிர்ந்த முகமும், விழிகளில் தெறித்த அச்சமற்ற பார்வையும், நெஞ்சப் பதிவிலிருந்து மறையவில்லை. பிலிமில் வைத்த வாசனைப் பொருளாய் அந்த நினைவு மணந்து நெஞ்சில் கமழ்ந்து கொண்டே இருந்தது. 'ஆல்ப'த்தில் அந்தப் புகைப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம், அந்தப் படம் வெற்று நிழல் அல்ல; அறுந்து போக முடியாத நினைவின் தொடர்.

அவள் எடுத்திருந்த என் படம் சரியாக வந்திருப்பதைப் பார்த்தபோதுதான் அவளுக்கு எத்தனை குதூகலம்? பெரிய காரியம் ஒன்றைச் சாதித்து விட்டதைப் போன்ற பெருமை!

"ஆனால் இதை யாரிடமும் காட்ட வேண்டாம்" என்றேன்.

"ஏன்?" என்று என்னை மடக்குவதுபோலப் பார்த்தாள். எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவள் பார்வையின் தூய்மை எல்லாருடைய கண்களிலும் இருக்குமா? அதை எப்படிச் சொல்வது?

அப்புறம் அவளை நான் பார்க்கவில்லை. ஆனால் அவள் என் வேண்டுகோளைத் தட்ட வில்லை என்று தெரிந்து கொண்டேன். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு, அன்று கிராமத்தி லிருந்து புறப்பட்ட அன்றைக்கு அந்த நிகழ்ச்சி தான் எவ்வளவு எதிர்பாராத விதமாக அமைந்து விட்டது? அதன் நினைவு மீண்டும் மீண்டும் மனத்தில் எழுப்பும் ஏக்கத்தை என்னால் எப்படி உதற முடியும்?

ஊருக்குப் புறப்பட வேண்டிய நாள். சாயங்காலம் தஞ்சாவூரில் ரயில். சாமான் களை யெல்லாம் கட்டி வைத்தாகி விட்டது. திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந் தேன். வாசலில் கண்ணைப் பறிக்கும் வெய் யில். தெரு முக்கில் மாட்டு வண்டி திரும்பும் சத்தம் கேட்டது. மூடியிருந்த அரைக் கண் திறந்தது. வண்டி எதிர் வீட்டு வாசலில் நின்றது தெரிந்தது.

இறங்கியது நாணுவின் தகப்பனார். அவர் என்னைப் பார்க்கவில்லை. எனக்கும் ஒரு திகைப் புத்தான். அவரை நான் எதிர்பார்க்கவில்லை. அதுமட்டுமல்ல. அவசரம் புரிந்துகொள்ள முடியாமல் திடீரென்று ஒரு அப்பு. மனத்தில் ஏதோ வாடிப் போனதும் போலப் பார்வையில் ஒரு சோகம்.



புறப்படு முன் அவரிடம் சொல்லிக்கொள்ள நினைத்தேன். அவரைப் பார்க்க வேண்டுமென்கிற ஆர்வம் மட்டும் தூண்டிய நினைப்பல்ல அது. ஜானுவைப் பற்றிக் கேட்க முடியுமா? அவர் என்ன நினைப்பார்?

நிலைப்படியில் காலை வைத்ததும் அவர் பார்வை நிமிர்ந்தது. கண்கள் முகத்தைத் தேடின. புரிந்து கொள்ளக் கொஞ்ச நேரம் ஆகியிருக்க வேண்டும்.

"நீயா? வா."

மேல் துண்டை எடுத்து நெற்றியில் துளிர்த்த வியர்வையை ஒற்றிக் கொண்டார்.

எங்கள் குடும்பத்தைப் பற்றி விசாரித்தவர் சட்டென்று நிறுத்தினார்.

"ஜானு போய் விட்டாள். ஆறு மாதங்களாச்சு....."

அவர் குரல் பம்மி மழுங்கி உயிரற்று உதிர்ந்தது. எனக்கு அடிவயிற்றில் சில்லிட்டுக் கொண்டு ஓர் அதிர்ச்சி.

"இங்கே வந்த இரண்டு மணி நேரமாக அந்த ஞாபகந்தான். அவள் மூலைக்கு மூலை நிற்பது போல ஒரு பிரமை. அந்த நாளில் நாங்கள் பேசிக் கொண்ட ஞாபகம் வந்தது. உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டேன் உடனே. நானும் மாமியும் நினைத்ததுண்டு .... எங்களுக்கு அதிருஷ்டமில்லை. இப்போது அந்த நினைப்புக்கும் அர்த்தமில்லை."

அவர் என்னைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தார். அவர்கள் குடும்பத்தில் எனக்கு ஓர் இடமா? இதையென்று என் பார்வையைக் கண்ணீர் மறைத்தது.

"அவள் போய்விட்ட பிறகு ஒரு நாள் அவள் பெட்டியிலிருந்த சாமான்களையெல்லாம் எடுத்தேன். அடியில் ஒரு கைக்குட்டையின் மடிப்பில் உன் படம் இருந்தது —"

இப்போது அவர் பேச்சு எனக்குப் புரிந்து விட்டது. பிரமித்துப் போனேன். ஜானுவின் நிலையில் அப்படி ஓர் எண்ணம் துளிர்த்து வளர்ந்திருக்குமா?

எனக்குத் தெரிந்தவரை அந்தப் படம் வெறும் அடையாளம். ஒரு சாதாரணச் சாதனையில் ஏற்படும் பெருமையின் சின்னம். அவ்வளவுதான். அந்தக் கள்ளமில்லாத உள்ளத்தில் வேறு எந்த நினைவின் நிழலும் இருந்திருக்க முடியாது. ஆனால் —

ஆனால் அவள் அப்படியே இருந்திருப்பாளா? பருவத்தின் மலர்ச்சியில் அந்த உள்ளத்தில் ஏன் கனிவு ஏற்பட்டிருக்கக் கூடாது? மொட்டு விரிந்து மலராகி மணம் சிந்துவதைப் போல, அந்த நாளைய ஞாபகங்கள் ஏன் புதிய உருவெடுத்திருக்கக் கூடாது?

அவள் மனத்தில் எனக்கு என்ன இடம் கொடுத்திருந்தாள்? கைக்குட்டையின் மடிப்பில் அவள் பத்திரமாகப் போற்றி வைத்திருந்தது எதை? என் படத்தையா? என் நினைவையா?

மெய் சிலிர்த்தது. அது எனக்குத் தெரியாது. இனி தெரியவும் முடியாது. உருவில்லாத ஏக்கம் என்னைச் சூழ்ந்தது.

எழுந்து வெளியே வந்தேன். நிலை வாசற்படியில் சாய்ந்து கவரை நகத்தால் கீறிய படி அவர் பேசியது காதில் விழுந்தது. துயரத்தில் கனத்து இறுகிய குரல்.

"அவள் ஞாபகமாக ஒரு போட்டோ இல்லை எங்களிடம்.... எப்படியோ அந்த மாதிரி நேர்ந்து போய் விட்டது."


ஏதோ சொல்ல வாயெடுத்தவன் அடக்கிக் கொண்டேன். அவள் புகைப்படம் அவள் மறைவுக்குப் பிறகு அதுதான் அவர்களுக்கு அவள் ஞாபகமாக இருக்க முடியும்; ஆனால் அவள் இருந்த போதும் எனக்கு அப்படித்தான் இருந்ததென்று அவர்களுக்கு எப்படித் தெரிய முடியும்?

இன்று அவள் புகைப்படத்தைத் தபாலில் அனுப்பி விட்டேன். ஆல்பத்தில் அந்தப் பக்கம் காலியாக இருக்கிறது. இருந்தாலும் அங்கே புன்சிரிப்பு மாறாத அந்த முகம் ஜொலிப்பது போல் நினைத்துக் கொள்கிறேன். நினைவுக்கு அழிவில்லை. உன் பிரக்ஞையில், அந்த ஒரே நிலையில் நான் ஒன்றி நின்றால் போதும்.

அந்தப் புகைப்படத்தினால் எனக்கு இனி ஆறுதல் இருக்க முடியாது. இறந்த பெண்ணின் நினைவில் துடிக்கும் பெற்றோர்களுக்கு அது ஆறுதல் தர முடியுமென்றால் அதை நான் மறுப்பானேன்?


ராபின் ப்ளூ
Robin Ultramarine
STANDARD
QUALITY


மரிக்கொழுந்து
கனகா



ஆண்டவன் பிறந்தான்...

ரா.வீழிநாதன்

மாலை நாலரை மணியிருக்கும். கிழக்கு மாட வாசற்படியில் 'ஜே, ஜே' என்று ஏகக் கூட்டம். படிவாசற்பிள்ளையார் கோயிலுக்குப் போகும் பாதையில் இருந்த பூக்கடைகளிலிருந்து எழுந்த மலர் மணம் அந்தப் பிராந்தியத்தையே ஆட்கொண்டிருந்தது.

படி வாசற்பிள்ளையார் கோயில் வரை கூட்டம் நெரிந்துத் தள்ளிக் கொண்டிருந்தது. பிள்ளையாரை வணங்கி வலம் வந்து, திரும்பி வெளியே வருவதற்குள் விழி பிதுங்கி விடும். அத்தனை கூட்டம்.

அன்று முதல் தேதி. அதோடு வெள்ளிக் கிழமை. சம்பளம் வாங்கியிருந்த பலருக்கும் பிறர் கையை எதிர்பாராமல், கடனென்று கைநீட்டாமல், மாதம் முழுவதும் நிர்விக்கினமாக ஓடியாக வேண்டும் என்ற கவலை. எனவே, என்றைக்கும் இல்லாதபடி, நல்ல படியாக வாழ்க்கை நடக்க வேண்டுமே என்று விக்கின விநாயகரை வேண்டிக் கொள்வதற்காகத் தினப்படியைக் காட்டிலும் அதிகப்படியாகவே கூடியிருந்தனர்; விசேஷ வழிபாடுகள் நடத்தி மகிழ்ந்தனர்.

போடும் சிதர்த் தேங்காய்களை மக்கள் விழுந்தடித்துப் பொறுக்குகிறார்களே! அவர்களது அனுக்கிரகத்தினாலோ, அல்லது சிதர்த் தேங்காய் அடிக்கும் பக்தர்களது பக்தி மேலீட்டினாலோ, தேங்காய்த் துண்டங்களைப் பொறுக்கும் நபர்களுக்குச் சிறிதும் விபத்து நேர்ந்து விடக் கூடாதே என்று நல்ல எண்ணத்தில் ஒதுக்குப்புறமாக ஓரிடம் ஒதுக்கி யிருக்கிறார்கள். சிதர்த் தேங்காய் போடுபவர்கள் அங்கு போய்த் தான் போட வேண்டும் என்றும் வரைமுறை விதித்திருந்தார்கள். நாளடைவில், சிதர்த் தேங்காய்கள் எந்த நோக்கத்துடன் போடப்பட்டனவோ, அந்த நோக்கம் மாறியது. சிதர்த் தேங்காய்களை யாரும் தொடக் கூடாது என்று விதித்து விட்டார்கள். தேங்காயெல்லாம் எண்ணெயாக உருமாறிப் பணமாகப் பரிணமித்துத் தேவஸ்தானத்து கஜானாப் பெட்டியைச் சரணடைந்த கதை நமக்குத் தேவையில்லை. அன்றைக்குக் கூடியிருந்த கூட்டத்தில் கை ஓங்கிச் சிதர்த் தேங்காயை அடிக்க முடியாதவர்களும், எத்தனையோ தேங்காய்கள் முழுசாகவே உடக் காட்சியளித்தன என்பதைத் தெரிந்துகொண்டான். அன்று கூடியிருந்த கூட்டம் எத்தகையது என்பதை ஓரளவு விளங்கிக் கொள்ள உதவியாக இருக்கும்.

எல்லாப் பிடித்தங்களும் போக, தொள்ளாயிரத்தைம்பதே சொச்சம் ரூபாய் மாதச் சம்பளமாகப் பெற்று வந்த ரகுராமன் தினமும் குறைந்தது அந்த வழியாக இரண்டு நடையாவது போய் வருவான்; வரவேண்டியவனும் கூட. ஏனெனில் அவன் மலைக் கோட்டையின் தெற்கு வீதியில் குடியிருந்தான். அவன் வேலை பார்த்து வந்த அலுவலகமோ பெரிய கடைத் தெருவின் நடுவில் இருந்தது.

'பிள்ளையாரப்பா! எனக்கு இன்னும் நல்ல வழி காட்டப்பா!' என்று அல்லும் பகலும் வேண்டிக் கொள்ளும் நிலையில் இருந்தான் அவன். மூப்பும் பிணியும் முதிர்ந்த தாயார், வறுமை காரணமாக வற்றலாகத் தோற்றமளிக்கு மனைவி, போதும்போதாததற்குநோஞ்சான் குழந்தை ஒன்று. அதுவும் கட்டி விழுந்து கணையில் உழன்று துன்பப்படும் சிசு. இது தான் அவன் குடும்பம். காலா காலத்தில் வீட்டுக்கு வாடகை கொடுத்து, உப்பு, புளி, மிளகாய் வாங்கிப் போட்டுக் குடும்பத்தை நடத்திச் செல்லுவது அவனுக்குப் பெரும் பிரயாசையாகவே இருக்கிறது. நப்பித் தவரிக் குழந்தைக்கோ, தாயாருக்கோ திடீரென்று நோய் நொடியென்று வந்து விட்டால், மருந்துக்கும் மாயத்துக்கும் பணச் சிரமத்தைச் சமாளிப்பதற்குள் தாவே தீர்ந்து விடும். மானியான அவன் பிறரிடம் சென்று கடன் என்று கைநீட்டி அறியாதவன். ஆன்மிக பக்தியும், அறிவாற்றலும் நிறைந்த அவன், போகும் பொழுதும், வரும் பொழுதும் எத்தகைய இக்கட்டும் ஏற்படாமல் இருக்கப் படிவாசற் பிள்ளையாரை வேண்டிக் கொள்ளத் தவறுவதில்லை.

ஐப்பசி தலை காட்டியது. தீபாவளி தொலைவிலிருந்து எட்டிப் பார்த்தது. தீபாவளிச் செலவைச் சமாளிக்க என்ன வழி என்ற சிந்தனை மனத்தைத் தாக்கி மூளையைக் குடைந்தெடுத்தது; கடைந்தெடுத்தது.

பற்றாக் குறைக்குக் காலையில் எழுந்ததும் எழுந்திருக்காததுமாகக் குழந்தை கண்ணனின் முகம் 'ஜிவு, ஜிவு' என்றிருந்தது. கணைக்கு அடிப்படையான முன்னேற்பாடு தொடங்கி

விட்டது என்பதும் தெள்ளத் தெளியத் தெரிந்தது.

காரியாலயத்துக்குப் போகும் போதே படிவாசற் பிள்ளையாரிடம் வேண்டிக் கொண்டான். வீடு திரும்பும் பொழுதும், 'ஆண்டவனே! குழந்தைக்குக் கன்ன – கின்ன வராமல் நான் வீட்டுக்குப் போகும் பொழுது விளையாடிக்கொண்டிருக்க வேண்டும்' என்ற ஸ்மரணை தான். கூட்டம் சேர்ந்து தள்ள, அதன் போக்கில் பிள்ளையாரை இரண்டு வலம் வந்து 'தப்பினோம், பிழைத்தோம்' என்று படியேறி வீட்டுக்கு வந்தான்.


வீட்டுக்கு வந்து பார்த்தால், குழந்தையின் உடல் நிலை ஏக அமர்க்களப்பட்டது. தாயும் மனைவியும் குழந்தையை எடுத்துச் சென்று டாக்டரிடம் காட்டி விட்டு வந்திருந்தார்கள். அவர் எழுதித் தந்திருந்த மருந்தை வாங்க அவர்களுடைய கையில் பணம் இல்லாததனால் ரகுராமன்வரட்டும் என்று காத்திருந்தார்கள். ஆசையுடன் எதிர்பார்க்க வேண்டிய மனைவி, அன்புடன் வரவேற்க வேண்டிய அன்னை, இருவரும் சிந்தனையை முகத்தில் தேக்கி, 'ரகுராமன் சீக்கிரம் சம்பளப் பணத்தோடு வீட்டுக்குத் திரும்ப மாட்டானா? குழந்தைக்கு விரைவில் மருந்து வாங்கிக் கொடுத்து அது படும் அவஸ்தையைக் குறைக்க மாட்டானா?' என்று எதிர் நோக்கியிருந்தனர்.

வந்ததும் வராததுமாக டாக்டரது சீட்டை வாங்கிக் கொண்டு ரகுராமன் கடைத் தெருவை நோக்கிப் புறப்படும்படியாகி விட்டது. வழிநெடுக, 'ஆண்டவனே! நல்ல வழி விடப்பா!' என்று வேண்டிக் கொண்டே சென்றான் அவன்.

ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டு மருந்துக் கடைக்குச் சென்று டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கினான். கடைக்காரன் போட்ட பில்லுக்குப் பணம் எடுக்கப் பையில் கையை விட்டான். அடுத்த கணம், ஆயிரம் தேள் ஏக காலத்தில் கொட்டினாற் போன்ற முறையில் கையை உதறினான். அண்டசராசரங்கள் அவ்வளவும் தட்டாமாலை சுற்றுவது போல் இருந்தது அவனுக்கு. கண்கள் கும்மிருட்டாக இருட்டிக் கொண்டு வந்தது.

காரணம், முதல் மாத உழைப்புக்கு ஊதியமாக அவன் பெற்றிருந்த அத்தனை ரூபாயும் காசா-பைசா பாக்கியில்லாமல் 'அபேஸா'கியிருந்ததுதான். அவன் முகம் போன போக்கைக் கண்ட கடைக்காரன், ''என்ன சார்?'' என்று அநுதாபத்துடன் கேட்டான்.

''ஒன்றுமில்லை. பர்ஸை வீட்டிலேயே மறந்து வைத்து விட்டு வந்து விட்டேன். இதோ போய் எடுத்து வருகிறேன்!'' என்று சொல்லித் திரும்பியவன்தான் ரகுராமன். அப்புறம் அந்தக் கடைப் பக்கம் திரும்பவில்லை. கடைக்காரனுக் கெதிரே, தான் ஏமாந்து பணத்தைக்கோட்டை விட்டு விட்டதைக் காட்டிக் கொள்ள அவ



ஜுக்கு மனம் கேட்கவில்லை. ஆனால் பல முகங்களைப் பார்த்துப் பழகிய கடைக்காரனோ, என்ன நடந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு ஊகித்தறிந்து கொண்டான். கைதட்டிக் கூப்பிட்டு, ''பரவாயில்லை. மருந்தை எடுத்துப் போங்கள். பின்னால் பணம் கொண்டு வந்து தாருங்கள்!'' என்றும் சொல்லிப் பார்த்தான். கடைக்காரன் சொன்னது அவன் காதில் விழத்தான் இல்லையோ, அல்லது வேண்டுமென்றேதான் அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லையோ, தெரியாது! நடையை எட்டிப் போட்டு விறுவிறுவென்று நடந்தான்.

அடுத்த மாதத்தை ஓட்ட அவன் குடும்பத்துக்கென்று கிடைத்த அத்தனை தொகையும் அல்லவா கொள்ளை போய் விட்டது? வருகின்ற தீபாவளிக்கு ஒளிகாட்டியாகத் திகழ்ந்த பணம் முழுதும் அல்லவா பறிபோய் விட்டது?

ஆமாம், அந்தப் பணம் எப்பொழுது பறிபோயிருக்கும்? அலுவலகம் விட்டு வீட்டுக்குப் போன பொழுதா? மருந்து வாங்கக் கடைக்குத் திரும்பி வந்த பொழுதா? இதைப் பற்றியெல்லாம் ஆற அமர இருந்து சிந்தித்துப் பார்க்க அவன் மனம் எங்கே ஒரு நிலையில் இருந்தது?

ஆமாம், பறிபோன பணத்தைப் பற்றிப் போலீசில் எழுதி வைக்கலாமா? அல்லது பிறரிடம் சொல்லிப் பார்க்கலாமா? என்ன சொல்லி என்ன? என்ன எழுதி வைத்தென்ன? யானை வாயில் போன கரும்பு எங்கேயாவது திரும்பியது உண்டா?

'யானை முகத்தானே! கள்ளனுக்கும் கயவனுக்கும் கூட வழிகாட்டும் நீ ரகுராமனை இப்படியா தட்டிப் பறிக்க வேண்டும்?'

பித்துப் பிடித்தவனைப் போல் பிள்ளையார் கோயிலை அடைந்த ரகுராமன், ஒரு வெறியில் கோயிலைச் சுற்றிச் சுற்றி வலம் வரலானான். ஏதும் அறியாதவருக்கு ஆண்டவனை விட்டால் வேறு வழி யார்? கதிதான் யார்? அவன் சுற்றிய அந்தச் சுற்றலுக்கு ஆண்டவன் கண் திறந்து அருள் பாலித்தால்தான் உண்டு. அவன் கண்கள் ஒன்றும் விளங்காமல் கழன்று இருண்டுகொண்டு வந்தன.

2

''என்ன சொக்கா! இன்னிக்கு என்ன தேதி, தெரியுமில்லே?''

''தெரியாமல் என்ன? முதல் தேதி!''

''இன்னிக்கு எவ்வளவு தேட்டை போட்டே?''

கீழச் சிந்தாமணி படித்துறையை ஒட்டி தூற்போல் இருந்த திட்டிலிருந்து இந்தப் பேச்சுக் குரல் வந்தது.

''எதுக்கும் பொசிப்புன்னு ஒண்ணுவேணும் அண்ணாத்தே! நான் போன இடமெல்லாம் இன்னிக்குப் போலீஸ்காரங்க கழுகாட்டமா வட்டமிட்டுக் கிட்டிருந்தாங்க. ஒரு தம்பிடின்னு ஒரு தம்பிடி பெயரலே! அது போகட்டும், ரங்கண்ணே! உன் கதை என்ன சொல்லு ...?''

''உன் கதைக்கு என் கதை வளப்பந்தான். ஆனால் நம்ம சீடப் பிள்ளை வேலு இருக்கானே, அவன் பலே ஆள் அப்பா! சொல்லிக் கொடுத்ததைச் சட்டுன்னு பிடிச்சுக்கிட்டான். சாயங்காலம் அஞ்சரை மணியிலிருந்து ஏழரை மணிக்குள் எட்டு இடத்திலே தேட்டை போட்டிருக்கான்னு பார்த்துக்கோயேன்!''

''அப்போ உன் சீடப்பிள்ளை பலே கைகாரனாயிருப்பான் போலிருக்கிறதே! தகப்பன் சாமி ஆயிடுவானோ?''

''ஆனாலும் ஆயிடுவான். இதிலே அதிசயப்படுவதற்கு ஒண்ணும் இல்லே. அதோடு பலலும் நம்பிக்கையான பயல், அப்பா! போய் புளுகட்டு, தப்புத் தண்டா விவகாரம் அவன் கிட்டே கிடையாது. நீ பழக்கினியே பழனின்னு ஒரு பொறுப்பத்த பயலே! அவன் உனக்கு ஒரு தம்பிடிக்கு உதவினானான்னு கேட்கிறேன்! கிடைச்சதைச் சுருட்டிக்கிட்டு ராவோடு ராவா அந்தக் குட்டி மீனாச்சியையும் இழுத்துக்கிட்டு ஓடிட்டானில்லே? கால் ரூபாக் காசுக் குருதட்சிணைன்னாவது கொண்டு வந்து கொடுத்தானா?''

''ரொம்ப மோசக்கார பயல் அப்பா அவன்! அது மட்டுமா? ஒரு தடவை போலீசிலே மாட்டிக்கிட்ட போது என்னையே அல்ல காட்டிக் கொடுக்கப் பார்த்துட்டான்!''

''நம்ம பயல் வேலு இருக்கானே, அப்படிப்பட்ட பிள்ளை இல்லேப்பா! ஒரு தம்பிடின்னு ஒரு தம்பிடி கணக்குன்னு எடுத்து மறைச்சு வைச்சுக்கல்லேப்பா! தம்பிடி கணக்கா அத்தனையும் என்கிட்டே கொண்டு வந்து ஒப்பிச்சிட்டான்!''

''சீடப்பிள்ளைன்னு அப்படியில்லே கிடைக்கணும்! எனக்கு வந்து வாச்சுதே ஒரு தத்தாரி! தூ!'' என்று இகழ்ந்தான்.

''திருடத் தெரிஞ்சா மட்டும் போதாது! தெத்தவும் தெரியணும்பாங்களே, அதையும் சொல்லி வைச்சிருக்கேன். ஜேப் மாரித் தொழில் மட்டும் கத்துக்கிறது போதாதுடா! நாலு வழியும் தெரிஞ்சு வச்சிக்கணும்டான்னேன்! கன்னம் வைக்க, சுவரேறிக் குதிக்கவென்று எல்லாப் பாடமும் சொல்லி வைச்சேன். பாரு, பய எப்படிப் புரிஞ்சுக்கிட்டான், தெரியுமா?''

''நீ என்ன ரங்கண்ணே! நீதான் வாத்தியாருக்கு வாத்தியாராச்சுதே! உன்னுகிட்டே படிச்ச பிள்ளைங்க எங்கேயாவது சோடை போவானுங்களா?''

''அது மெய்தான் சொக்கா! இருந்தாலும் இந்த வேலுப் பயலுக்கு இத்தனை துணிச்சல் கூடாது. என்ன சொல்றான், தெரியுமா? இன்னிக்கு ராவைக்கு மலைக்கோட்டை மேலே போய் ஒரு வீட்டிலே சுவரேறிக் குதிச்சுத் திருடிக்கிட்டு வர்றேங்கறான்!''

''மலைக் கோட்டைக்குப் போவா? என்ன அண்ணே நீ சொல்றே? பெரிய பெரிய கில்லாடிங்களே போய் முதுகுக்கு 'டின்' கட்டிக்கிட்டு வர்றாங்க. இந்தப் பொடிப் பயல் போறது என்ன கதி ஆகும்? மலைக் கோட்டை எலிப் பொறி போல. அங்கே போகச் சம்மதம் சொல்லிடாதே. வேறு எங்கனாச்சும் போகச் சொல்லு!''

''ஆமாம். நீ சொல்றது மெய்தான். மூணுக் குன்று சத்தம் போட்டாக்கூட எல்லாரும் விழிச்சுக்குவாங்க. ஆள் தப்பி ஓட மூணே மூணு வழிதானே இருக்குது. முதல்லேஅதைப் போய் மறிச்சுக்குவானுங்க. அப்புறமா அஞ்சாறு பேரு மலை மேலே ஏறி வீடு வீடாகச் சல்லடை போட்டுச் சலித்து எடுத்துடுவா

உங்கள் வீட்டிற்குப் புதியது!

செம்பாலான அடிப்பாகத்துடனுள்ள

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்

செம்பாலான அடிப்பாகம்


உணவு அடியில் பிடிப்பதையும் தீய்ந்துபோவதையும் தடுக்கிறது



ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஒரு ஆயுட்கால முதலீடு. எளிதில் சுத்தமாக வைத்திருக்கவும், சுத்தப்படுத்தவும் முடிகிறது. அதைக் கழுவி அலம்பி, துடைத்து வைக்கலாம். அவ்வளவேதான். சமையல் செய்வதற்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மிகச் சிறந்தது. அதற்கென எவ்வித ருசியும் கிடையாது. மேலும் அதன் செம்பாலான அடிப்பாகம் உணவு அடியில் பிடிப்பதையும், தீய்ந்து போவதையும் தடுக்கிறது. உங்கள் ஊரிலுள்ள கடையில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் கிடைக்காவிடில், அவை கிடைக்குமிடம் பற்றிய விபரத்திற்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:

NICKEL INFORMATION BUREAU PRIVATE LIMITED,

United Bank of India Building,
Sir Phirozeshah Mehta Road, Bombay 1.



ளுங்க. ஆள் மாட்டிக்காமல் இருக்க முடியாது. மாட்டிக்கிட்டா மட்டையடி தான். மூன்னிப்பள்ளம் முனியன் மாட்டிக்கிட்டானே ஒருதரம்! எனக்குத் தெரியாதா?''

''அதனுலே நான் சொல்றது என்னன்னு நமக்கு எதுக்கு இந்த வீண் வம்பும் விசப்பரீட்சையும்? பேசாமல் செஞ்சிக் கிட்டிருக்கிற வேலையையே செய்யச் சொல்லு. போதும்!''

''ஆமாமாம். நானும் அப்படித்தான் சொன்னேன். ஆண்டவன் இந்த வழியிலே கொடுக்கிறது போதுமடா. கிடைச்சதைக் கொண்டு திருப்திப் பட்டுக்குவோமடான்னேன்! ஆனல் பயல் அவ்வையார் பாட்டைப் படிக்கிறன். 'களவும் கத்து மற'ங்கிறன். பிடிவாதம் பிடிக்கிறன். அங்கே போய்த்தான் திருடி வருவானும்!''

''எனக்கென்னமோ இதிலே கேடுகாலம்னு தான் படுது. சொல்லிப் பாரு. கேட்டாக் கேக்கிறன். கேக்காட்டிப் போறன்! சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்குக் கூட வரும்?''

''நல்லாச் சொன்னே! இதையேதான் நானும் சொன்னேன். அதுக்கு அந்தப் பயல் என்ன சொன்னன், தெரியுமா? 'குட்டுப் பட்டா மோதிரக் கையாலே குட்டுப்படணும். திருடினு மலைக் கோட்டையிலே திருடணும்'ங்கிறன். அதோடு விட்டானு? அதையும் இன்னிக்கு ராவையே செஞ்சுப் பார்த்துடப் போறேன்னு போயிருக்கிறன். இத்தனை பிடிவாதக்காரப் பிள்ளையை என்ன பண்றது? ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு அனுப்பி வைச்சிருக்கேன்!''


''சொன்ன சொல்லைக் கேட்காத பிள்ளைங்களை என்ன செய்வது? ஆண்டவன்தான் காப்பாத்தணும் அவங்களை!''

இந்த ஆண்டவன் இருக்கானே, இவன் ஒரு விந்தைப் பேர்வழி. நல்லவர்களுக்கும் இவன்தான் வழிகாட்ட வேண்டியிருக்கிறது. கெட்டவர்களுக்கும் அவனேதான் வழிகாட்ட வேண்டியிருக்கிறது. இவனை நம்பியே எல்லோரும் காரியத்தில் இறங்க வேண்டியிருக்கிறது. இவனுக்கும் பயந்தே காரியத்தில் இறங்காமல் இருக்கவும் வேண்டியிருக்கிறது. இவனைப் பாம்பென்றும் தாண்ட முடிவதில்லை. பழுதை என்றும் மிதிக்கமுடிவதில்லை. தொட்டிற் பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தாலாட்டுப் பாடித் தூங்கவும் வைக்கப் பார்க்கிறன்! நல்ல வேடிக்கை! இப்படிப்பட்ட ஆண்டவனும் ஓர் ஆண்டவனு?

3

மலைக்கோட்டையில், மலையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் ஒரு விசேஷம் என்னவென்றல், திருடன் சுவரேறிக் குதித்து வீட்டுக்குள் நுழைவதற்குப் பதிலாகச் சுவர் இறங்கி நுழைய வேண்டும். அதற்கும் முன் கூட்டி, தருணம் பார்த்து ஆள் மலைப்பகுதியில் ஏறிப் பதுங்கிக் கொள்ள வேண்டும். அப்புறம் ஏமாந்தவர்கள் வீட்டில் சௌகரியமாக இறங்கித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம். தப்பித் தவறி ஆள் மாட்டிக் கொண்டு விட்டால், செம்மையாக உதை வாங்கிக் கொள்ள வேண்டியதுதான். எதிர்ச் சாரியிலோ வாசல் வழியாகப் போய் வாசல் வழியாகவே திரும்ப வேண்டும். வீட்டுக்குக் கொல்லைப் புறம் கிடையாது. அப்படிக் கொல்லைப்புறம் என்று ஒன்று இருப்பதாக வைத்துக் கொண்டால், அது கிடுகிடு பாதாளம்தான். தவறி விழுந்தால், கம்பம் கூத்

நகராசுர விதம்!



நாடிகள் சொல்வது போல் 'கரணம் தப்பினால் மரணம்' என்ற கதைதான்.

மலைக் கோட்டை வீடுகளில் திருடப் போய் ஒருவன் சாமான்யமாகத் தப்பி வந்து விட முடியாது. சிறிது சந்தேகம் தட்டினால் கூட ஊர் காவல் சங்கத்தினர், படி வாசல் பிள்ளையார் கோவிலுக்கு இறங்கும் வழி, புதுப்படி சந்து என்று சொல்லப்படும் இடுக்கு விட்ட சந்து, வண்டி முதலியவை போய் வரும் சறுக்குப் பாறைத் தெரு — இம் மூன்றிலும் உஷாராகி விடுவார்கள். பிறகு ஒரு பட்டாளமே புறப்பட்டு மலைக்கோட்டை முழுவதையும் சல்லடை போட்டுச் சலித்து எடுத்து விடும். அதனால் பொதுவாக ஏமாந்திருப்பவர்கள் கண்களில் மண்ணைத் தூவிப் பொருள்களை 'அபேஸ்' செய்து வரலாமே ஒழிய, வீட்டில் புகுந்து திருடித் தப்பி வருவது என்பது சிரமமான காரியம்தான்.

அந்தக் காரியத்தைத்தான், இளங்கன்று பயமறியாது என்ற மூதுரைப்படி வேலு ஏற்றிருந்தான்.

அவன் அந்த வீட்டில் நுழைந்த போது இரவு மணி பதினொன்று இருக்கும். வீடு நிசப்தமாயிருந்தது. எல்லோரும் தூங்கியிருப்பார்களோ? ஆனால் கிளிக்கூண்டு போன்ற அந்த வீட்டின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறதே! என்ன செய்யலாம்? மேல் தளத்தில் நின்றவண்ணமே யோசித்துக் கொண்டிருந்தான் வேலு.

"இன்னும் இந்தப் பிள்ளையைக் காணுமே!" நிலவியிருந்த மௌனத்தைக் கிழித்துக் கொண்டு தாயாரின் குரல் வந்தது.

"மருந்து வாங்கப் போனவருக்கு ஏன்தான் இத்தனை நேரமோ? யாராவது பேசப் பிடித்துக் கொண்டிருப்பார்களோ?"

"பேசப் பிடித்துக் கொண்டாலும், அவன் நிற்க மாட்டானே? போன காரியம் எதுவோ, அதை முடித்து விட்டுத்தானே மற்றக் காரியங்களைப் பார்ப்பான்!"

"ஒரு வேளை டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்து கிடைக்காமல் சுற்றுகிறாரோ?"

"அப்படியே யிருந்தாலும் கடையெல்லாம் சாத்தும் நேரமாகி விட்டதே! இத்தனைநேரம் திரும்பி வந்திருக்க வேண்டுமே!"

"குழந்தையானால் இப்படிக் கண்ணை விழிக்காமல் கிடக்கிறது. அது மூச்சு விடும் சிரமத்தைப் பார்த்தால், என்ன ஆகுமோ என்று அச்சமாயிருக்கிறது. இவரானால் இன்னும் வரக் காணும். யாரைப் போய் எங்கே யென்று தேடச் சொல்வது?"

"கீழ்வீட்டுக் கிருஷ்ணமூர்த்தியை வேண்டுமானால் மலை வாசற்படி வரை போய்ப் பார்த்து வரச் சொல்லட்டுமா?"

இங்கே இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது கீழே கதவு தட்டும் சப்தம் கேட்டது. ஒரு வேளை ரகுவாயிருக்குமோ என்று ஓடிப் போய்க் கதவைத் திறந்தாள் மருமகள். நிஜமாகவே ரகுராமன் தான் நின்று கொண்டிருந்தான். ஆனால் வீட்டிலிருந்து மருந்து வாங்கப் புறப்பட்டவனுக்கும் இப்பொழுது திரும்பி வந்தவனுக்கும் தான் எத்தனை வித்தியாசம்? நான்கைந்து மணி நேரத்துக்குள் இத்தனை வேறுபாடா? பேய் அறைந்தவன் போலக் காட்சி யளித்தான்; பித்துப் பிடித்தவன் போலத் தோற்றமளித்தான்.

அதைக் கண்ட அவன் மனைவி வயிற்றில் 'பக்'கென்றது. என்ன விஷயம் என்று அவளுக்குக் கேட்கத் தோன்றவில்லை. திக்பிரமை பிடித்தவள் போல் அவளும் அவன் பின்னாலேயே நடந்தாள்.

ரகு நடைப்பிணமெனப் படியேறித் தங்கள் குடியிருப்பை அடைந்தான். அவன் முகம் போயிருந்த போக்கைப் பார்த்த தாயாருக்கும், 'என்ன விஷயம், ஏது விஷயம்?' என்று கேட்கத் தோன்றவில்லை. மூவரும் வெகு நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.

மேல் தளத்திலேயே ஒரு வேலையும் இல்லாமல் வேலு எத்தனை நேரம்தான் நிற்பான்? பொழுது போகாமல் இருப்புக் கொள்ளாமல் போகவே, பூனை போல் ஓசைப்படாமல் பதுங்கிப் பதுங்கிக் கீழே இறங்கி வந்தான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அறைக்குள் எட்டிப் பார்த்தான். அடித்து வைத்த சிலை போல மூவரும் உட்கார்ந்திருந்தனர்.

எமனுடன் போராடிக் கொண்டு ஒரு குழந்தை கிடந்தது. அதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ரகுராமனின் கண்களிலிருந்து நீர் பொல பொல வென்று வடிந்தது. பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க விக்கியவாறு கூறினான்: "அம்மா! குடிமுழுகிவிட்டது. குழந்தை கண்ணை இனி விழிப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை!"

"ஏண்டா இப்படி அச்சானியம் போலப் பிதற்றுகிறாய்? எங்கேடா மருந்து?" என்று கேட்டாள் தாயார்.

"அதைத்தானம்மா சொல்ல வருகிறேன். இன்று வாங்கின சம்பளம் தொண்ணூற்றைம்பது ரூபாய் சொச்சமும் எங்கோ தொலைந்து விட்டது! யாராவது என்னிடமிருந்து திருடிக் கொண்டு தான் போனார்களோ, அல்லது தவறித்தான் கீழே விழுந்து விட்டதோ?"

"ஏண்டா! இப்படி ஒருத்தன் அஜாக்கிரதையாக இருப்பானோடா?"

"தலைச்சுழி யாரை விட்டதம்மா!"

"இப்பொழுது குழந்தைக்கு மருந்துக்கு என்ன செய்வது?"

"கையில் காலணா என்றால், காலணா இல்லையே, அம்மா! யாரைப் போய் அம்மா கடன் கேட்பேன்? இது வரை கடன் வாங்கியறியேனே! அதோடு சம்பள தினமான இன்றைக்கே போய்க் கடன் கேட்பதென்றால் கூசுகிறதே, அம்மா! பணம் பறி போய் விட்டது என்று நான் பரிதாபப் பாட்டுப்பாடினால் அதை நம்பி ஒருவர் கேட்க வேண்டுமே! கணபதி பார்மஸியில் மருந்து எடுத்து வைத்துப் பில்லும் போட்டு விட்டான், அம்மா! பணத்தை எடுக்கப் பையில் கை விட்ட பொழுதுதான் பர்ஸ் பறி போன விஷயம் தெரிந்தது. ஒன்றும் சொல்லத் தோன்றாமல் ஓடி வந்தவன் படிவாசல் பிள்ளையாரே கதி என்று இத்தனை நேரமும் இருந்து விட்டேன்!"

பிள்ளையின் நிலைக்கிரங்கிப் பெற்ற மனமும் புலம்பியது: "கவலைப்படாதே! ஆண்டவன் இருக்கிறான். காப்பாற்றுவான்!" என்று அன்னை ஆறுதல் அளித்தாள்.

"அப்படி நம்ப வேண்டியதுதான். குழந்தை இப்படிப் புழுவாய்த் துடிக்கிறதே! அதன் சிரமத்தைப் போக்க நமக்கு வழி தோன்ற வில்லையே!" என்று மறுகினான் ரகுராமன்.

"ஏழைச் சொத்தைத் திருடியவன் என்றைக்காவது நன்றாயிருப்பானா? தெய்வம் அவனைச் சும்மா விடாது. கட்டாயம் கேட்கும்!" என்று அவன் மனைவியும் பொரிந்து தள்ளினாள்.

குழந்தையின் நிலை, குடும்பத்தின் நிலை — இரண்டையும் தன் கண்ணால் கண்ட வேலுவுக்கு மனத்தைப் பிழிந்தெடுத்தது.

"அடப் பாவமே! மாலையில் இவருடைய பர்ஸைத்தானா நாம் குறையாடினோம்? இரவும் இவர் வீட்டுக்கே திருட வந்து விட்டோமே! 'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழியைப் பொருளுள்ளதாக்கவா நாம் இங்கு வந்தோம்? சே! இந்த ஆண்டவனும் ஓர் அக்கிரமக்காரன் தானோ? கெடுத்த குடியையே கெடுத்து வேடிக்கை பார்ப்பதில் அவனுக்கு என்ன தான் ஆனந்தமோ, விளங்கவில்லையே!

"சேச்சே! தன் ஆனந்தத்துக்காகவா ஆண்டவன் நம்மை இங்கே அனுப்பி இருப்பான்? இராது. இராது; ஒரு நாளும் இராது. 'ஏலே! சிரம வாழ்வு வாழும் இந்த ஏழைக் குடும்பத்தினரைப் போய்க் குறையாடுறையே! நீ நல்லா இருப்பாயா? இந்த மாதிரி ஏழைக் குடும்பங்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டவன் எவனாவது நன்றாயிருந்து நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? திருடப் போவதானாலும் என் துணை வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறீர்களே, நியாயமா? உங்கள் திருட்டுக்கு நான் துணை நிற்க வேண்டுமா? பாருடா, பார்! இப்படி உங்கள் இழிசெயலுக்கு நான் துணை நின்று உதவினால், எத்தனை ஏழைக் குடும்பங்கள் கஷ்டப்படும்? நாசமாகும்? கடைசியில் என்னையே அல்லவா இட்டுத் தொடங்கும்? மக்கள் என் மீது நம்பிக்கை இழக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் செய்யும் சதியா இது?' — நேருக்கு நேர் தன் நிலையை எடுத்துக்காட்டவே ஆண்டவன் என்னை இங்கே கொண்டுவந்து விட்டிருப்பான்!

"இப்படித் திருடி நாம் என்ன சுகத்தைக் கண்டோம்? பிறர் மனத்தைப் புண்படுத்தி வாழத் தகுமா?"

வேலுவின் மனம் இப்படித் திசைமாறி ஓடலாயிற்று. திருடுவதற்கென்று முன்னேறி வந்தவனின் கால்கள் தாமாகவே பின் அடைந்தன. பேச்சு மூச்சுக் காட்டாமல் வந்தவழியே திரும்பினான் அவன்.

4

"அடே, கண்ணு வேலு! போன காரியம் என்ன ஆனது, பழமா!" — உயிர்க் களையற்றுத் திரும்பி வந்த வேலுவைப் பார்த்துக் கேட்டான் ரங்கன்.

"ஏன், தம்பி! இப்படி ஒரேயடியாக முகம் தொங்கி வந்திருக்கிறாயே! எங்கேயாவது முதலிலே 'டின் — டின்' கட்டி விட்டுட்டாங்களா?" — சொக்கன் குத்தலாகக் கேட்டான்.

வேலு பதில் பேசவில்லை. ரங்கனும் இப்பொழுது தொந்தரவு செய்ய வேண்டாம் என்று படுத்து உறங்கி விட்டான்.

ஆனால் எத்தனையோ புரண்டு புரண்டு படுத்தும் வேலுவுக்குத் தூக்கம் வரவில்லை. அவனது உள்ளக் களத்திலே தெளிவாகப் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. இதயக் கடலில் மனச்சாட்சி என்னும் மத்து சிலுப்பிக் கடைந்தது. நஞ்சை முதலில் வெளியே அகற்றி விட்டு அமுதம் தோன்றியது. வேலு தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்தான். நஞ்சுண்டவனைப் போலவே, அவன் நினைவைத் தின்று தீர்த்தான். இனி நல்லவனாக மாறுவது என்று உறுதி பூண்டான். திருட்டுத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விடுவது என்னும் முடிவுக்குவந்தான். 'ரங்கனிடம் போன பணம் பானை வாயில் போன கரும்பாயிற்றே! திரும்பி வராதே!' என்ற கவலை அவனை ஆட்கொண்டது. இருந்தாலும் அந்தத் தொல்லையைத் தெரிந்தே சொக்கன் மூலம் பர்ஸை மட்டுமாவது எப்படியும் அவனிடமிருந்து கிளப்பிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு விடுவது என்று தீர்மானித்தான். ரங்கன் தூங்கிக் கொண்டிருந்த பொழுது, தனது அந்தத் தீர்மானத்தை அப்படியே செயலாக்கவும் செய்தான். மற்ற பாவச் சொத்துக்களையெல்லாம் ரங்கனுக்கே விட்டு விட்டு அங்கிருந்து கம்பி நீட்டி விட்டான்.

மறுநாள் காலை, கடை திறந்ததும் முதல் காரியமாக ரகுராமனின் குழந்தைக்கான மருந்தைக் கணபதி பார்மஸியில் சென்று வாங்கிக் கொண்டான். பில் போட்ட பின், பணம் கொடுக்க முடியாததனால் ரகுராமன் விட்டுச் சென்ற மருந்துதானே அது? அதனால் அதை அடையாளம் சொல்லி வாங்கிக் கொள்ள அவனுக்கு அதிகச் சிரமம் ஏதும் ஏற்படவில்லை.

மருந்தை வாங்கிக் கொண்டு படிவாசற் பிள்ளையார் கோயில் வழியாகச் சென்றவன், விநாயகருக்கு விழுந்து கும்பிட்டு விட்டுத் தூய மனத்துடன், "பிள்ளையாரப்பா! அந்தக் குழந்தையை நீ காப்பாற்றித்தான் ஆக வேண்டுமப்பா!" என்று வேண்டிக் கொண்டான். அதிலே பரம பக்தனின் பிடிவாதம் தொனித்தது.

நேரே ரகுராமனின் வீட்டை அடைந்தான். குழந்தை கனல் குறைந்து சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட அவனுக்கு ஏற்பட்ட மன நிறைவுக்கு ஓர் எல்லையில்லை.

"இதோ கிடந்தது பர்ஸ். விலாசம் இருக்கவே கொண்டு வந்தேன்!" என்று சொல்லிப் பர்ஸோடு மருந்தையும் வைத்தான்.

அடுத்த கணம் அவன் அங்கே நிற்கவில்லை. வந்த சுவடு தெரியாமல் வெளியேறிவிட்டான்.

ரகுராமனுக்குப் பர்ஸ் வந்தது ஆச்சரியமாயில்லை. ஆனால் அதோடு மருந்தும் வந்தது தான் எப்படி என்று புரியவில்லை. யோசிக்க யோசிக்கப் புரியாத, பிரியாத சிக்கலாகி அது வியப்பை வளர்த்தது.

'ஆண்டவன் செயலை அறிந்தவர் யார்? ஒரு வேளை, இப்படி ஒரு மானிட உருவம் தரித்து ஆண்டவனே தான் வந்து போயிருப்பானோ? ஆண்டவன் தாயுமாகிப் பெண்ணொருத்திக்குப் பேறு பார்க்க வந்த இருந்தவனாயிற்றே! அப்படியே இதுவும் நிகழ்ந்திருந்தால்....? 'தெய்வம் மானுஷ ரூபேண.' இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது?' — இப்படி ஓர் எண்ணம் தோன்றி அவன் மனத்தை நிறைத்தது.

அவனது அந்த எண்ணத்தை ஆமோதிப்பது போல் மலைக்கோட்டை மணியும் மங்கலகரமாக ஒலித்தது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon